தென்மொழி

தனித்தமிழ் இலக்கியத் திங்களிதழ்

புரட்சி நாள்...!

பட்டினியால் ஒருபுறத்தே மக்கள்படும்
பாடறிந்தும் பதறுர் உள்ளம் :
சுட்டிறப்பார் எண்ணிக்கை வளர்வதல்லால்
நாட்டுவளம் வளர்தல் காணேம் ;
எட்டுணையும் உரிமையில்லை ; வாழ்க்கையில்
ஏழ்மையின்னும் ஒழிய வில்லை ;
கிட்டியதோ பெரும்புரட்சி இந்நாட்டில்
கிளர்ந்தெழுமோர் நல்ல நாளே !

மீனம் (பங்குனி)
இ. பி. ககூகூக.

தென்மொழி

கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை; எனவே தமிழர் தோளெழுந்தால்.
எஞ்சுவதில்லை புவியில் எவரும் எதிர்நின்றே!

சுவடி 4 | பங்குனி தி. பி. 1997 (1966 மார்ச்சு) | ஓலை 2

இன்னும் பத்தாண்டுகளில் இந்தியாவில் புரட்சி...!

கடந்த சில மாதங்களாக இவ்விந்திய நாட்டில் நடந்து வரும் பட்டினிப் பஞ்சப் போராட்டங்களையும், மொழிப் போராட்டங்களையும், சூறையாடல்களையும், தீ வைப்புகளையும் அவற்றை அடக்க அரசினர் கையாண்ட அதிகார வெறிச் செயல்களையும், வேட்டெஃகச் சூடுகளையும், அவற்றின் விளைவாக இறந்த மக்கள் தொகையினையும் எண்ணிப் பார்க்குங்கால், பேராயக் கட்சியினர் வாங்கிக்கொடுத்ததாகத் தருக்குடன் பேசப்பெற்று வரும் இத்தன்னுரிமை ஆட்சியைப் பேராயக் கட்சியினரே குழி தோண்டிப் புதைத்துவிட்டுத்தான் மறுவேலை பார்ப்பர் போலும் என்ற முடிவுக்குத்தான் வரவேண்டியிருக்கின்றது. கடந்த ஆண்டு தமிழகத்தில் காட்டிய பட்டாள வெறி, இவ்வாண்டு கேரளாவிலும், கல்கத்தாவிலும், பஞ்சாபிலும், மிசோ காட்டுப் பகுதிகளிலும், நாகாக் குன்றுகளிலும் பட்டினியாலும் தம்

பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரன்.
உறுப்பாசிரியர்: தங்கப்பா.
உரிமை, வெளியீடு: தாமரை, உலகமுதல்வி.
அச்சகம்: மித்திரா, கடலூர்–1.

ஆட்சி உரிமையாலும், அரசினரின் கொடுமைப்போக்காலும் கிளர்ந்தெழுந்த மக்களைச் சுட்டுப் பொசுக்கிக்கொண்டிருக்கின்றது. எந்த நாட்டு மக்களைக் காக்கவேண்டும் என்ற கவலையினால் நாட்டின் எல்லைகளில் உள்ள பகைவர்களை அழிப்பதற்கென, இங்குள்ள பெண்மணிகளின் மூக்கு, காது, கழுத்து இவற்றினின்று பறிக்கப்பெற்ற பொன்னைக்கொடுத்து, அயல் நாடுகளிலிருந்து வெடிமருந்துகளும் வேட்டெஃகங்களும் வாங்கப்பெற்றனவோ, அந்த நாட்டு மக்களையே ஆட்சியினர் இன்று சுட்டுப் பொசுக்கிக்கொண்டுள்ளனர். சுருங்கச் சொன்னால் இன்று இந்தியா தற்கொலை முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டு வருகின்றது. இஃது உள்நாட்டு வெளிநாட்டு அரசியல் பார்வையாளர்களின் உள்ளங்களில் ஒரு கேள்விக் குறியாகவும், வல்லரசுகளின் உள்ளங்களில் ஒரு மகிழ்ச்சிக் குறியாகவும், இந்நாட்டு அரசின் பெருந்தலைவர் மனங்களில் ஒரு கவலைக்குறியாகவும் வளர்ந்துகொண்டு வருகின்றது.

பதினெட்டாண்டுகளுக்குமுன் வெள்ளையன் நடத்திய ஆட்சித் தொல்லைகளைப் பொறுக்கமுடியாமலேயே தன்னுரிமைப் போராட்டம் நடத்தி வெற்றிபெற்றதாகக் கூறிக்கொண்டு அவ்வரலாற்றைச் சிவப்பு மையினால் எழுதிக்கொண்டிருக்கும் இந்நேரத்தில், இத்தகைய கலவரங்களும் கொன்று குவிப்புகளும் உரிமைபெற்ற உள்நாட்டு மக்களிடமிருந்தே எழக் காரணமென்ன? வெளிநாட்டான் பிடியிலிருந்து விடுவிக்கப் பெற்ற மக்களைத் தம் நாட்டு அரசினரே விலங்கிட்டுக் கொடுமைப்படுத்தும் இன்றியமையாமை என்ன வந்தது? உரிமை பெற்றதாக ஆண்டுக்கு ஆண்டு குடியரசு நாள் கொண்டாட்டங்களும், விடுதலை நாள் வேடிக்கைகளும் நடத்தப்பெற்றுவரும் அதே பொழுதில், மக்கள் கொஞ்சங் கொஞ்சமாகத் தமக்குக் கிடைத்த உரிமைகளை இழந்துகொண்டு வருவது ஏன்? என்றெல்லாம் நமக்கும், நம் நடவடிக்கைகளைக் கூர்ந்து நோக்கிக் கொண்டிருக்கும் பிறர்க்கும் கேட்கத்தோன்றுகின்றது இல்லையா? இந்த ஆவலும் வியப்பும் நிறைந்த வினாக்களுக்கு அவலமும் இரக்கமும் மிகுந்த விடைகளே நமக்குக் கிடைக்கின்றன. அவற்றின் விளைவு என்ன?

செல்வன் தலைக்கொழுப்பேறிய செல்வனாகவும், ஏழை தலைமூளை உருகி வயிறு காயும் ஏழையாகவும் மாறிவரும் இவ் வியப்பு மிகுந்த போக்கிற்குப் பெருங்காரணமாக உள்ள இப்

பேராயக் கட்சியினர் செய்துகொண்டு வரும் தவறுகளில் தலைமையானதும் அடிப்படையானதும் மக்களை மக்களாக மதித்து வராமைதான். அக்காரணத்தால்தான் அவர்தம் வாய்களும் வயிறுகளும் விலங்கிடப்பெறுகின்றன. இவற்றைப் பிற நாட்டார் எவரும் அறிந்துகொள்ளாதவாறு இங்குள்ள வானொலிப்பெட்டிகளும், செய்தித்தாள்களும் அலறிவருகின்றன. குறிப்பாகச் சொன்னால் வீட்டில் விழுந்த பிணத்தின் மேல் புதுத்துணிகளையும், பூக்களையும் போட்டு மூடிவிட்டு, வீட்டிற்கு வெளியில் இவ்வாட்சியினர் கொண்டாட்டமும் கொம்மாளமும் போட்டு வருகின்றனர். உள்ளே மக்கள் ஒரு வாய்ச் சோற்றுக்காக ஆலைப்பஞ்சாய் அலைகின்றனர்; செத்து மடிகின்றனர். எழுத்து, பேச்சு, நடை முதலிய உரிமைகளுக்காக விடாய் கொண்டுள்ளனர். பேராயக்கட்சியின் பதினெட்டு ஆண்டுக்கால ஆட்சியின் விளைவுகள் இவை.

உணவு மண்டிலங்களும், வரவு செலவுத் திட்டங்களும் பெரிது பெரிதாக விளம்பரப்படுத்தப் படுகின்றனவே தவிர, அவற்றால் ஒரு பருக்கைச்சோற்றுக்கும் வழியில்லாமல் மக்கள் திண்டாடுகின்றனர். கட்டிக்கொள்ள ஒருமுழக் கந்தையுமின்றி மக்கள் மானமிழந்து வருகின்றனர். அவர்களின் எண்ண ஆற்றலும், உரிமை வேட்கையும் சிதைக்கப்பெற்று மான உணர்வு மரத்துக்கொண்டு வருகின்றது. மொழிக்காகவும் வாழ்விற்காகவும் போரிட்டுச் சாகும் நிலையை மக்கள் எட்டிப் பிடித்துக்கொண்டுள்ளனர். எத்தனை எத்தனைத் தற்கொலைகள்! எத்தனை எத்தனைப் போராட்டங்கள்! குமுறல்கள்! சாவோலங்கள்! எல்லைச்சண்டையால் மாண்டொழிந்த மக்களின் எண்ணிக்கையைவிட, உள்நாட்டு உரிமைச்சண்டையால் உயிரிழக்கும் மக்களின் தொகை மிகுந்துவருகின்றது. மொத்தத்தில் வெற்றிப்பறையுடன் தொடங்கப்பெற்ற இப்பதினெட்டாண்டுக்காலக் குடியாட்சியின் பயன் சாப்பறையுடன் முடிவு பெறும் நாள் மிக அருகிக்கொண்டு வருகின்றது.

இங்குள்ள அமைச்சர்கள் தலைக்குத்தலை அதிகார வெறியர்களாகவும், அரசியல் தெரிந்த கற்றவர்களையும் மடையர்களாக எண்ணிக்கொண்டு ஆட்சி நாடகம் நடத்திவரும் கோமாளிகளாகவும் ஆகி வருகின்றனர். காவலர்கள் அவர் தம் கைகளில் சிக்கி வேட்டைக்காரர்களாக மாறிவருகின்றனர். மக்கள் இதைப்பற்றி எண்ணவோ, பேசவோ, எழுதவோ

இவற்றிற்கு ஒரு முடிவு காணவோ திறமற்றவர்களாகக் கூனிக் குறுகிக்குமைந்துகொண்டுள்ளனர். சட்டமன்றங்களும்,பாராளு மன்றங்களும் மல்லாட்டக் களங்களாக மாறி வருகின்றன. இவை இயற்றுகின்ற சட்டதிட்டங்களோ, அறமன்றங்களின் நடுவுநிலைகளைத் தகர்த்துத் தூள்தூளாக்குகின்றன.

அலுவலகங்களில் உள்ள தாள் கட்டுகளுக்கிடையில் மக்களின் வேண்டுதல்களும் கூக்குரல்களும் மூட்டைப்பூச்சி களைப்போல் நசுக்கப்படுகின்றன. வானளாவிய கட்டடங்களின் உட்புறங்களும், மக்களுக்கான ஒதுக்கிடங்களும் அரசினர் தம் கொட்டாரக்கூடங்களாகி வருகின்றன. ஓர் உருபா பெறும் பயனுக்காக ஒரு நூறு உருபாக்கள் செலவிடப்பெறுகின்றன. சிற்றூர்ப் புறங்களில் உள்ள ஊராட்சி மன்றங்களிலிருந்து பாராளுமன்றப் படிக்கட்டுகள் வரை, அரசினர் தம் ஊழல்கள் காறி உமிழப்படுகின்றன. கொள்ளையர்க்கும் கொலைஞர்க்கும் பாதுகாப்பிடமாக அரசியல் நடைமுறைகள் திரையிடப்பெறு கின்றன. ஊர்திகளும், உலாவல்களும் வீதிகளைச் சேருக்கி வருகின்றன. அப்பப்பா! இவற்றை எண்ணவும் நெஞ்சு நடுங்குகின்றது! எழுதவும் கை சோர்கின்றது!

இவ்வளவிற்கும் காரணங்கள் என்ன? பேராயக் கட்சியினர்தம் கட்டுப்பாடற்ற தந்நலப்போக்கே! சிறைக் கூடத்திற்குள் கொள்ளையனாக நுழைந்த ஒருவன், வெளியே வரும்பொழுது பேராயக்கட்சிக்காரனாக வருகின்றான். காவலர் களுக்குச் சாணிநிறச்சட்டைகள் பயன்படுவதைப்போல், பேரா யக்கட்சிக்காரர்களுக்குக் கைந்நூல் (கதர்) சட்டைகள் பயன் படுகின்றன. வெற்றிலைபாக்குக் கடைக்காரர்முதல் மாவட்டாட்சித்தலைவர்கள் வரை அக் கைந்நூல் சட்டைகளுக் கே அஞ்சி நடுங்குகின்றனர். இந்த நிலை நீடிக்குமா? இவற் றின்புயல் முடுக்கம் ஒடுங்கி ஒளி மழுங்கிப்போகும் நாள்தான் வருமா?

வடநாட்டினர் ஆட்சிக்கெடுபிடிகளாலும், நந்தாக் கும்ப லின் கொடுமையான சட்டதிட்டங்களாலும், நாடு அலைக் கழிக்கப்படுகின்றது. குமுகாயம், பொருளியல், அரசியல் ஆகிய தலையாய முத்துறைகளும் சீரழிகின்றன. வானொலியிலும், திரைப்படங்களிலும், பொழுதுபோக்கு மன்றங்களிலும் கலை என்ற பெயரால் கோமாளித்தனமும், அருவருப்பான இழி

செயல்களும் பெருகி வருகின்றன. காசு பணத்துக்காக மக்கள் எவ்வகையான தீச்செயல்களையும், இழிபாடுகளையும் உடனடியாகச் செய்ய முன்வருகின்றனர். கூர்ந்து பார்க்கையில் இந்நாட்டையாளும் அரசியல் வண்டி குடைசாய்ந்து ஆழ்ந்த பள்ளத்தாக்கில் உருண்டு கொண்டுள்ளது. அக்கால் நேரும் ஆரவார ஒலங்களே இவை. இவற்றிற்கும் ஒரு முடிவு நாள் உண்டு.

இந்த அவலநிலை இப்படியே நீடிக்குமானால், மக்கள் வயிறுகளிலும் நெஞ்சங்களிலும் கனன்றுகொண்டிருக்கும் துயரத் தீ இந்நாட்டைச் சுட்டெரிப்பது திண்ணம். அத் தீ இங்குள்ள அதிகார ஆணவக்காரர்களைப் பொசுக்குவதும் திண்ணம். இன்னும் பத்தாண்டிற்குள் இவ்விந்திய நாட்டில் உருசிய, பிரஞ்சு, சீன நாடுகளில் நடந்த புரட்சிபோல் ஒரு பெரிய தலை கீழ்ப் புரட்சி நடக்கப்போவது உறுதி! அதற்கான அடிப்படைகளை அரசினரே அதிகார நெய்யிட்டு வளர்த்து வருகின்றனர். நாட்டையும், மக்களையும் மதிக்கும் நேர்மையாளர்கள் இவற்றைப் பற்றி எண்ணி முடிவு செய்வார்களாக.

— பெருஞ்சித்திரன்.

பெரியார் செய்யும் பெரும் பிழை!

தம் நேரத்தை முழுவதும் அரசியலிலேயே செலவிட்ட பெரிய அரசியல் தலைவர்களும், இறுதியில் குமுகாயச் சீர் திருத்தக்காரர்களாக மாறி மக்களுக்குழைத்த செய்திகளைப் பிற நாட்டு வரலாறுகளில் படிக்கின்றோம். ஆனால் முழுக்க முழுக்க தம் நேரத்தைக் குமுகாயச் சீர்திருத்தத்திலேயே ஈடுபடுத்தி மக்களிடம் மனமாறுதலை உண்டாக்கிய ஒருவர், இறுதி நாட்களில் அரசியல் சேற்றில் கால்வைத்து அலசிக்கொண்டிருப்பதைத் தமிழ்நாட்டு வரலாற்றில்தான் இனிப் படிப்போம். அத்தகைய வரலாற்றுக்குக் காரணமான ஒருவர்தாம் ஈரோட்டு திரு. **இராமசாமிப் பெரியார்** அவர்கள்.

பெரியார் அவர்களின் கடந்தகால வாழ்க்கை வரலாறு பொன்னெழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டியது. அதே போல் இனி வருங்கால வரலாறோ கரிக்கொட்டையால் கிறுக்கப்பட வேண்டியதாகப் போய்விட்டது. அவர் ஒருவர் பிறந்திருக்கவில்லையானால் மக்கள் அறியாமைச் சேற்றில் இன்னும்

நெளிந்துகொண்டுதாம் இருப்பர் என்பதை எவரும் மறுத்தல் முடியாது. அவர் ஒருவரின் குரல் இத் தமிழகத் தெருக்களில் எதிரொலித்திருக்கவில்லையானல், இன்றுள்ள தமிழர்கள் தலைகளில் குடுமிகளும், நெற்றிகளில் சமயக்குறிகளும், வாய்களில் பாகவத இராமாயணப் பழங்கதைப் பேச்சுகளும்தாம் நீக்கமற நிறைந்திருக்கும். தமிழரின் கண்கள் மூடப்பட்டிருக்கும். தமிழரின் உள்ள உணர்வுகள் நசுக்கப்பட்டிருக்கும். தமிழ் புதைக்கப்பட்டிருக்கும். தமிழர்தம் அறநெறிச் செல்வமான திருக்குறள் அடுப்பெரிக்கப்பட்டிருக்கும். தமிழர் இல்லங்கள் திருநெறிப் பாடகர்களின் கூடங்களாக மாற்றப்பட்டிருக்கும். பார்ப்பனர் எல்லாரின் கைகளிலும் தமிழர்தம் நீண்டுவளர்ந்த குடுமிகள் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கும். இத்தகைய கொடுமையும் இழிவும் நிறைந்த போக்குகளையெல்லாம் தம் சொல்வன்மையாலும், ஓயாத உழைப்பாலும் மாற்றியமைத்த பெருஞ் செம்மலர் பெரியாரும் அவர்தம் அரும்பெரும் தொண்டர்களும்தாம் என்பதில் யாருக்கும் ஐயம் வேண்டியதில்லை.

ஆனல் அத்தகைய முழு ஆற்றல்படைத்த ஒரு தனிப் பெருந் தலைவர் இன்று போகின்ற போக்கு நம்மை ஒரு நூருண்டுகளுக்கு முன்னிருந்த தன்மானமற்ற நிலையினுக்கே மீண்டும் கொண்டுசெல்வதாக அமைந்துள்ளதெனின் அது வருந்துதற்குரிய ஓர் அவலநிலையே ஆகும். மக்களுக்குத் தன்மான உணர்வை எழுப்ப வரிந்துகட்டிக்கொண்டு நாட்டின் மூலைமுடுக்குகளிலெல்லாம் கூட்டம்போட்டு மணிக்கணக்காகப் பேசியும் கைகள் சிவக்க எழுதியும் வந்த பெரியார், இன்று பேராயக் கட்சியினரின் விளம்பர வண்டியாக இங்கும் அங்கும் இழுபட்டுக்கொண்டிருப்பதைப் பார்க்கும்பொழுது நம் நெஞ்சங்கள் பதறுகின்றன. கண்களில் நீர் மல்குகின்றது.

பேராயக் கட்சியில் உள்ள நல்லவர் ஓரிருவர்க்காக, குறிப்பாகக் காமராசர் ஒருவர்க்காக, அக்கட்சியில் உள்ள கள்ளர்களையும் குள்ளர்களையும் பாராட்டிப் பிதற்றிக்கொண்டிருக்கும் அவர்தம் போக்கால் நாட்டில் உள்ள கேடுகள் தலைவிரித்து ஆடத்தொடங்கியிருப்பதுடன், அவரால் செய்து முடிக்கப்படவேண்டிய சீர்திருத்தங்களும் மூலைகளில் போய்முடங்கிக் கிடக்கின்றன. காமராசர் ஒருவர்க்காகவே பேராயக்கட்சியை மக்கள் வலுப்படுத்தவேண்டும் என்று பெரியார் கேட்பாரானல், ஏன் பெரியார் ஒருவர்க்காகக் காமராசர் அக்கட்சியில் உள்ள

கீழ்மைகளையும் பாழ்மைகளையும் அகற்றிவிட்டு அதனைத் தூய்மை செய்யக்கூடாது. அவர் ஒருவேளை அவ்வாறு நினைத்துச் செயலாற்றினாலும், பேராயக்கட்சியினுள் இவர் போன்று எத்தனைக் காமராசுகள் வந்தாலும், சரி செய்யமுடியாத போலித்தனங்களும் காலித்தனங்களும் நிரம்பி வழிந்து கொண்டிருக்கின்றன என்பதைப் பெரியார் அறியாரா? காமராசரின் போக்குக்கு நேர் எதிர்ப் போக்கில் சென்று நாட்டையே குருதிக் களமாகவும் மூடக்குழியாகவும் செய்துகொண்டிருக்கும் பக்தவத்சலங்களும் நந்தாக்களும் உள்ள வரை, பெரியாரின் பேராயக் கட்சிக் கரிசனமும் பொய்மைப்பேச்சுகளும் கடலில் கரைக்கப் பட்ட பெருங்காயமே! இதைப் பெரியாரும் அறிவார். ஆனால் அவ்வாறு அறிந்திருந்தும், இவர் தாம் ஒருவரே நின்று செய்யக்கூடிய சில திருத்தவேலைகளைப்பற்றி நினைவும்கொள்ளாது, பேராயக்கட்சியினர்க்குத் தேர்தலில் ஒப்போலைகள் சேர்த்துக் கொடுக்க அவர்தம் முரசங்களுக்குத் தோலாகப் பாடுபட்டுக் கொண்டிருப்பது ஏன் என்றால், அதற்குப் பேராயக்கட்சியின் எதிர்க்கட்சியாகச் சட்டமன்றத்தில் அமர்ந்திருக்கும் தி. மு. கழகத்தின்மேல் கொண்டுள்ள கசப்புணர்வே காரணமாகும்.

தி. மு. கழகத்தின்மேல் பெரியார் கொண்டிருக்கும் கசப்புணர்வு அவர்தம் தனிப்பட்ட செல்வாக்கையும், அவர் இயக்கத்தின் கொள்கைப் போக்கையும் பொறுத்தது. அவற்றிற்காக இந்நாட்டு மக்களின் நலத்தையே அடகுவைப்பது பெரியார் போன்ற உலகச் சீர்திருத்தக்காரர்களுக்கு ஏற்றதன்று. அவர் மதிக்கும்படியான காமராசர் ஒருவர்க்காகத் தமிழ்நாட்டின் இழிநிலைகளையும் அடிமை நெரிசலையும் அவர் புறக்கணிப்பதும், அடியோடு மாற்றிப்பேசுவதும் அவர் புரட்சியுள்ளத்திற்கு வரலாற்றில் பேரிழுக்கையே தேடித்தருவதாகும். இனிக் காமராசரை இராசாசி எதிர்க்கின்ற காரணத்தால்தான், தாம் பேராயக்கட்சியைப் பேணும் நிலை வந்தது என்று பெரியார் காரணம் காட்டுவாரானால், அக்காரணமும் அவரின் செம்மாந்த போக்கிற்கும் தளராத நெஞ்சிற்கும் இழிவு தருவதாகும். இராசாசியினால் தமிழ் மக்களுக்குக் கேடு வருமென்று பெரியார் கருதுவாரானால் அந்தக் கேட்டைத் தாம் ஒருவரே முன்னின்று தடுக்க வல்ல பேராண்மையும் பேராற்றலும் படைத்த பெரியார், அவரைக் காரணங் காட்டிக் காமராசரை ஊக்குவிக்கும் முகத்தான் பேராயக்கட்சிப் போலிகளுக்கும் பெரும் பதுக்கல்காரர்க

ளுக்கும் காவல் நிற்பதே சரியென்பாரானல் அவர் எதிர்பார்த்த தீங்கைவிட இரட்டிப்பான தீங்கையே தமிழ் மக்களுக்குப் பிறங் கடைச்சொத்தாக வைத்துவிட்டுப் போகப்போகின்றார் என் பதை அவர் எண்ணிப்பார்க்க வேண்டும். பெரியார் இத்தகைய அறிவுரைக்கெல்லாம் செவிசாய்க்கமாட்டார் என்று நமக்குத் தெரியும். இருப்பினும் பெரியாரின் வரலாற்றைப் பெரியாரே எழுதிக்கொண்டிருக்கப் போவதில்லை என்பதையும் அவர் தெரிந்திருக்க வேண்டும். அவர் இறுதிநாட் செயல்கள் அவர் வரலாற்றில் படியப்போகும் கறையாகும் என்று நாம் அக்கறை யுடன் கருதுவதால்தான் இதனை இத்துணைக் காலங் கழித்தா வது கூற முன்வந்தோம்.

அவர் கருத்துப்படி நடக்கப்போகும் தேர்தலில் அவரின் நம்பிக்கைக்குரிய காமராசர் நிற்கும் தொகுதிக்குச்சென்று வேண்டுமானல் தம் ஓயாத பேச்சினல் ஒப்போலைகளைத் திரட் டட்டும். அந் நன்றிச்செயலை நாம் மதிக்கவும் செய்வோம். ஆனல் காமராசர் இயங்கிக்கொண்டுள்ள பேராயக்கட்சிக்குள் இருக்கின்ற நாட்டுப்பற்றற்ற, மக்கள் பற்றற்ற மாந்தப்பதர் களுக்காக இவர் போராடி ஒப்போலை பெறுவது, காசியையும் கங்கையையும் நினைத்துக்கொண்டு இங்குச் சாக்கடை நீரில் குளித்து மூழ்கும் ஊசிப்போன தமிழனைப் பாராட்டி ஊக்குவ தைப்போன்றதாகும். பெரியார் அவலை நினைத்துக்கொண்டு உரலை இடிக்கின்ற இத்தகைய முயற்சிகளில் இனி ஈடுபட வேண்டாவென வேண்டிக்கொள்ளுகின்றோம்.

அவர் செய்யும் பொதுப்பணிகள், தலையாய சீர்திருத்தங் கள் மலைபோல் குவிந்திருக்கின்றன. அவை எல்லாவற்றை யும் அவர்தாம் செய்து முடித்துவிட்டுப் போகவேண்டும் என்ற தன்னம்பிக்கையற்ற எண்ணம் இங்கு யார்க்கும் இல்லை. ஆனல் அவர் தொட்டு முடியாத பணிகள் எத்துணைப் பெரியவானலும் எத்தனை ஆனலும் அவற்றை முடித்துவைக்கும் ஆற்றலும் அறிவும் சான்றவர்களை அவர் ஏற்கனவே உருவாக்கி வைத் துள்ளார். ஆனல் அவர்தம் இறுதி மூச்சுவரை விடாமல் ஈடு பட்டுக்கொண்டிருந்த பணிகள் இவைதாம் என்னும் நிறைவுப் பேச்சு எதிர்காலத் தமிழர்களிடம் எழும்பும்படி அவர் இன் றைக்கு நடந்துகொண்டிருக்க வேண்டும். பெரியார் எந்தத் தமிழர்களுக்காகவும் தமிழுக்காகவும் வடநாட்டாரையும் இந்தி யையும் எதிர்த்துக்கொண்டிருந்தாரோ, எந்தத் தமிழர்க

ளுடைய நெஞ்சங்களிலெல்லாம் தன்மான ஒளியை ஏற்றி வைத்தாரோ, அந்தத் தமிழர்க்காகவும், தமிழுக்காகவும், தமிழ் நெஞ்சங்களுக்காகவும் மேலும் அவருடைய பணியை விரிவு படுத்தவேண்டும் என்று நாம் அன்புடன் வேண்டிக்கொள்ளு கின்றோம். இவையெல்லாவற்றையும் தாம் காமராசரையும் அவர் வழியில் நிற்கும் திருடர்களையும் ஊக்குவிப்பதன் வழிச் செய்துகொண்டிருப்பதாக அவர் கூறுவாரானால், அவர் ஒளி குன்றிய விழிகளுக்காகவும் வலிகுன்றிய நெஞ்சிற்காகவும் கூர் மழுங்கிய அறிவுக்காகவும் நாம் வருந்தவேண்டியதைத் தவிர வேறு வழியில்லை.

பெரியார் கரிநெய் கொண்டழித்த இந்தியை இப்பொழுது படித்துக்கொள்ளுவதில் தவறில்லை என்று அவரின் வாய் முழக்கமிடும் அளவிற்கு அவர் நெஞ்ச வலிமை குன்றிப் போய் விட்டமைக்காக நாம் வருந்துகின்றோம். பெரியார் தீயெடுத்துக் கொளுத்திய வடவர் நிலப்பகுதியின் வல்லாண்மை அதிகாரம் இன்று தமிழன் ஒவ்வொருவனையும் திக்குமுக்காடச் செய்யு மளவிற்கு உரம்பெற்றுள்ளதைக் கண்டுங் காணாததுபோல் இருக்கும் அவர் கண்களுக்காக நாம் துயருறுகின்றோம். பெரியார் முழக்கிய அரிமா முழக்கத்தால் நடுநடுங்கி அஞ்சிய பார்ப்பனர்கள் இன்று தமிழர்களை உள்ளெலும்புருக்கும் நோயாக உள்ளிருந்து அரித்து வருவதை நினைத்துப் பார்க்க மறுக்கும் அவர்தம் உரம் சாம்பிப்போன நெஞ்சிற்காக நாம் மிகவும் வருந்துகின்றோம். பக்தவத்சலங்களின் பெருந் துணை யால் காஞ்சி காமகோடிகள் கொட்டமடித்து உலாவரும் ஆரவாரங்களைக் கேட்டும் கேளாதிருக்கும் அவர்தம் செவிகளுக் காக நாம் இரங்குகின்றோம். பெரியார் இவையெல்லாம் இப்படி இப்படியே இருக்கட்டும் என்று விட்டுவிட்டாரா? அல்லது இனித் தம் தொண்டால் பயனில்லை என்று கருதிவிட்டாரா? அவர் அவ்வாறு தம் இயலாமையைக் கூறி அவலக்குரல் கொடுப்பாரானால், அவர் மேலும் தம்மை அலட்டிக்கொள்ளாம லிருப்பதே அவர் உள்ளத்திற்கும், உடலுக்கும், உறுதிக்கும், பெருந்தன்மைக்கும், புகழுக்கும் ஏற்றதென்று கூறிக்கொள்ள விரும்புகின்றோம்.

அவ்வாறு தாம் அமைந்திருப்பது தம் அகன்று விரிந்த கண்களுக்கும் அரசியல் குமுகாயப் பட்டறிவுக்கும் நன்றன்று என்று அவர் கருதி அரசியல் கவருட்டத்தில் தாமும் ஒரு

பகடைக்காயாக நின்று உருண்டுகொண்டிருக்கத்தான் விரும்பு வாரானுல், பொய்யும், புரட்டும், பூசலும், ஏசலும் நிறைந்த தேர்தல் தேரோட்டத்தில் எவரும் கலந்துகொண்டு எவருக்கும் ஒப்போலை போடவேண்டாவென்ருவது தம்மை மதிக்கும் மக்களைக் கேட்டுக்கொள்ளட்டும். ஆனுல் பேராயக் கட்சிக்கு மாருக விழும் ஒப்போலைகளைப் பேராயக்கட்சிப் பெட்டிகளிலேயே வாங்கிப்போடும் கங்காணியாக அவர் இருக்கவேண்டா என்று அவரை வேண்டிக்கொள்ளுகின்ருேம். பெரியார் செய்து வரும் இப் பெரும் பிழையை இம்மட்டோடு நிறுத்திக்கொள்ளட்டும் என்பதே நம் தலையாய வேண்டுகோளாகும். அவர் செய்வாரா ?

—பெருஞ்சித்திரன்.

பக்தவத்சலம் விட்ட புதுக்கரடி !

அண்மையில் சென்னை சட்டமன்றத்தில் முதலமைச்சர் திரு. பக்தவத்சலம் ஒரு புதுக்கரடியை அவிழ்த்துவிட்டிருக்கின்ருர். சமற்கிருதத்தில் பொறியியல் நுணுக்கங்கள் உள்ளன என்பதும், எனவே பொறியியல் படிக்கும் மாணவர்கள் அம்மொழியையும் கற்றுக்கொள்ளல் வேண்டுமென்று தமிழக அரசு ஏற்பாடு செய்துள்ளதென்பதுமே அவர் விட்ட புதுக் கரடி.

இத்தனை ஆண்டுகளாக அறியப்படாதிருந்த இந்தப் புதிய(!)கருத்து, இவருக்கு எவ்வாறு அறியவந்ததென்பதும், அதற்குக் காரணமாக இருந்த அறிவாசிரியர் (!) யார் என்பதுமே நமக்கு வியப்பை அளிக்கின்றன. “சமற்கிருதத்தை இந்திக்கு மாற்று மொழியாக இந்தியா முழுவதும் படிக்கச் செய்துவிடவேண்டும் ; முடிந்தால் இந்தியை விட இந்திய ஆட்சிமொழியாகச் சமற்கிருதத்தையே அரியணையில் ஏற்றி வைத்துவிடவேண்டும்; அதற்கான காரணங்களை ஒன்றன்பின் ஒன்ருக அவிழ்த்துவிட்டுக்கொண்டே இருக்கவேண்டு”மென்பதெல்லாம் முன்னுள் குடியரசுத் தலைவர் திரு. இராசேந்திர பிரசாது முதல் இந்நாட்டில் உள்ள கடைசிப் பார்ப்பனர் ஈருக உள்ள அனைவரின் உள்ளக் கிடக்கை என்பது நாம் முன்பே அறிந்துகொண்டுள்ள ஒரு பேருண்மை. இது பற்றித் தென்மொழி முன்பே எழுதியுள்ளது. இத்தகைய துணிவான முயற்சிகளில் ஒன்றே இக்கால் சமற்கிருதத்தில் உள்ள பொறியியல் நுணுக்கங்களுக்காக அம்மொழியைப் படித்துக்கொள்ள வேண்டும் என்பதும்.

பொதுவாகவே எப்பொழுதும் பக்தவத்சலம் திரு. இராசாசியின் முதலடியார். திரு. இராசாசி ஏதோ ஒரு வாய்ப்புக் காரணமாக இக்கால்உள்ள அமைச்சரவையைக் கைப்பற்றினால் கூட, அவரின் கால்களைப் பிடித்தாவது அவ்வமைச்சரவையில் தவறாமல் இடம் பெற்று விடுகின்ற ஓரிரண்டு அமைச்சர்களுக்குள் திரு. பக்தவத்சலம் தலைமையானவர். காற்று எந்தப் பக்கம் வீசுகின்றதோ அந்தப் பக்கத்து ஆட்களுடன் கைகோத்துக்கொண்டு பல்லிளிப்பதில் பக்தவத்சலம் மிகக் கெட்டிக்காரர். அதனால்தான் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக, அஃதாவது வெள்ளைக்காரன் காலத்திலிருந்தே அவர் எல்லா அமைச்சரவைகளிலும விடாப்பிடியாகப் பங்கேற்று வருகின்றார். அவரைப் பொறுத்தமட்டில் அவர் ஒரு சரியான ஆரிய அடிவருடி. இதற்கு அவரின் சில துணிவான நடவடிக்கைகளே சான்று. எனவே பக்தவத்சலத்தின் இதுபோன்ற கரடிகள் இனி ஒன்றன்பின் ஒன்றாக வெளிவரும் என்பதில் ஐயமில்லை. இது கிடக்க. இனி, திருவாளர் பக்தவத்சலம் விட்ட புதுக்கரடி எத்தகையது என்பதைப் பார்ப்போம்.

சமற்கிருதத்தில் பொறியியல் அறிவுக்கு உண்மையிலேயே ஏதேனும் வழியிருக்கின்றது என்றால், இக்கருத்தை ஏன் ஆக்சுபோர்டு பல்கலைக் கழகத்திலாவது, கொலம்பியா பல்கலைக் கழகத்திலாவது, மாசுக்கோ பல்கலைக் கழகத்திலாவது வெளியிட்டு அங்குள்ள பொறியியல் துறைப் பேரறிஞர்களிடம் முட்டிப் பார்த்திருக்கக்கூடாது? போயும் போயும் தமிழகப் பொறியியல் கல்லூரியில்தானா இதற்கு இடம் கிடைத்தது. இல்லை, தமிழகப் பொறியியல் மாணவர்கள், மேனாட்டுப் பொறியியல் வல்லுநர்கள் கட்டும் கட்டிடங்களைவிட மேம்பாடான கட்டிடங்களைக் கட்டிவிடவேண்டும் என்ற எண்ணத்துடன், சமற்கிருதத்தில் மிகக் கமுக்க (இரகசிய)மாகச் சொல்லப்பட்ட இந்தத் தெய்வ உண்மை (!) இங்குமட்டுமே வெளிப்படுத்தப் பெற்றுச் செயலுக்கு வரவிருக்கின்றதா?

சமற்கிருதத்தில் உள்ள பொறியியல் நுணுக்கம் இதுவரை எவருக்கும் புலப்படாததா? எந்நாட்டு அறிஞர்களின் மூளையிலும் தோன்றாததா? அப்படி அதில் உள்ள நுணுக்கங்கள் எவை? அவற்றையன்றோ முதலில் மக்களுக்கும், அறிஞர்களுக்கும் வெளிப்படுத்தி, உண்மை என்று நாட்டல்வேண்டும். அப்படி உண்மை என்று பட்டாலும் அக்கருத்தை அறிந்து

கொள்ள, அம்மொழியையே கற்றுத்தான் ஆகல் வேண்டுமோ? அம்மொழியிலன்றி வேறு எம்மொழியிலும் வெளிப்படுத்தக் கூடாத மறைவான கருத்துகளா அவை? இப்படி ஒவ்வொரு கருத்துக்காக ஒவ்வொரு மொழியையும் பயின்றுகொள்ள வேண்டுமென்றால் தமிழன் முதன் முதலில் உருசிய மொழியையும் பழைய கிரேக்க மொழியையுமல்லவா ஆங்கிலத்துடன் கட்டாயமாகக் கற்றுக்கொள்ளல் வேண்டும். இவைபற்றியெல்லாம் இங்குக் கேட்க ஆட்களிலர் என்பதாலன்றோ பக்தவத்சலமும் அவரின் மூல தேவர்களும் பன்னூலைக் கருத்துகளையெல்லாம் இக்கால் கசக்கிப் பிழிந்து காட்டி வருகின்றனர்?

"சமற்கிருதமே தேவமொழி. அதன்வழியே செய்யும் தெய்வ வழிபாடுகளைத்தாம் தெய்வங்கள் ஏற்றுக்கொள்ளும். மற்ற மொழிகளை அவை ஏற்கா" என்ற பழைய கரடிகளைத் தமிழர் விரட்டிய பின்னர், திரு. பக்தவத்சலம் வழி ஆரியப் பார்ப்பனர் புதுக் கரடிகளை விடத்தொடங்கியுள்ளனர்.

பொறியியல் உண்மை சமற்கிருதத்தில் மட்டுமதானா உள்ளது. உலகில் சிறப்பும், வளமும் பொருந்திச் சாகா மொழிகளாக உள்ள எல்லா மொழிகளிலும் பொறியியல் உண்மைகள் மட்டுமல்ல, மாந்தர்க்குத் தேவையான எல்லா வாழ்வியல் உண்மைகளும் உள்ளன. என்றும் இளமையும் வளமையும் மிக்கத் தமிழ்மொழியிலும், இதுபோன்ற பொறியியல் கருத்துகளும், மருத்துவக் கருத்துகளும், விலங்கியல் கருத்துகளும், வேதியல், இயல்பியல் உண்மைகளும் ஏராளம். திரு. பக்தவத்சலமும் அவரின் மூலதேவர்களும் விரும்பினால், நமக்குத் துணை நின்றால், அவற்றை வெளியிட்டுக் காட்டுவோம். அதன் காரணமாகத் தமிழ் மொழியை எல்லா நாட்டவரும் கட்டாயம் படிக்கத்தான் வேண்டும் என்று எவரும் நேரடியான, அல்லது மறைமுகமான ஏற்பாடுகளைச் செய்யவில்லையே! உண்மைகளை இவ்வுலகத்தில் எவரும் மறைத்துவிடவும் முடியாது. பொய்மைகளை விலைபேசியே காலத்தை வென்றுவிடவும் முடியாது. தமிழர்கள் இனி இத்தகைய தில்லுமல்லுகளுக்கு ஏமாந்து போக மாட்டார்கள். திரு. பக்தவத்சலத்தின் தனிப்பட்ட விருப்பத்தைத் தமிழர்களின் மூளைகளில் திணித்துவிடுகின்ற இப் புல்லிய முயற்சிக்கு அறிஞர் உடனே முற்றுப்புள்ளியிடுவார்களாக.

—பெருஞ்சித்திரன்.

தனி அச்சக அமைப்புப் பணிகளால் இவ்விதழ் சுணங்கி வெளிவருகிறது. அன்பர்கள் பொறுத்துக் கொள்வார்களாக.

சிறையகம் புக்க காதை

துரை. மாணிக்கம்

"அறைந்திரை வீழ்த்திய அரிமா ஏற்றின்
பிறழாப் பெருநடை பீடுறப் பயின்று,
மதிமுகம் உவப்ப மலர்விழி ஒளிர,
எதிர்வரும் ஒள்ளியோய் இருமென இருத்தி;
'அலைகோற் கொடியரும், அழல்மடுத் தாரும்,
கொலைகொள் நினைவின் நெஞ்சழிந் தாரும்,
இரந்துண் வாழ்க்கை இழிவெனக் கொண்டு
கரந்தூண் அயிலுங் கவடறிந் தாரும்,
கனிவிலா நெஞ்சின் கங்குற் கள்வரும்
முனிவுறு போக்கின் முறை பிறழ்ந் தாரும்,
அடுநருக் காய்ச்சி அகப்பட் டாரும்,
விடுதல் இலாதது விழைந்துண் டாரும்,
மலிவுறு கவடரும், மங்கையர் மானம்
வலிவுறப் பற்றி வாங்கி யோரும்
கறையகம் போகக் காவற் படூஉம்
சிறையகம் புக்கினிர் செய்ததும் என்'னெனக்
கேட்பீ ராயின் கிளத்துதற் கேண்மோ:
நாட்பட நாட்பட நல்லவை நாடும்
சால்புடை நெஞ்சின் சான்றோர் தாமும்
நூல்பயில் அறத்தின் நோற்றோர் தாமும்
கடைபெறக் கிடக்கும் கயவர் ஆணையின்
அடைபெறக் கிடப்பினும் அதுவியப் பன்றே!

மூடரும் முரடரும் முனைந்தர சாளும்
நாடுநா டின்றி நலிந்த பின்றை
புரையிலார் தமக்குப் புக்கிலும் உண்டோ?
வரைவிலா தோங்கின வன்மையும் புன்மையும்!
சிறையகத் திருப்போர் சீரகத் துள்ளார்!
இறையகத் திருப்போர் எஃககத் துள்ளார்!
காலச் சுழலினும் கயமை வாழ்வினும்
சாலப் புரைவோர் சால்புடைப் பெரியோர்!
புல்லுரை பகர்வோர் புலமைச் செவ்வியர்!
நல்லுரை சொல்வோர் நாயினுங் கீழோர்!

பொய்யாம் வினைகளை மெய்யே என்பர்;
செய்யாப் பணிக்குச் சீர்சிறப் பென்பார்!
கேடுகள் புரிவோர் கேண்மைக் குரியோர்;
பீடுறச் செய்வோர் பிடிபடத் தக்கவர்!
பூரியர் சிறையுட் புகுதலோ அக்கால்!
சீரியர் இக்கால் சிறைவாழ் குநரே!
இந்நாள் உண்மை இயம்பலே குற்றம்!
மன்னுள் அரசின் மந்திரக் கூற்றிது!
வாய்மொழிக் குரிமை வழங்கினோம் என்பார்;
தாய்மொழி பேணுதல் தவறெனக் கடிவார்
நாட்டுப் பற்று நாட்டுக என்பார்;
நாட்டுப் பற்றால் நல்லவை நவின்றால்,
கேட்டுக் கொள்ளார்; கேடவை என்றே
வேட்டுக் குழற்கே விருந்துநீ என்பார்!
அறமெனக் கூறின் அதன்வரு மானத்
திறமென் னென்று சாற்றக் கேட்பார்.
பொருளெனப் புகல்வது பொன்னே என்பார்;
மருள்தவிர் இன்பம் மனையோள் செய்யும்
நெய்யொழு கடிசில் முப்புடை முங்கி
மெய்பெறக் கிடந்து துயில்வதே என்பார்!
வீடென விளம்பின் விசும்பு தடவிய
மாடருங் கட்டிட மலையே என்பார்!
இறைப்பற் றென்பதோ எருவெண் ணீற்றை
உறைப்பப் பூசி உருள்மணி மாலை
பொன்னில் தோய்த்துப் பூண்ட மேனியாப்
பின்னிய காலொடு பிரான்பிரான் என்றலும்,
பொய்முதல் வைத்துப் புனைசுருட் டீதியப்
பைமுதல் கொண்டு பன்னூ றாயிரங்
கோவிலில் விழுந்து கும்பிட் டெழுந்தே
ஆவின் பால்நெய் அடிசில் உண்ணலும்,
மிச்சிலை இரவோர் மிசைந்திடத் தரலும்
பச்சிலை நீறு பெறலுமே என்பார்!
மெய்ப்பொருள் தேரார்; மேனி வளர்ப்பதும்
பொய்ப்பொருள் நாட்டமும் போலிப் புகழ்ச்சியும்
அன்னவர் நோக்கம்; அந்நோக் கிற்கே
பன்னருந் தடைகளைப் பண்ணுவோர் தீயரே!

அரசியல் என்பதோ ஆயிரம் பொய்களை
உரைத்துப் பெற்ற ஒப்போ லைகளால்
ஆளுநர் மன்றப் பதவி அடைவதும்,
நாளோர் ஊராய், நடைக்கொரு கூட்டமாய்ச்
சென்று மக்களின் சிறுமைக் கிரங்கலாய்
நன்றே புளுகலும், நம்பச் செய்தலும்,
இலக்கக் கணக்கில் பொருள்பல ஈட்டலும்,
துலக்கமில் கருத்துப் பற்பல கூறலும்
என்பதே! நம்மவர் இன்றைய கருத்து!
தின்பதும் உறங்கலும் தவிரவே றறியார்!

இத்தகை வாழ்வுக் கெவர்தடை செய்யினும்
அத்தகை யோரைச் சிறையில் அடைப்பதும்
துயர்பல கொடுப்பதும் தூக்கில் இடுவதும்
உயர்நிலை பெற்றவர் ஒருபெருங் கொள்கை!

மக்களுக் குண்மை சாற்றிட மறுப்பார்!
ஒக்கவர் நலத்திற் குழைப்பதா நடிப்பார்!
பொல்லார் எனினும் பொருள்பல இறைத்து
நல்லார் போல நடிப்பரே மேலோர்!
அன்னவர் நடிப்பிர் கொத்ததா ஆடுவர்
இன்னர் எனினும், இனியவர் அவர்க்கே!
ஊர்திகள் பெறலாம்; பொருள்மேல் உறங்கலாம்;
பார்புகழ் தரும்படி பலபடச் செய்தித்
தாள்களில் எழுதிடச் செய்து தருக்கலாம்!
சால்புறக் கல்லால் படிவம் சமைக்கலாம்!
ஓராயிர மெனில் ஊராள் மன்றம்;
ஈராயிர மெனில் நகராள் மன்றம்;
சற்றே கூடினல் சட்ட மன்றம்;
பத்தா யிரமெனில் பாராள் மன்றம்;
ஐம்பதா யிரமெனில் அமைச்சரின் பதவி;
நைந்த அரசியல் நாடகம் இதுவே!
உய்யுமா நாடு? பொதுமை ஓங்குமா?
மெய்பிழைத் திடுமா? மேன்மை பெறுவமா?
காய்களை உருட்டுங் கவருட் டம்போல்
ஏய்த்துப் பிழைப்பதே அரசியல் என்னின்
மக்களின் விலங்கே மாண்பு பெற்றதாம்!
ஒக்கநா கரிகம் உயரச் சிறந்ததாம்!

இப்படிக் கேட்டால் — எழுதினால் பிழையெனில்
எப்படி இதனை மக்கட் குரைப்பது ?
செப்படிக் கூத்தரின் தில்லு மல்லுகள்,
முப்படிப் பொய்கள் முரண்படு பேச்சுகள்
யாவும் பொறுத்திட மக்கள் யாவரும்
மாவும் புட்களும் என்றா மதித்தனர் ?
உணர்வுடை நெஞ்சம் ஒன்றுபோ தாதா ?
இனநலங் கருதுவார் இறந்தா போயினர் ?
மக்கள் அரசெனில் கருத்தை மறைக்குமா ?
சிக்கல் தெளிவுறச் செப்பலும் பிழையோ ?
ஒப்பிலாக் கருத்தை ஒருவன் உரைத்தால்
தப்பெனக் காட்டுதல் அன்றோ தக்கது ?
ஏற்ற கருத்தெனில் மக்களேற் கட்டும் !
மாற்றம் கண்டிடில் மறுத்துரை தரட்டும் !
கருத்தடை செய்யுங் கணக்கீட் டாளர்
கருத்தையுந் தடைசெயக் கருதுதல் தக்கதோ ?
துலக்கிடும் கருத்தினால் மக்களைத் தூண்டினால்
விலக்குவார் அதனை விளக்கிக் காட்டி
எழுந்தோர் தமக்கே இணக்கம் கூறி
அழுந்த அமர்த்திடல் அன்றோ நல்லறம் !
இத்திற மற்றார் எடுபிடி என்றே
கத்தியைத் தூக்கிக் கழுத்தைத் துணிப்பதால்
மக்கள் உணர்வை மாய்க்க வியலுமா ?
தக்கன என்றும் தழைப்பதே இயற்கை !

இந்திய நாட்டை இணைத்திட வேண்டி
இந்தியைத் திணித்தல் அறமிலை என்று
கூறுதல் பிழையோ ? கூற்றினை அடக்கிடச்
சீறுதல் மட்டும் செய்தகு செயலோ ?
பன்மொழி வழங்கும் பாரத நாடு
நன்மொழி நவின்று நல்லன செய்யும்
உயர்ந்தோர் என்பரால் ஒற்றுமை பெறாமல்
நயமிலாச் சிறுமொழி ஒன்றினால் மட்டும்
ஒற்றுமை பெறுமெனில் உயர்ந்தோர்க் கிழிவே !
பெற்ற உரிமை இந்தியால் பிறந்ததா ?
இந்தியால் ஒற்றுமை இயலும் என்றால்
இந்தியை மறுப்பவர் இருந்திடு வாரா ?

இப்படிக் கேட்பதே எங்ஙன் பிழைபடும் ?
ஒப்பிலாக் கருத்தை உணர்த்துதல் எப்படி ?
அரசியல் செய்வார் அனைவரும் ஒப்பும்
முரணிலாக் கருத்தை முழுவதும் ஆய்ந்து
நாடுதல் அன்றோ நல்லறம் ! அதனால்
கேடுறும் ஆங்கொரு கூட்டம் என்னில்
மற்றவர் கருத்தை மாற்றி வேறோர்
உற்ற செயலுக் குழைத்தலே முறைமை !
எக்கருத் தினையும் எதிர்ப்பவர் உளரெனில்
தக்க படிக்கவர் தரும்புது மறுப்பை
ஒக்க ஆய்தல் அன்றோ உயர்வு !
செக்கு மாடுபோல் சிறந்ததா ஒன்றையே
அழுத்திப் பிடிப்பதால் அதன்வலி மிகுமா ?
விழுப்ப மிலாதவர் வினையது வாகலாம் !
இந்தியால் தமிழ் கெடும் என்றுரை செய்தால்
எந்த வகைகெடும் ? எவரதைச் சொன்னார் ?
சொன்னவர் மொழித்திறம், கல்விச் சிறப்போ
டன்னவர் கொண்ட அரசியல் அறிவு,
நாட்டுப் பற்றென நால்வகை யாக
கேட்டறிந் ததன்பின் கிளத்திய உரைக்கு
மாற்றுரை அன்னவர் மனங்கொள உரைத்தே
ஆற்றுதல் அன்றோ அரசியல் திறமை !
இவ்வகை இன்றி "ஆஆ ஊஊ
எவ்வகை அவரென் கருத்தை எதிர்க்கலாம் ?
ஆச்சா போச்சா ? ஆரவர் தண்டலர்
ஓச்சுக சட்டம் உமததி கார"மென்
றார்ப்புரை செய்தே, அரைகுறை ஆய்ந்து,
தீர்ப்பு வழங்கித் திடுமெனக் கடுஞ்சிறை
தள்ளி அடைத்துத் தொடையைத் தட்டலால்
உள்ள கருத்ததன் உயர்வை இழக்குமா ?
இல்லை அதுதான் இன்றோடு சாகுமா ?
தொல்லை தருதலால் நெஞ்சுரம் தொலையுமா ?
அரசநாற் காலியில் அமர்ந்துளார் முன்னர்
முரசறைந் திதனை முழக்குவேன் கேளீர் !

தமிழக நிலத்தில் இந்தியைத் தூவுதல்
உமிவிதைத் துழைப்பதை ஒத்திடும் என்பேன் !

அரங்கிலா நும்மின் அரசியல் நாடகம்
குரங்கு கை மாலையாக் குலைவதோ உண்மை!
ஒற்றுமை ஒற்றுமை என்றே உழைத்துக்
குற்றுமி ஊதிக் கொதியுலை யேற்றி
வெற்றிலை விரித்து விருந்திடல் போல
உற்ற உணர்வையும் ஒழித்திடல் உண்மை!
நெடும்பயன் கருதா நெறியிலா தீரே!
கடுஞ்சிறை யிடினும் கழுத்தைச் சீவினும்
உற்ற கருத்தின் உண்மை மாறுமா?
பெற்ற தாய்மேல், பெருந்தமிழ் மொழிமேல்
ஆணையிட் டிதனை அறைகுவேன் கேளீர்!
கோணை மொழியினார் கொள்கைகள் நில்லா!
மொழியெனப் படுவது உணர்வினால் முளைப்பது!
மொழியெனப் படுவது மாந்தரின் முனைப்பு!
மொழியெனப் படுவது கல்விக் கடிப்படை!
மொழியெனப் படுவது பண்பொளிர் விளக்கம்!
மொழியெனப் படுவது உள்ளுயிர் முழக்கம்!
மொழியெனப் படுவது இனநல முயக்கம்!

அத்தகு சிறந்த ஆயிர மொழிகளுள்
செத்தறி யாத சீரிள மைத்திறம்,
இலக்கணச் சீர்மை; இலக்கியக் கொழுவளம்,
துலக்கரு மெய்ம்மை, துள்ளும் எழில்நலம்,
உரைப்பதற் கினிமை, உள்ளுணர் வுக்கொளி,
வரையறு சொற்கள், வான்சீர்ப் பெரும்புகழ்
முற்றுங் கொண்டது முத்தமிழ் மொழியே!
கற்றிடக் கற்றிட உளங்கனி விப்பதும்,
மெய்ம்மை கொளுத்தி மேலுக் குய்ப்பதும்,
செய்வினைத் தூய்மை, சீர்மை, ஒழுக்கம்,
உயிர்களுக் கூட்டி உறுதுணை நிற்பதும்,
மயர்வறு வாழ்வை மாந்தர்க் களிப்பதும்,
செந்தமிழ் செய்பயன்! பிறமொழி தாமும்
எந்தமிழ் மொழிபோல் இயற்கையே எனினும்
பூத்துக் காய்த்துப் புடைநலங் கனிந்த
மாத்தமிழ் மொழிபோல் மனவொளி கொளுத்தும்
ஆற்றலும் முதுமையும் அற்றன வென்பேன்;
மாற்றுரை கூறின் மறுப்புரை தருவேன்;

ஒலித்திறம் வரித்திறம் ஒத்த பொருட்டிறம்
வலித்திறம் மெலித்திறம் வாய்ந்த மொழித்திறம்
மொழிபயில் இலக்கியம் முகிழ்த்த இலக்கணம்
ஒழுகு மெய்யுணர் வூற்றொடு பல்திறம்
ஆயிவை தமிழில் ஆழ்ந்து கிடப்பதை
ஏய முறையினால் இயம்புநூல் அறிமின்!
இற்றைக் கியல்வன இனிமேல் எழுவன
முற்றும் செந்தமிழ் மொழிக்குள் அடக்கம்!
வாயுரை யன்று; வாய்மை உரையிது!
தாய்மொழி வெறியால் தருக்குரை அன்று!
தகைநலம் இன்றித் தாயெனும் உரிமையால்
மிகைநலங் கூறலை மேன்மையர் செய்யார்!

அத்தகு அடிப்படை ஆர்வ முதிர்ச்சியால்
முத்தமிழ் மொழியின் முதுநலம் முழக்கியும்
எந்தமிழ் நாட்டில் இந்தி நுழைவதை
வெந்த உளத்தொடும் உரையொடும் விலக்கிட
எண்ணரும் வகையால் எடுத்து விளக்கியும்
பண்ணலங் கூட்டிப் பாட்டிலும் எழுத்திலும்
எழுதிக் காட்டினேன்! எந்தமிழ்த் தோழரீர்
பழுதென அவ்வுரை அவர்க்குப் பட்டதால்
உள்ளமும் உடலும் ஊறுற் றனவென
கள்ளமில் என்னைக் கடுஞ்சிறை தள்ளினர்!

என்னைக் கடுஞ்சிறை இட்டதால் என்னுளம்
முன்னினும் மூளுமோ? முங்கி யொழியுமோ?

சீர்த்துப் பாய்ந்திடும் சிறுத்தையின் கூருகிர்
ஆர்த்த நெடும்புல் அசைவில் வழுக்குமோ?

மதர்த்தெழு களிற்றின் மலையுடல் தூண்கால்
பதர்க்குவை கண்டு பதுங்கி யொடுங்குமோ?

பொங்கு பேரலைப் போக்கினை வீழ்சிறு
தெங்கின் குரம்பை தேக்கி நிறுத்துமோ?

தீக்குழம் புருக்கித் தெறிக்கும் எரிமலைப்
பாக்குழம் பிணையொரு பழம்பாய் தடுக்குமோ?

எழுந்த வல்லரி ஏற்றின் உறுமலைப்
பழம்பறை கொட்டொலி பரக்கச் சிதர்க்குமோ ?

உணர்வில் உயிரில் உடலின் நரம்பினில்
புணர்ந்த செந்தமிழ் பூண்ட கூத்தினை
அரசக் கோலெடுத் தாடும் குரங்கதன்
உரசக் கால்நடம் ஊன்றி நிறுத்துமோ ?

என்றுரை முழக்கி எழுந்து செந்தமிழ்
வென்றர சாளும் நாளும் விரைந்ததே !
ஆகலின் அன்பரீர் அந்நாள் நோக்கி
ஏகுக நம்முயிர்! ஏகுக நம்முடல் ;
அந்நாள் சிறைக்கத வகலத் திறக்கும் ;
இந்நாள் தமிழ்வித் தூன்றுக" என்றேன் !
சிறையகப் பட்டோர் சிறுமை மறந்தே
கரையகப் பட்ட கலம்போல் மகிழ்ந்து
வாழ்த்தினர் என்றன் வரவை
காழ்த்தது மேலுமென் கவினுறு நெஞ்சே !

தென்மொழி, கடலூர்-1.

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய விதழ்.

ஒவ்வொரு தமிழ்த் திங்களும் முதல் நாளன்று வெளிவரும்

	உள்நாடு	கொழும்பு	வெளிநாடு
தனி இதழ்	50 காசு	60 காசு	75 காசு
ஆண்டுக் கட்டணம்	6 உருபா	7-25 உருபா	9 உருபா

அரையாண்டுக் கட்டணம் இல்லை.

விளம்பரம்

அட்டை நான்காம்பக்கம்	(இரு வண்ணம்)	100 உருபா
,, ,,	(ஒரு வண்ணம்)	75 உருபா
உள்ளே முழுப்பக்கம்		50 உருபா
,, அரைப்பக்கம்		25 உருபா

தொடர்ந்த விளம்பரங்கட்கு எழுதுங்கள்.

ஓரிதழுக்கு ஓர் உருபா முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க.

“குற்றியலுகரம் உயிரீறே”

மொழிப்பேரறிஞர் ஞா. தேவநேயப்பாவாணர், எம். ஏ.

எ. “இடமும் பற்றுக் கோடும் காரணமாகவே ஒரு மாத்திரை அளவுள்ள முற்றுகரம் குறுகி விகாரப்பட்டு அரை மாத்திரை யாயிற்று என்று சாதிப்பாரும் பலருளர். அவர் கூறும் காரணம் உண்மையாயின், இரண்டு மாத்திரையளவுள்ள ஐகாரமும் ஔகாரமும், மொழியகத்து வேறு எழுத்துக்களின் சார்பால் ஒன்றரை மாத்திரையாகவும் ஒரு மாத்திரையாகவும் குறுகி ஒலிக்கும் போது ஐகாரக் குறுக்கம் எனவும் ஔகாரக் குறுக்கம் எனவும், அரை அளவுள்ள மகரம் மொழியகத்து வேறு எழுத்துக்களின் சார்பால் கால் மாத்திரையாகக் குறைந்து ஒலிக்கும் போது மகரக் குறுக்கம், எனவும் பெயர் தந்த தொல்லாசிரியர் இச்சார்பெழுத்துக்கும் உகரக் குறுக்கம் என்றன்றோ பெயர் தந்திருக்க வேண்டும். அவ்வாறு அவர் பெயர் கூறக் காணோமே!”

ஐகார ஔகாரங்கள் முதன் முதலாகத் தமிழ் நெடுங்கணக்குத் தோன்றியபோதே பிறவுயிர்களோடு தோன்றிய தனியுயிர்களல்ல; சற்றுப் பிந்தியமைந்த புணரொலிகள் (Diphthongs).

“அகர இகரம் ஐகார மாகும்.” (54)
“அகர உகரம் ஔகார மாகும்.” (55)
“அகரத் திம்பர் யகரப் புள்ளியும்
ஐஎன் நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்.” (56)
“அகரத் திம்பர் வகரப் புள்ளியும்
ஔஎன் நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்.”

என்னும் நூற்பாக்களே இதை வலியுறுத்தும்.

“அகரத் திம்பர் யகரப்புள்ளியும்...தோன்றும்.”
“அகரத் திம்பர் வகரப்புள்ளியும்...தோன்றும்.”

என்னும் நூற்பாக்கட்கிசையச் சில சொற்களும் தோன்றியுள்ளன.

வள் = கூர்மை, வள்—(வய்)—வை = கூர்மை.

அள் = செறிவு, வன்மை, பெருமை (மிகுதி).

அள்—(அய்)—ஐ = பெருமை, பெரியோன், தலைவன், தந்தை, ஆசிரியன், அரசன்.

பொள்-பொய்-(பய்)—பை = துளையுள்ளது, குழிவானது உள்ளீடற்றது.

(பள்-(பய்)-பயம்பு = பள்ளம், குழி.)
அம்மை—அவ்வை = தாய், பாட்டி,
ஒ. நோ: செம்மை—செவ்வை.
அவ்வை—ஔவை.

வாவல் = சிறகால் வாவிச் செல்வது. வாவுதல் = தாவுதல். வாவல்—வவ்வால்—வௌவால். பெரு வௌவால் வாவிப் பறப்பதையே எங்கும் காண்க.

முதற்காலத்தில் தோன்றிய தனியொலி நெடில்கட்குக் காரச்சாரியை கொடுக்கப்பட்டது. பிற்காலத்தில் தோன்றிய புணரொலி நெடில்கட்கோ அதனின்றும் வேறான 'கான்' சாரியை கொடுக்கப்பெற்றது. புணரொலி நெடில்களையும் ஐகாரம் ஔகாரம் எனக் கூறுவது, வடமொழி வழக்கைப் பின்பற்றிக் குறில்களையும், அகாரம் இகாரம் எனக் காரச் சாரியை கொடுத்துக் கூறும் ஒருசார் தவற்று வழக்காகும்.

முந்தித் தோன்றிய தனியொலி நெடில்கட்கும், பிந்தித் தோன்றிய புணரொலி நெடில்கட்கும் வெவ்வேறு சொல்லாற் சாரியை யமைந்தது போன்றே, முன்னூலாசிரியர் கண்ட சார்பெழுத்துகட்கும் பின்னூலாசிரியர் கூறிய எழுத்துக் குறுக்கங்கட்கும் வெவ்வேறு சொல்லாற் பெயரமைந்தன என அறிக.

மேலும், குற்றியலுகரம் போல் ஐகார ஔகாரக் குறுக்கங்கள் புணர்ச்சி வேற்றுமைப் படாமையின், சார்பெழுத்துத் தன்மையைப் பெற்றனவாகா. ஆய்தம் என்பது மெல்லிய ககரமான ஒரு நுண்ணொலி. ஆய்தம் = நுணுக்கம்.

" ஒய்தல் ஆய்தல் நிழத்தல் சாஅய்
ஆவயின் நான்கும் உள்ளதன் நுணுக்கம்."

என்று தொல்காப்பியங் கூறுதல் காண்க. (உரி. 32)

சார்பெழுத்துக்களென்று தொல்காப்பியங் கூறும் மூன்றனுள், இரண்டு உயிரெழுத்துகளும் ஒன்று மெய்யெழுத்துமாகும். உயிரெழுத்துக்கள் அளபிற் குன்றியது மட்டுமின்றி, ஒலியிலும் வேறுபட்டவை. மெய்யெழுத்தான ஆய்தம் ஒலியில் மட்டும் வேறுபட்டது; அளபிற் குன்றியதன்று. அது ககரத்திற் கினமானதென்பது, அஃகேனம் என்னும் பெயரிலேயே அறியப்படும். அஃது ஏனச்சாரியை பெறும் போது வேறெம் மெய்யோடும் புணராமை காண்க.

குற்றியலுகர குற்றியலிகரங்கள்; முற்றிய லுகர முற்றிய லிகரங்கள் போல் பதினெண் மெய்யொடும் கூடிவருவன வல்ல. ஆய்தம் ஒருயிரொடும் கூடிவருவதன்று. ஐகார ஔகாரங்கள் குறுகுவது இடம்பற்றியே யன்றிப் பற்றுக்

கோடும் சார்பும் பற்றியன்று. மகரக் குறுக்கம் 'போலும்', 'மருளும்' என்பன போன்ற சொற்களின் ஈற்றயல் உகரக் கேட்டினாலும், வருஞ்சொன் முதல் வகரத்தினாலுமே, நிகழும்; வருஞ்சொன் முதல் உயிரேறின் உகரக் கேட்டு மகரக் குறுக்கம் நீங்கிவிடும்.

எ. டு: போன்ம்+என்று=போன்மென்று. இத்தகைய வேறுபாடும் சிறப்பியல்பும் நோக்கியே, முதனூலார் சார்பெழுத்து மூன்றேயெனக் கொண்டார். அதையே பல்லாயிரம் ஆண்டிற்குப் பிற்பட்ட தொல்காப்பியரும் தழுவிக் கூறினர். எழுத்துக்களின் தகையும் தொகையும் பெயரும் அளவும் கூறும் எழுத்ததிகார முதலியலுக்கு நூன் மரபு என்று அவர் பெயரிட்டிருப்பதையும்,

" எழுத்தெனப் படுப
அகர முதல் னகர இறுவாய்
முப்பஃதென்ப
சார்ந்து வரல் மரபின் மூன்றலங் கடையே."

என்று வழிநூன் முறையிற் கூறியிருப்பதையும், கூர்ந்து நோக்குக.

அ. "அன்றியும், ஒரு மாத்திரை அளவுள்ள முற்றுகரமே குறுகி அரை மாத்திரையாக ஒலிப்பதாயின் நன்னூலார் போலத் தொல்காப்பியரும்,

" நெடிலோ டாய்தம் உயிர்வலி மெலியிடைத்
தொடர்மொழி இறுதிவன்மையூர் உகரம் அஃகும்"

என்றன்றோ கூறியிருப்பர். அவர் அங்ஙனம் கூறிற்றிலரே! குற்றியலுகரம் தனி நெடிலுக்குப் பின்னரும், தொடர்மொழி இறுதியிலும் வரும் வல்லொற்றை ஊர்ந்து வரும் என்று தானே கூறியுள்ளார்.

" நெட்டெழுத் திம்பரும் தொடர்மொழி யீற்றும்
குற்றிய லுகரம் வல்லா றூர்ந்தே." (மொழிமரபு—3)

முன்னூலாசிரியர் இவ்வாறு தெளிவுறக் கூற, காரணமின்றி நன்னூலார் அவரோடு முரணுவானேன்?"

குற்றியலுகரம் குறுகியவியல்புடையதென்பதும், அது நிற்குஞ் சொல் ஈற்றயலெழுத்துப் பற்றி அறுவகைப்பட்டதென்பதும் தொல்காப்பியர் கூறிய கூற்றுக்களே! நன்னூலாரும் இங்ஙனம் கூறியது அவரை முற்றும் தழுவியே

" ஓரெழுத் தொருமொழி ஈரெழுத் தொருமொழி
இரண்டிறந் திசைக்குந் தொடர்மொழி உளப்பட
மூன்றே மொழிநிலை தோன்றிய நெறியே."

என்று (மொழிமரபு: 12) தாம் வகுத்துக் கொண்டவாறே,

தொல்காப்பியர் குற்றியலுகரச் சொற்களை ஈரெழுத் தொரு மொழி, தொடர் மொழி என இரண்டாகப் பகுத்து,

"நெட்டெழுத் திம்பரும் தொடர்மொழி யீற்றும்
குற்றிய லுகரம் வல்லா றூர்ந்தே."

என்று தொகுத்தும், பின்னர்க் குற்றியலுகரப் புணரியலில்,

"ஈரெழுத் தொருமொழி உயிர்த்தொடர் இடைத்தொடர்
ஆய்தத் தொடர்மொழி வன்றொடர் மென்றொடர்
ஆயிரு மூன்றே உகரங் குறுகிடன். (1)

என்று அவ்விரு தொடரையும் ஆறாக விரித்தும், கூறியுள்ளார்.

"உகரங்குறுகிடன்" என்னும் தொல்காப்பியத் தொடரை "வன்மையூர் உகரம் அஃகும்" என்னும் நன்னூற்றொடரும்; "நெட்டெழுத்திம்பர்" என்னும் தொல்காப்பியத் தொடரை "நெடிற்றொடர்" என்னும் நன்னூற்றொடரும்; முற்றும் ஒத்திருத்தல் காண்க. ஆகவே,

"நெடிலோ டாய்தம் உயிர்வலி மெலியிடைத்
தொடர்மொழி இறுதி வன்மையூர் உகரம்
அஃகும் பிறமேல் தொடரவும் பெறுமே."

என்று (எழுத்தியல், 13); நன்னூலார் கூறியுள்ளது முற்றும் உண்மைக்கு ஒத்ததும் தொல்காப்பியத்தொடு இம்மியும் முரண்படாததுமாகும். ஓர் இலக்கணத்தைத் தொகுத்தும் வகுத்தும் விரித்தும் கூறலே நூன்முறையாதலின், தொல்காப்பியர் தம் நூலின் 1–ஆம், 36–ஆம், 466–ஆம் நூற்பாக்களில், முறையே, குற்றியலுகரவியல்பைத் தொகுத்தும் வகுத்தும் விரித்தும் கூறினர் எனவறிக.

௬. "மேலும், இடமும் பற்றுக்கோடும் காரணமாக முற்றுகரம் குறுகிஒலிப்பதாயின், காரணம் உள்வழியெல்லாம் காரியம் நிகழவேண்டுவது ஒரு தலையாகலின் ஏது, தாது என்ற வடமொழிச் சொற்களில் உள்ள உகரமும் ஏற்ற இடமும் பற்றுக்கோடும் உடைமையின், குற்றியலுகரம் எனல் வேண்டும். ஆனால், அவ்வுகரம் முற்றுகரமாகவன்றோ உள்ளது. எனவே, இடமும் பற்றுக் கோடும் குற்றியலுகரம் வருவதற்குச் சார்பே தவிர உகரம் குறுக்கம் பெறக் காரணங்கள் ஆகா."

இடமும் பற்றுக்கோடும் கரணியமாக முற்றுகரம் குறுகியொலிக்குமென்று இலக்கணியர் கூறியது, தமிழ்ச்சொற்களையே யன்றிப் பிறமொழிச் சொற்களை நோக்கியன்று.

மேலும், ஏது, தாது, என்பவை வடசொற்கள் என்னும் பண்டைக்கொள்கை இனிச் செல்லாது. வடமொழி தேவமொழியென்றும், அது கடன்கொள்ளாதென்றும், அதிலுள்ள சொற்கள் யாவும் ஆரியச்சொற்களே யென்றும், குருட்டுத்தன

மாக நம் முன்னோர் நம்பிய கருநாடகக் கொள்கை இன்று மொழிநூலாராய்ச்சியால் தகர்ந்து, வட சொற்களுள் ஐந்திலிருபகுதி தென்சொல் என்னும் கொள்கை வலுத்து வருகின்றது.

ஏது, தாது என்னும் இரு சொற்களும் தென் சொல்லா என்பதை, சொற்பிறப்பியல், சொற்புணர்ச்சி என்னும் இரு கட்டளைக்கற்களில் உரைத்துக்காண்பாம்.

ஏது என்னும் சொற்கு வேர்ப்பொருள் ஏவுதல் அல்லது தூண்டுதல் ("Impulse") என்று, மானியர் உல்லியம்சு (Monier Williams) என்னும் மேலைச் சமற்கிருதப் பேரறிஞர் தம் வட மொழி-ஆங்கில அகரமுதலியில் (Sanskrit - English Dictionary) குறித்துள்ளார். கரணியம் ஒரு கருமஞ்செய்யத் தூண்டுவதாதலாலும், ஏவு என்னும் சொல்லின் மூலமான 'ஏ' என்பதே எது என்னும் சொற்கும் மூலமாதலாலும், ஏது என்பது இடு என்னும் வினையொடு ஏதிடு எனப்புணர்ந்து ஏதீடு என்னும வினைமுதல் நீண்டதொழிற் பெயராதலாலும், இத்தொழிற் பெயர்,

"கூறுதல் உசாஅதல் ஏதீடு தலைப்பாடு" என்னும் தொல்காப்பிய அடியில் (பொருளியல், 13) ஆளப்பெற்றிருத்தலாலும், வடமொழிக்கு முந்தியது தென் மொழியாதலாலும், ஏது என்னும் சொல் தென் சொல்லேயென்று கொள்ளப் பெறும். அது குற்றியலுகரத்துடன் உயிரேறித் தென்மொழிப் புணர்ச்சி கொண்டதும், அதன் தென்சொற்றன்மை யினாலேயே என அறிக.

முத்து என்னும் தென் சொல் ஐயர் என்னும் சொல்லொடு புணரின் முத்தையர் என்றாவதே இயல்பாயினும் இக்காலத்துச் சிலர் அதை முற்றுகரமாக வொலித்து முத்துவையர் என்று புணர்ப்பது போன்றதே, "ஏதுவின் உணர்த்தலும்" என்னும் தொல்காப்பியத் தொடரும் (கற்பியல், 27) ஏதுவின் முடித்தல்" என்னும் நன்னூற்றொடரும் (14) என அறிக.

தாது என்னும் சொல்லின் வேர்ப்பொருள் நுறுங்கு அல்லது தூள் என்பதே,

தகைதல்=, 1. சிதைதல்.

"சமந்ததைந்த வேல்" (பதிற்றுப்பத்து, 70:3)

2. நுறுங்குதல்.

ததைந்தது தாது

தாது=1, நீறு, பொடி, (மதுரைக்காஞ்சி, 399 உரை)

2. பூந்தாது (பூஞ்சுண்ணம்)

"தாதுண்வண்டினம்" (மணிமேகலை, 4:20)
3. உடலின் எழுவகைக்கூறு (பிங்.)
4. விந்து (பிங்.)

வெயிலிற்காய்ந்து தூளாக உதிர்ந்துபோன சாணத்தைத் தாதெரு என்பது செய்யுள் வழக்கு.

"தாதெரு மறுகின் மூதூராய்கண்" (அகம். 165).

தாதெரு பரந்து கிடக்கும் ஊர்ப்பொதுவிடம் தாதெரு மன்றம் எனப்படும்.

"தாதெரு மன்றத் தயர்வர் தழூஉ"
(கலித்தொகை, 103:61).

தாது+எரு=தாதெரு. இதுவும் தமிழிலக்கண நெறிப் பட்ட குற்றிய லுகரப்புணர்ச்சியே.

சில குற்றியலுகர வீற்றுச்சொற்களை வடசொல்லென வழுப்படக் கொண்டு நீண்டகாலமாக இதழ்குவித்தொலிப் பதனாலேயே, அவை வடசொற்போல் தோன்றிவிடுகின்றன.

ஏதீடு, தாதெரு என்பன இலக்கணப் போலியான மரூஉக்களல்ல. அவை முதற்காலத்துத் தோன்றிய நெறிப் பட்ட புணர்ச்சிகளே. இக்காலத்தும், கிட்டிணன் (கிருட்டி ணன்) என்னும் பெயரின் மரூஉவான கிட்டு என்பதையும் தம்பி என்பதன் கொச்சைத்திரியான தம்பு என்பதையும், ஈற்றுகரத்தை இதழ்குவித்தொலித்தல் காண்க. அவற்றின் ஈற்றுகரங்களை முற்றுகரமாக ஒலித்தலாலேயே, அவை; கிட்டுவை, கிட்டுவினால், கிட்டுவிற்கு எனவும், தம்புவை, தம்புவினால், தம்புவிற்கு எனவும்; வேற்றுமையேற்கின்றன. அவற்றை இலக்கண நெறிப்படி கிட்டை, கிட்டால், கிட்டிற்கு எனவும்; தம்பை, தம்பால், தம்பிற்கு எனவும்; வழக்கிற்கு மாறாக ஒலிப்பின், இன்னாவோசை தருதல் காண்க. இவ் விரண்டனுள், கிட்டு என்பதை வடசொற்றிரிபென வரைந் தொதுக்கினும், தம்பு என்பதை எங்ஙனம் தள்ள வியலும்?

ஆகவே, ஏது, தாது என்னும் சொற்களும், முற்றுகர வீறாக ஒலிக்கப்பட்டு வரும் நெடுங்கால வழக்கினாலேயே, வடசொற்றன்மை அல்லது வடசொற்போன்மை பெற்றுவிட்ட னவென அறிக.

கருவி என்பதுபோன்ற கரணம் கருமம் என்னும் சொற் களும் தென்சொல்லாயிருப்பவும், கரணம் என்பதைக் கரண என்று ஈறுகெடுத்தும்; கருமம் என்பதைக் கர்மன் என்று வேறுபடுத்தும்; கரண என்பதை நீட்டிக் காரண என்றும் அதற்கேற்பக் கரு என்னும் முதனிலையினின்று கார்ய என்றும் வடவர் புதிதாய் வடசொல் ஆக்கிக்கொண்டது போன்றே, ஏது என்பதை ஹேது எறும், தாது என்பதை dhatu என்றும், திரித்து ஆரிய மயமாக்கிக்கொண்டனர் என அறிக.

(தொடரும்)

புலம்பும் நெஞ்சிற்கு !

மகிபை-பாவிசைக்கோ.

அழுகின்ற தமிழ்நெஞ்சே! அருந்தமிழின்
துயர்நிலையை உள்ளுந் தோறும்
வழிகின்ற விழிநீரை மாற்றுக;சின்
னாள் அமைக; வடக்கர் பின்னே
இழிகின்ற கழிசடைகள் இனியுமன
மாறிலரேல், உண்மை நெஞ்சில்
எழுகின்ற தமிழ்த்தீயில் இணைந்தெரிந்து
தேறிடும்நாள் விரைந்த தென்றே!

வலம்படுதொல் சீர்அவிந்து விழிமூடிக்
கிடந்துழல்வார் தம்மை எண்ணிப்
புலம்புகின்ற தமிழ்நெஞ்சே! பெரும்பொருமல்
தணிக;சிறி தமைதி பூண்க:
நலம்புகன்ற தென்மொழியை நினையாதே
மேன்மேலும் அடிமைச் சேற்றில்
அலம்புவரேல், உணர்வெனும்பே ரலைப்பில்அவர்
சீர்படும்நாள் விரைந்த தென்றே!

தேம்புகின்ற தமிழ்நெஞ்சே! சிறிதமைதி
கொள்ளுக; தென் மொழியை நாட்டில்
ஓம்புகின்ற அருளுடையார் ஒருசிலரே
ஃனினும் அவர் ஓய்தல் இல்லார்:
நாம்புகன்ற மென்மொழியால் நல்லமைதி
காத்திருப்பார்: அன்னார் தாமும்
சாம்புகின்ற நிலைவருமேல், தமிழர்நிலம்
எரியுமிழ்நாள் விரைந்த தென்றே!

எரிகின்ற தமிழ்நெஞ்சே! இனுஞ்சிலநாள்
தணிக: தமிழ்த் தாய்க்குத் தீங்கு
புரிகின்ற கயவர்களின் பட்டியலை
வகைப்படுத்திக் கொள்க: ஆட்சி
சரிகின்ற நாளின்னும் சேய்மையிலே
இல்லை; தமிழ் மானத் தீயில்
கரைகின்ற கரிசுடன்நம் கைவிலங்கு
முறிந்திடும்நாள் விரைந்த தென்றே!

வேகின்ற தமிழ்நெஞ்சே! வெப்பநிலை
மாற்றுக;வெம் பசியால் நாளும்
சோர்கின்ற நல்லுயிரைச் சிறிதமர்த்திக்
கொள்க;நமின் நிலையை எண்ணி
நோகின்ற நல்லுள்ளம் நூற்றிலொன்றும்
தேறாது போயின் என்ன?
காய்கின்றோம் தமிழ்நெருப்பில் கனன்றெழுந்து
விடுபடும்நாள் விரைந்த தென்றே!

கட்டிடவியலின் தொன்மை.

நாஞ்சில். செ. சுந்தரராசன்.

மாந்தன் தோன்றும் பொழுதே அறிவு மிக்கவனாய், ஆற்றல் நிரம்பியவனாய், நாகரிகம் முதிர்ந்தவனாய்த் தோன்றவில்லை. அவன் விலங்குகளிடமிருந்து பாதுகாப்பாக இளைப்பாற அவனுக்கு ஓர் ஒதுக்கிடம் தேவைப்பட்டது. மலைமுழைஞ்சுகள் அவனுக்குச் சிறந்த உறைவிடமாயின. முழைஞ்சின் வாயிலைக் கல்கொண்டு மூடிக் காப்பாகத் தூங்கினான். காலஞ் செல்லச் செல்ல அவன் அதுபற்றி எண்ணத் தலைப்பட்டான். பாடித் திரியும் பறவைகள் பாங்காய்க் கூடு கட்டிக் குடும்பம் நடத்துவதைக் கண்டான். தானும் குடில் கட்ட ஆவலுண்டாயிற்று. அன்று அவன் கம்பும், கல்லும், மண்ணும் கொண்டமைத்த குடிசைகளினின்று தொடங்கிய கட்டிடக்கலை, இன்று விண்ணை முட்டும் பெருமாடங்கள் வரையிலும் வளர்ந்தோங்கி யுள்ளது. அற்றை நாட்களில் கட்டிடவியல் அடைந்த வளர்ச்சி, கட்டிடக்கலை பெற்ற ஏற்றம் முதலியவை எண்ண எண்ண இறும்பூது தருவன.

'கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றி மூத்த' தமிழ்ப் பெருங் குடியினர் (திரவிடர்), சிந்து வெளியில் வாழ்ந்த காலை (ஆரியர் வருகைக்கு முன்) கட்டிட வியற்றுறையில் மற்றெல்லாரையும்விட ஏற்றமிக்கவராய் விளங்கினரென்பது, அரப்பா-மொகஞ்சதாரா (Harappa Mohenjodaro) வில் நடந்த அகழ்ந் தெடுப்பு மூலம் தெரியவருகிறது. சீராகச் சுட்ட செங்கற்களையும், களிமண் கலவைச் சுதையையும் (Mortar) கொண்டு வீடுகளும், கிணறுகளும், கால்வாய்களும் கட்டினர். [சிந்துவெளித் தமிழ் நாகரிகத்தின் பல நூறு ஆண்டுகட்குப் பின்தான்-உரோமப் பேரரசனான அகத்தசு (Agastus) காலத்திற்றான்-மேலை நாடுகளில் சுடுசெங்கல் பயனுக்கு வந்தது.] வீடுகட்ட $9'' \times 4\frac{1}{2}'' \times 2\frac{1}{2}''$ செங்கற்களும், கிணறு, வளைவு (Arch) முதலியன கட்ட ஆப்பு (Wedge) வடிவச் செங்கற்களும், பெரிய மதில்கள் கட்ட $29'' \times 12'' \times 8''$ செங்கற்களும் பயன்படுத்தப்பட்டன.

வீடுகள் உடல்நலத்திற்கேற்றவாறு நல்ல காற்றோட்டத்திற்கான பலகணி ($6' \times 4'$), கால்அதர்கள் (Ventilators) முதலியவற்றுடன் கட்டப்பட்டன. வீடுகளில் குளியலறைகளும், மலங்கழிக்கக் கழிவகங்களும் இருந்தமை, அவர்தம் நாகரிகச் சிறப்பைக் காட்டுகின்றது.

கழிநீர் வடிகால்கள் (Sewage disposal System) மிகவும் நுட்பமாய் அமைக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு தெருவிலும். ஒரே அளவாகச் சுட்டுத் தேய்த்து வழவழவாக்கப்பட்ட செங்கற்களால் கட்டப்பட்ட கழிநீர்க் கால்வாய்கள்—வீட்டின் வடிகால்கள், தெருக் கால்வாயுடன் சேருமிடத்துச் செங்கற்களால் கட்டப்பட்ட சிறு குழிகள்—அக்குழிகளின் அடியில் தொளைகள் உள்ள தாழிகள்—வீட்டு வடிகால் வழியேவரும் கழிநீருடன் குப்பை கூலங்கள் வந்து, தாழியில் வீழ்ந்து, தாழிகளில் உள்ள துளைவழியே அந்நீர் வெளித் தொட்டியில் வடிந்து சென்று, நிரம்பி வழிந்து தெருக் கால்வாயில் கலக்குமாறு அமைக்கப்பட்டுள்ளன. இது தமிழ்ப் பெருங்குடியினரின் துப்புரவுக் கட்டிடவியல் நுட்பத்தை உள்ளங்கை நெல்லிக் கனியென தெள்ளத் தெளியக் காட்டுகிறது.

பலநூறு ஆண்டுகட்குப்பின்— கழகக் (சங்க) காலத்தில்- கட்டிட வியலின் வளர்ச்சி பற்றிய சில செய்திகளை நாம் அறியக்கிடக்கின்றோம். கழக நூற்களில் பயின்றுவரும் "விண்ணுறவோங்கிய புரிசை", "எழுநிலை மாடம்" முதலிய சொற்றொடர்களினின்று பன்மாடிக் கட்டிடங்கள் அந்நாளில் கட்டப்பட்டிருந்தன வெனவும், "சுடுமண் ஓங்கிய நெடுநிலை மனை தொறும்" எனும் வரியினின்று (அவை சுடு செங்கற்களால் கட்டப்பட்டவை எனவும் தெரியவருகின்றது" அண்மையில் $2\frac{1}{2}'' \times 1\frac{1}{2}'$ செங்கற்களால் கட்டப்பட்ட கட்டிடமொன்று காவிரிப்பூம் பட்டினத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை (தினமணி—25-7-65-பக்கம்: 2) இதனை மேலும் வலியுறுத்துகின்றது.

சிந்துவெளி நாகரிக காலத்திற்குச் சில நூறு ஆண்டுகட்குப் பின் எகிப்திய நாட்டில் வியத்தகு முறையில் கட்டிடவியல் வளர்ச்சியடையத் தொடங்கியது. கி.மு. நாற்பதாம் நூற்றுண்டில் 1500′ நீளமும், 50′ அகலமுமுள்ள கல்லணை ஒன்று கட்டப் பட்டதாகக் குறிப்புகளினின்று தெரிகிறது. எபிரேயனை (Hebrew) யோசேப்பினல் (Joseph) கட்டப்பட்ட 'போஃர் யூசப்' (Bohr yusuf) எனும் கால்வாய் மிகத் தொன்மையானது. பெரும் பட்டைக் கோபுரங்கள் (Pyramids) பாரோ (Paraoh) மன்னர்களால் கட்டப்பட்டன. (கி. மு. 3,000—2,500)

கட்டிடப் பொறியாளர்கள் பாரோவின் அவையில் பலவகையாய் மேன்மைப்படுத்தப்பட்டனர். இயனி (Ieni) எனும் கட்டிடக் கலைஞர் (கி. மு. 1,550) 'சொற்களால் விளக்கவியலா வண்ணம் நான் குமுகாயத்தில் (Society) உயர்த்தப்பட்டேன்.........என் வாழ் நாட்கள் இன்பமாய்க் கழிந்தன"

என எழுதியுள்ளார். எகிப்தியர் தாம் அமைப்புப் படங்கள் (Drawings such as Plan etc) வரைந்து கணக்கு அறிவையும் பயன்படுத்திக் கட்டிடவியலில் பிறர்க்கு வழிகாட்டினர் என மேனாட்டு ஆய்வாளர் பலர் கூறுகின்றனர்.

எகிப்தியருக்குப்பின் உரோமப் பேரரசில் கட்டிடவியல் மேன்மையடைந்தது. தங்களது படையெடுப்புகட்கு உதவியாகப் பல பெருஞ்சாலைகளமைத்தனர். கி.மு. 400-இல் அமைக்கப்பட்ட பல சாலைகள் இன்னும் ஐரோப்பாவில் காணப்படுகின்றன. குடி தண்ணீர் ஏந்து (வசதி)க்காக இவர்கள் ஏராளமான பணஞ் செலவிட்டனர். நீர்ச்சுனையினின்று (Spring) அல்லது ஆற்றினின்று நகருக்குக் குடிதண்ணீர் கொண்டுவர "நீர் தாங்கிப் பாலங்கள்" (Aqueducts) பல கட்டினர். கி. மு. 19-இல் கட்டப்பட்ட பாயின்ட் டு கார்ட் (POINT DU GARD) என்ற 160′ உயரமும், 850′ நீளமுமுள்ள நீர் தாங்கிப் பாலமொன்றை இன்றும் காணலாம். இதன் வளைவுகள் (Arch) 80′5″ இடைவெளி (Span) உடையன.

டிரசான் (Trajon) பேரரசருக்கு சின்ன ஆசியா (Minor Asia) ஆளுநன் (Governor) பிளினி (Piliny) எழுதிய மடலொன்று நமக்கு பல உண்மைகளைத் தருகின்றது. மடல் வருமாறு :— "நிகோமிடிய (Nicomedia) மக்கள் முப்பதிலக்கத்து முன்னூற்றிருபத் தொன்பது செசுடெருசுச் (Sesterces)—சுமார் ஐந்து (இலக்கம்) உருபா—செலவு செய்து நீர் தாங்கிப் பாலமொன்று கட்டினர். ஆனால் பல காரணங்களால் அது முடிவுறாது அழிவுற்றுக் கிடக்கிறது. இருபது இலக்கம் 'செசுடெருசு' செலவில் துவக்கிய மற்றொன்றும் இதே நிலைமையடைந்தது. ஆனால் நீர்த் தேவை காரணமாக இப்பொழுது மற்றுமோர் நீர்தாங்கிப் பாலம் கட்ட முன் வருகின்றனர். நான் இதற்காக நீர்ச்சுனையொன்றைத் தேர்ந்தெடுத்துள்ளேன். இதினின்று நகரின் எல்லாப்பகுதிகட்கும் நீர் கொண்டுசெல்ல முடியும். அழிவுற்றுக் கிடக்கும் பழைய பாலத்தை உடைத்து அதினின்று கிடைக்கும் வரிக்கற்களையும் (Cut Stone) சுடுசெங்கலையும் பயன்படுத்தி இதற்கான வளைவுகளைக் கட்டலாம் என்று எண்ணுகிறேன்."

இதினின்று அந்நாளில் எண்ணித் துணியாத அமைப்புகள் (Structures) எத்தனைகேடு விளைத்தனவென்பதையும், பேரரசர்களும், அதிகாரிகளும் மக்கள் நலனில் நாட்டங்கொண்டு, கட்டிடங்கள் பல கட்டியதையும் காண்கிறோம்.

காலஞ்செல்லச் செல்ல மாந்தனின் அறிவும், நாகரிகமும், அதற்கேற்ப அவன் தேவைகளும் வளர்ச்சியடைந்தன. தனது

ஆங்கில மருத்துவம்:

மஞ்சட்காமாலை நோய்

அ. பொன்னம்பலம்.

மிக்க தொன்மையான காலம்தொட்டே நம் மக்களுக்கு அறிமுகமான நோய்களில் ஒன்று மஞ்சட்காமாலை நோயாகும் (JAUNDICE); சிற்றூர்ப்புறங்களில் வாழும் பெரும்பான்மையான மக்கள் இந்நோயின் தன்மைகளைப் பற்றி ஓரளவு, தெரிந்திருந்தாலும் பெரும் பகுதி அறியாமையின் அடிப்படையில் எழுந்த பல்வகையான மூடக் கொள்கைகளைக் கொண்டுள்ளனர். இந்நோயின் தன்மைகளைப்பற்றி மருத்துவ ஆய்வின் அடிப்படையில் எழுந்த சில உண்மைகளை இக்கட்டுரையில் சுருக்கமாகக் காணுவோம் :

மஞ்சட் காமாலை நோய் என்றால் என்ன ?

குருதியில் பொதிந்திருக்கும் "பிலிரூபின்" (Bilirubin) என்ற நிறமியானது மிகுதியாவதன் காரணமாக, தோல், இமை இணைப்பு போன்ற உறுப்புகளை மஞ்சள் வண்ணமாக்கும் நிலையைத்தான் மருத்துவர்கள் மஞ்சட் காமாலை நோய் என்கின்றனர். மஞ்சட் காமாலை நோயின் காரணம்பற்றி மருத்துவர்களிடையே பல்வகையான வேறுபட்ட கருத்துகள் உலவி வருகின்றன. ஆனாலும் மருத்துவர்களில் பெரும்பான்மையோர், இந்நோயின் காரணங்களைக் கீழ்கண்ட மூன்று பிரிவுகளாகப் பிரித்துள்ளனர் :—

1. குருதிச் சிதைவால் ஏற்படும் மஞ்சட்காமாலை.
2. நச்சுப் பொருட்களால் ஏற்படும் மஞ்சட்காமாலை.
3. பித்தநீர் தடைப்படுவதால் ஏற்படும் மஞ்சட்காமாலை

1. குருதிச் சிதைவால் ஏற்படும் மஞ்சட் காமாலை :

குறுதியிலுள்ள செவ்வணுக்கள் (Red blood corpuscles) சில பொழுதுகளில் அளவுக்கு மிகுதியாகச் சிதைவதன் காரணமாகக் குருதிச் செந்நிறமியிலிருந்து மிகுதியான அளவில் "பிலிரூபின்" என்ற நிறமி வெளியிடப்படுகிறது, இன்னும்

(30–ஆம் பக்கத் தொடர்ச்சி)

(கணித)(Mathematics,) அறிவியல் (Science) அறிவைக் கட்டிடவியலில் புகுத்தத் தலைப்பட்டான். கல்லும், மண்ணும், மரமும் போய் இன்று எஃகும் (Steel), கற்காரையும் (Concrete) அவன் கைபட்டு மாடமாளிகைகளாய், மலைநிகர்த்த அணைக்கட்டுகளாய் எழும்பி நிற்கின்றன. "தேவையே புதியனவற்றின் தாய்" என்ற முதுமொழிக்கேற்ப, மக்கட் கட்டவிருக்கும், வியப்பூட்டும் அமைப்புகள் பற்றி இறைவனேயன்றி யாரே முன்னறிய இயலும்?

※

சில வேளைகளில் எலும்புச்சாறு (Bone marrow) மண்ணீரல், போன்ற உறுப்புகளில் குறுதிச் செந்நிறமியானது (Haemo globin) சிதைவுற்று மிகுதியான அளவில் பிலிருபின் என்ற மஞ்சள் நிறமியை வெளியிடுகிறது. குருதியைச் சிதைவுறச் செய்யும் தன்மை பெற்ற சில வகையான நச்சுப் பொருள் களும் மருந்துகளும் சில வேளைகளில் குருதியிலுள்ள பிலிரு பின் அளவை மிகுதியாக்கக்கூடும்.

2. நச்சுப் பொருள்களால் ஏற்படும் மஞ்சட்காமாலை :

கல்லீரல் பகுதியிலுள்ள திசுக்கள் சில வேளைகளில் பல் வகையான காரணங்களினால் சிதைவுறுவதாலோ மடிவதாலோ, குருதியில் பொதிந்திருக்கும் பித்தநிறமியை பித்த–நுண் குழலுக்குள் (Bile-Capillaries) மாற்றும் திறனை இழந்து விடுகின்றன. கல்லீரலிலுள்ள திசுக்கள் பாதிக்கப் படும் அளவைப் பொறுத்துக் குருதியில் பொதிந்திருக்கும் பித்தநிறமியின் அளவு மாறுபடும். சில வேளைகளில் குருதி யில் மிகுதியாகப் பொதிந்திருக்கும் பித்தநிறமிகள் சிறுநீரின் வழியாக வெளியே தள்ளப்படுவதுண்டு.

3. பித்தநீர் தடைப்படுவதால் ஏற்படும் மஞ்சட்காமாலை :

இவ்வகையான மஞ்சட்காமாலையில் பித்த நாளங்கள் அடைபடுவதால், கல்லீரல் திசுக்களால் கழிக்கப்பட்ட பித்த நீரானது மறுபடியும் கல்லீரல் நுண்குழலின் வழியாக உறிஞ் சப்படுகிறது. இவ்வாறு அடைபடுவது மூன்றுவகைக் காரணங்களால் ஏற்படக் கூடும். (அ) பித்த நாளங்களின் உட்பகுதிகளில் பித்தக் கற்கள் (Gall stones) அடைத்துக் கொள்ளக் கூடும். (ஆ) சில நேரங்களில் பித்த நாளங்களின் உள்வட்டமானது குறுகுவதால் ஏற்படக்கூடும். (இ) இன் னும் சில நேரங்களில் பித்த நாளங்களைச் சுற்றி ஏற்படும் கல்லீரல் கழலைகள் பித்த நாளங்களை அழுத்த, அவற்றின் விட்டத்தைக் குறைக்கக்கூடும்.

மஞ்சட்காமாலையின் அறிகுறிகள் யாவை ?

இந்நோயின் துவக்கக் காலத்தில் ஏற்படும் முதல் அறிகுறி கண் இமை இணைப்புப் பகுதியானது மஞ்சள்வண்ண மாவதுதான்; இதன் பின்புதான் மற்றப் பகுதிகளுக்குப் பரவக் கூடும்; இதற்குப் பின்னர் மேல் வாய், உதடு போன்ற பகுதிகளில் உள்ள "மீயூகசு" சவ்வானது (Mucous membrane) மஞ்சள் வண்ணமாக மாறத்துவங்கும். பித்த நாளங்கள் தடைப்படுவதால் ஏற்படும் மஞ்சட்காமாலையில், தோலின் வண்ணமானது ஆழ்பச்சையாக இருக்கும். உயிரம்—'கே' (Vitamin-K) குறைவும் இந்நிலையும் இணைந்தால் மூக்குப் போன்ற உறுப்பிலுள்ள மீயூகசு சவ்விினின்று குருதியானது கொஞ்சம் கொஞ்சமாகக் கசியத்தொடங்கும்.

இந்நோயின் மற்றொரு சிறப்பான அறிகுறி, சிறுநீர் மஞ்சள் வண்ணத்தில் வெளிவருவதாகும். இன்னும் சில சமயங்களில் சிறுநீர் கருமை கலந்த பழுப்பு நிறத்திலும், ஒலிவ நிறத்திலும், கருமை நிறத்திலும் காட்சியளிக்கும். இந்நோயாளிகளின் மலம் நிறம் மாறுபட்டுக் களிமண் வண்ணத்துடன் காட்சியளிப்பதோடு அல்லாமல் எளிதில் தீ நாற்றத்தையும் உண்டுபண்ணும். மேலும் உணவு செரித்தலுக்குத் தேவையான பித்தநீர் கிடைக்காததால் மலத்தின் பெரும் பகுதி கொழுப்புக் காடிகளாகவும் (Fatty Aceds) உவரியக் குழம்பாகவும் இருக்கும். மஞ்சட்காமாலையின் பொழுது ஏற்படும். மற்றோர் அறிகுறி உடலில் ஏற்படும் அரிப்பாகும் இந்நோய்க்கு ஆளாகும் பெரும்பான்மையோர்க்கு இத்தகைய சிக்கல் ஏற்படக்கூடும். மஞ்சட்காமாலை நோயின் பொழுது குருதி உறைவிற்குக் காரணமான "உயிரம் — கே"யின் அளவானது மிகும்; இதன் காரணமாகப் பிணியாளன் பல்வகையான குருதி ஒழுக்கு நோய்களுக்கு அடிமையாகக்கூடும்.

எவ்வகவையினரை இந்நோய் தாக்கும்? குழந்தைகளுக்கு ஏற்படும் மஞ்சட்காமாலையானது பெரும்பாலும் வழித்தோன்றல் (Heredetary) தன்மை உடையதாக இருக்கும். சில குழந்தைகளுக்குத் தொற்றுக் காரணங்களினால் ஏற்படும் மஞ்சட்காமாலை நோய் வருவதுண்டு. 30 அகவைக்கு உட்பட்டவர்களுக்குப் பெரும்பாலும் தொத்துக் காரணங்களினால் மஞ்சட்காமாலை ஏற்படுவதுண்டு. 30 அகவைக்குப் பின்னர் ஏற்படும் மஞ்சட்காமாலையானது பெரும்பாலும் பித்த நாளங்களைப் பித்தக்கற்கள் அடைத்துக் கொள்வதால் ஏற்படக்கூடும். 40 அகவைக்குப் பின்னர் ஏற்படும் மஞ்சட்காமாலைக்குப் பெரும்பான்மையான காரணம் புற்று நோயாகும்.

மருத்துவ முறைகள்: பிணியின் அடிப்படைக் காரணத்தை நன்கு அறிந்த பின்னரே அதற்கு இயைந்தவாறு மருத்துவ முறைகளைக் கையாளுகின்றனர். எனவே மஞ்சட்காமாலையின் பொழுது ஏற்படும் சில சிக்கல்களை மட்டும் எவ்வாறு சமாளிப்பது என்பதுபற்றிச் சுருக்கமாகக் காணுவோம். இப்பிணியின் பொழுது ஏற்படும் தலையாய சிக்கல்களில் ஒன்று உடலரிப்பாகும் (Pruritis). உடலரிப்புக்கு அன்றாடம் 1 அரிசி எடை (Grain) அளவு தைராயிடு குளிகைகளை உண்டு வரவேண்டும்; மேலும் "கலேமின்" குழம்பை அரிப்பு ஏற்படும் பகுதிகளில் பூசவேண்டும். உடல் அரிப்பானது இரவு உறக்கத்தைப் பெரிதும் கெடுத்தால், உறக்க மாத்திரைகளை மருத்துவர்களின் பரிந்துரைகளின் அடிப்படையில் பயன்படுத்தலாம். உயிரம்—கே குறைவிற்கு "மானைப்தோன்" (Menaphthone) "மனேடியன்" (Menadione) போன்ற மருந்துகளைப் பயன்படுத்தலாம்.

கல்வி

கல்விப் பயிற்சியில் மிக்கவர்க்கு நுண்ணுணர்வு மிகுதிப் படுதலால், அவ்வுணர்வு நிகழ்ச்சிக்கு இடமான அவர்தம் உடம்பும், அவ்வுடம்பில் அமைந்த பொறி புலன்களும் உணர்வு மிகுந்தனவாயிருக்கும். அத்துணை உணர்வு மிகுந்த அவர்தம் உடம்பின் உறுப்புகள் இனிமை மிகுந்த பண்டங்களோடு ஒன்று சேருங்கால், அவை அவர்க்கு அளவுபடாத இன்பத்தினை விளைக்கும். அறிவு மழுங்கிய பலர்க்கும் புலனாகாத சில பண்டங்களின் மணம், அறிவு விளங்கிய சிலர்க்கு உடனே புலனாதலும், அறிவு நுணுக்கமில்லாத பலர்க்கும் புலனாகாத சில அரு முயற்சிகளின் நுட்பங்கள் அறிவு நுணுக்கம் வாய்ந்த மற்றைச் சிலர்க்கு உடனே புலனாதலும், நாடோறும் நமது வாழ்க்கையில் நன்கறியப்பட்டு வருகின்றன வல்லவோ? ஆகவே கல்வியறிவு வாய்ந்தவர்பால் நிகழும் இன்பத்தின் பெருமைக்கும், அஃதில்லார்பால் நிகழும் அதன் சிறுமைக்கும் உள்ள வேறுபாட்டினை நன்குணர்ந்து, இவ்வுலக வாழ்க்கையில் நுகர்தற்குரிய இன்பங்களைச் சிறக்க நுகர்தற்கும், மறுமையுலகில் வரற்பாலதாகிய பேரின்ப நிலையினை முற்றுணர்ந்து அதனைப் பெறுதற்காந் தவ முயற்சியினை நன்கு செய்தற்குங் கல்விப் பயிற்சியானது இன்றியமையாததாகுமென்றுணர்ந்து கொள்க.

—மறைமலையடிகள்.

(‘மக்கள் நூறாண்டு உயிர் வாழ்க்கை’ பக்கம் : 51.)

பேதை நெஞ்ச உணர்வின் ஓவியம்!
பெண்மையை ஏத்தும் தீந்தமிழ்ப் பாவியம்!
கன்னலின் சாறு! பொன்னிநீர் ஓட்டம்!
அன்னைத் தமிழ்க்கோர் அணிமலர்ப் படையல்!

துரை. மாணிக்கம் எழுதிய

மேழ (சித்திரை) இதழில் தொடங்குகின்றது!

சென்ற இதழ்த் தொடர்ச்சி.

அச்சமே கீழ்மைக்கு அடிப்படை.

—மன்றிலாடி.

அச்சம் இடம்பெற்ருல் கலைகளும், ஆராய்ச்சிகளும் நாகரிகமும் தடைப்படும். ஐயமும் அச்சமும் இரட்டைக் குழந்தைகள் என்னலாம்; நற்பயிரில் முளைக்கும் களைகளை ஒப்பவை. துணிவு, விரைவு போன்ற அரிவாள்களைக் கொண்டு அவற்றை வெட்டி அகற்ற வேண்டும். முளைப் பயிரிலேயே அவை இடம்பெருதவாறு கண்காணிக்க வேண்டும். அஞ்சுவதகற்றி மகிழ்வோடு உழைத்து வாழ்க்கைச் செலவைத் தொடங்கக் குழந்தைகளுக்கு உதவிபுரியாத பெற்ருேர் தம் கடமையினின்றும் தவறியவராவார்கள்.

சூடுகண்ட பூனை அடுப்படிக்குப் போக அஞ்சுமென்பார்கள். ஆனால் அறிவுள்ளவர்கள் தமது நன்முயற்சிகளில் தோல்வியுறினும் அதில் பெறப்படும் பட்டறிவுகளைக் கற்படிகளாக்கி மேலேறி வெற்றி காண்பார்கள். ஆங்கில வரலாற்றில் இராபர்ட் புருசு பதிைெரு முறை தனக்கு நிகழ்ந்த தோல்விகளைப் பொருட்படுத்தாது மீண்டும் படையெடுத்துத் தன்னுட்டை மீட்டது எவரும் கேள்வியுற்றது. அவ்வரசன் தான் பதுங்கியிருந்த முழைஞ்சில் ஒரு சிலந்தி வலைகட்டிப் பன்முறை அஃது அறுந்து விழுந்த போதிலும் முயற்சியை விடாது மறுபடியும் தொடங்கிக் கட்டிமுடித்த படிப்பினையிலிருந்து மீண்டும் ஊக்கம் பெற்று வெற்றி கண்டதாய்க் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே தோல்விக்கும் சலிப்புக்கும், ஊதிய இழப்பிற்கும் அசையாதிருப்பதே வெற்றிக்குக் காரணம் என்னலாம்.

இடர்கள் நடுவில் அகப்பட்டுக் கொண்டால், மனத்துயரும், சடசடப்புமடைந்து அலட்சிக்கொள்ளாது, அமைதியும் பொறுமையும் மேற்கொள்ளுதல் நலம். அமைதி இல்லாவிடில் இக்கட்டான சூழல்களை எப்படிச் சமாளிப்பதென வழி தோன்ருது போய்விடும். தொண்ணூறு அகவை அடைந்த கிழவி ஒருத்தியை, 'நீ எப்படி இத்துணைக் காலம் வாழ்கிருய்' என்று கேட்டதற்கு, அவள், 'வாழ்வில் துயரங்கள் நேரும் பொழுதெல்லாம் நான் படுக்கையில் போய்ப் படுத்துக்கொள்வேன்' என்ருள். அதில் ஒரு சிறு உண்மை உண்டு. படுக்கை அமைதி யளிக்கிறது. அமைதியுள்ள இடம் படுக்கை என்ற நம்பிக்கை எழுகிறது. மனத்துயர், புறத்தொல்லை, சலிப்பு, வெறுப்பு எவையும் படுக்கையை அணுகுவதில்லை. அமைதியும், இணக்கமும் படுக்கையில் பிறப்பன. உடலும் மனமும் ஓய்வும் அமைதியும் பெறுகின்றன.

"அஞ்சுவது யாதொன்று மில்லை
அஞ்ச வருவது மில்லை."

மேலதிகாரியிடம் சென்று சம்பள உயர்வு கேட்க ஒருவன் அஞ்சினான். அவர் அலுவலறைக்குள் நுழைய முயலும் பொழுதெல்லாம் கால்கள் நடுக்கமெடுத்தன. இதைக் கவனித்திருந்த ஒரு முதிய நண்பர், 'உன் தந்தை குளிக்கும் பொழுது கவனித்திருக்கின்றாயா? அக்கால் அவர் எப்படித் தோன்றினார்?' என்றார். 'சிறிய உள்ளாடையுடன் குளிக்கையில் மற்றவருக்கும் அவருக்கும் வேற்றுமை காணவில்லை. ஏன், ஒரு கூலியாள்கூட அப்படித்தான் தோன்றுவான்,' என்றான். 'அதுதான் கவனிக்கத் தக்கது; உன் கண்களை மூடிக்கொண்டு இந்த மேலதிகாரி ஆடையின்றி நிற்பதாய் உருவம் செய்துகொள். அவன் ஒரு விறகு வெட்டி போன்ற எளிமையான மாந்தன் தான் என்று உணர்ந்தால், உன் அச்சம் நீங்கிவிடும். துணிவாக உட்செல்' என்றார்.

உங்களுடைய நிலைமையை நினைத்து வருந்தி உங்களையே இழிவாக எண்ணிக்கொள்ளாதீர்கள். கட்டுக்கடங்காத பெருந்துன்பங்களுக்கு இடையில் மாந்த இனம் வெற்றி பெற்றுள்ளது. செவிடும் ஊமையும் குருடுமான எலன் கெல்லர் (Helen Keller) பரந்த புகழ்பெற்ற பொதுமக்கள் தொண்டரானாள். என்புருக்கி நோயால் இடையறாத் துன்பமுற்ற இராபர்ட் உலூயி தீவன்சன் (Robert Lewis Stevenson) ஒப்புயர்வற்ற பாவியங்கள் புனைந்தார். தொழுநோயாளிகள் நடுவில் உழைத்துத் தாமே அந்நோய்க்குப் பலியான தாமியன் என்னும் சூரவர் (Father Damien) தம் உறுதியால் அரும்பணியாற்றினார். மாந்தரின் எண்ணத்திற்கியையவே வாழ்க்கையும் உருவாகிறது. நமது எண்ணங்கள் நம்மை ஆக்கவும் அழிக்கவும் வல்லன. "நீங்கள் பிற்காலத்து எவ்வாறு வெற்றியடையப் போகின்றீர்கள் என்று ஒரு திட்டம் வகுத்துக் கொண்டு நாளும் அத்துறையில் வெற்றி முழக்கம் செய்து மேனிலையில் விளங்குவதாக மனத்தே உருவகம் செய்து கொண்டு அதே தீர்மானத்துடன் உங்கள் செயல்களைத் திறம்பட இயற்றுவீர்களானால், உங்கள் கனவு ஒருநாள் நினைவும் உண்மையுமான வெற்றி வினையாகவும் மாறும். அறியாமையால் விளைவன தீங்கும் அச்சமும், துயர வாழ்வுமே. அவை நிலையானவை அல்ல; அகலும் தன்மையுள்ளவை. இருள் மறையும்; விளக்கம் தோன்றும். அச்சத்திற்கு அடிமை என்ற கோழைமை மனப்பான்மையை விரட்டியோட்டி, வெற்றி மகிழ்ச்சி, அமைதி, அன்பு, அச்சமின்மை, துணிவு போன்ற ஆக்கவாற்றல்களைப் பேணி வளர்த்து வாழ்வை வளம் பெறச் செய்வீர்களாக!

உரிமை

—புலவர். தி. நா. அறிவுஒளி.

உரிமை என்பது உயிரின் ஆவல்களுள் முதன்மையான தாம். வித்து மண்ணுள் புதைக்கப் பட்டாலும், மண்ணின் தடையையும் அடக்குமுறையையும் மீறிக்கிளர்ந்து கிளறி வெளிப்பட்டு உரிமையடைவதை நாமறிவோம். ஓரறிவுயிர்க்கே இத்துணை உரிமையுணர்ச்சியும், உரிமையார்வமும், உரிமைக் கிளர்ச்சியும், உரிமையெழுச்சியும் இருக்குமானல், பகுத்தறிவு வளமும், எண்ணுமறிவாற்றல் செழுமையுமிக்க உயர்திணை உயிர்ப்பிறவியரான மாந்தர்க்கு எத்துணை உரிமைவிழைவும் உரிமைவேட்கையுமிருக்கு மென்பதை உய்த்தறியலாம்.

மூடநம்பிக்கை, பிழையறிவு, போலிக்கல்வி, தீயமனம், குறுகிய கயமைத் தன்னலம், அழிவு உணர்வு, அதிகார ஆணவம், செருக்குவெறி, செல்வத்திமிர் ஆகிய கொடுங் கயமைப் பண்புகள் முற்றும் அழிந்தால் — அழிக்கப்பட்டால் தான்—உரிமை சிறந்தோங்கிச் செழிக்கும்.

ஒரு நாட்டை, இனத்தை, மன்பதையை என்றும் அடிமைப்படுத்தி ஆளவேண்டும் என ஒரு வல்லாட்சி எண்ணு மாயின், இவ்வெண்ணம் நிறைவேறுவதில்லை. இவ்வுண்மை யையே வரலாறு உலகினர்க்கு அறிவுறுத்துகிறது.

களப்பிரர் ஏறத்தாழ மூன்று நூற்றுண்டுகள் தமிழகத்தை அடிமையாக்கி 'ஆணவ இருளாட்சி' நடாத்தினர். ஆயின் பாண்டியன் தலைமையில் தமிழினப் படை களப்பிரர் ஆட்சியை—களப்பிரர் இனத்தை—இருக்குமிடந் தெரியாமற் செய்துவிட்டது.

பல்லவர் ஆட்சி ஐந்தாம் நூற்றுண்டிலிருந்து ஒன்பது— பத்து நூற்றுண்டுவரை இருந்தது. அதுவும் சோழப்பேரர சின் எழுச்சியால் நசுக்கி யழிக்கப்பட்டது.

உலகையே அடிமைகொள்ளப் போர்முரசு கொட்டி எழுந்து, வெற்றிமேல் வெற்றியே பெற்று, வீறுண்மை மிக்க விறலோன் என்றும், பேராண்மைமிக்கத் திறலோன் என்றும் பேரார்வப் புகழ் பெற்ற மாசிடோனிய மைந்தன் மாஅலெக் சாந்தரின் வல்லாட்சி என்னவாயிற்று? இருக்குமிடந்தெரியா மல் போயிற்று.

பிரெஞ்சுப் புரட்சியின் பயனாக விளைந்த நெப்போலியன் பேராட்சி நிலைத்ததா?

இட்லர், முசோலினி, கெய்சர், டோசோ முதலியோரின் வல்லாட்சிகள் என்னவாயின? மண்ணாயின; மறைந்து

போயின! ஆம் பிறரை ஆளநினைப்போர் மாளத்தவறுவதில்லை அடிமையாகப் பிறரை ஆட்டிவைக்க நினைப்போர் அழிவதில் வியப்பில்லை. இது வரலாறு தரும் வளமார் பாடம்!

கொடுமைகள் செய்து கொட்டமடித்து, குறுமதியாலும் நரிப்பண்பாலும் பொதுமக்களை நசுக்கியும் கசக்கியும் தீமைபல செய்து திமிர் பிடித்துப் பேயாட்டமாடிய பேராட்சிகளும், பேராண்மையாளர்களும் மாண்பிழந்து மதிகெட்டு மானமழிந்து மண்ணுகி மறைந்தனர். அவர்கள் அடிமை வெறியும் அழிந்தொழிந்தது. ஆம் அடிமை கொள்ள விரும்பியவர்கள் அடியோடு வாழ்விழந்து ஊர்பெயர் தெரியாமல் உருக்குலைந்து போயொழிந்திருப்பதையே உலகவரலாறு நமக்குக் காட்டுகிறது.

எந்த நாட்டிலும் உரிமை உணர்ச்சியைக் குலைக்க, கலைக்க, கெடுக்க, அழிக்க, ஒடுக்க எவ்வளவு கெடுபிடி நடந்திருக்கிறது! எவ்வளவு கொடுமை கூத்தாடியிருக்கிறது! எவ்வளவு அடக்குமுறை அள்ளிவீசப் பட்டு இருக்கிறது! உரிமை கேட்டவர்கள் உயிரைப் பறித்த கொடுங்கோலர் எத்தனைப் பெயர்கள்! உரிமைப் போரை ஒழிக்க முனைந்த அரசுகள் எத்தனை! ஆனல் உரிமை உணர்வை அடக்க முடிந்ததா? உரிமை எண்ணத்தை ஒடுக்கமுடிந்ததா? உரிமை எழுச்சியை எவராலுமே அழிக்க, ஒழிக்க முடியாது! அஃது இயற்கையின் கொடை! உரிமை பிறவி நோக்கம்! இதைப் புரிந்து கொள்ளாதவர்கள் தாம் அடக்கியாண்டுவிடலாம் என மனப்பால் குடிக்கின்றனர்! இறுதியில் உரிமை எழுச்சியால் வீழ்த்தப்பட்டு அழிகின்றனர்! உரிமைப் போர்கள் தோற்றதில்லை! உரிமையைப் பறித்த அரசுகள் வென்றதில்லை! உரிமையை அடக்கியவர்கள் வாழ்ந்ததில்லை! ஐரோப்பிய வல்லரசு நாடுகள் எத்தனை ஆசிய—ஆப்பிரிக்க நாடுகளை அடிமையாக்கி வைத்திருந்தன? இன்று நிலை யென்ன? ஆசிய—ஆப்பிரிக்க நாடுகள் உரிமைவேட்கை கொண்டு உரிமைப் போர் தொடர்ந்ததும் வல்லரசுகள் அஞ்சி நடுங்கின. ஆணவம் பேசி அடக்குமுறை வீசிய வல்லரசுகள் நாணமுற்றுப் பின் வாங்கின! அடிமை நாடுகள் வென்றன! உரிமை பெற்றன! உலகில் புகழ் வீசிப் பொலிகின்றன!

ஆம், உலகவரலாறு தரும் ஒப்பற்ற இப்பாடத்தை அரசும், மக்களும் மறக்கக் கூடாது.

அறத்தை நெடுங்காலம் ஏமாற்றவோ அழிக்கவோ தோல்வியுறச் செய்யவோ இயலாது. அறத்தின் வலிமை எவ்வகையிலேனும் எவர் வாயிலாகவேனும் உலகில் நிலைபெற்றேதீரும் உண்மையின் ஆற்றல் ஈடிணையற்றது. உரிமை அறத்தின் குழவி; உண்மையின் தங்கை. ஆகவே உரிமை வென்றே தீரும்.

உரிமை அல்லது விடுதலையுணர்வு ஒரு நாட்டுக்கு தனியான இயல்பன்று. அவ்வுரிமையை அரண் செய்து காப்பன அந்நாட்டுமொழியும் மொழிப்பண்பும், இலக்கிய இலக்கண வளமும், நாட்டுப்பண்பாடும், சான்றாண்மையும், அந்நாட்டுவரலாறும், கலையொழுக்கமும், மரபும், மக்கள் மறமாட்சியும், தலைமையியல் பூக்கமும் ஆகும்.

மரக்கலத்திலோ, கோட்டையிலோ கொடிமரம் வானுயர ஓங்கிநிற்கும். கொடிமரத்தில் பறக்கும் கொடி இன்றியமையா சிறப்புடையது; மதிக்கத்தக்கது. அக்கொடி போன்றது ஓரின ஒரு நாட்டு மக்களின் தனியுரிமை—தனிவிடுதலையவா. அக்கொடி மரத்தைக் காக்கும் அரணைப் பல தாங்கிக் கயிறுகள் நாற்புறமும் சுற்றிலும் இறுக்கிப் பிணைக்கப்பட்டிருக்கும். அக்கயிறுகள்தாம் வரலாறு, கலையொழுக்கம், நாட்டு மரபு, மொழிப் பண்பு, இலக்கிய இலக்கணவளம், நிலத்திணை, திணைச் சூழ்நிலை, சான்றோர், தலைவர்கள், புலவர், கலைஞர்கள் முதலிய மேன்மக்கள். அக்கயிறுகள் அறைந்து கட்டப்பட்டிருக்கும் முளைக்குச்சிகளும், முளைக்குச்சி வலிவோடு நிலைத்தூன்றி நிற்கும் நிலமும்தான் அந்நாட்டுத் தாய்மொழியும், சான்றாண்மையும், நாட்டுப் பண்பாடும், மக்கள் மறமாட்சியும், தலைமையியல் பூக்கமும் ஆகும். இந்த உண்மையைத் தெள்ளத் தெளிய மக்கள் உணர்ந்து கொண்டால், ஒரு நாட்டின் உரிமை எந்த நிலத்தில் வித்தூன்றப்பட்டு வேர் பரப்பி, முளைத்துக் கிளைத்து வளர்ந்து செழிக்கிறது என்ற உண்மையை நன்கறியலாம். தனி வாழ்வில்கூட உரிமை போற்ற வேண்டும் என நம்பிவாழ்ந்த இனம் தமிழினம். பெண்டிரே, இக்கொள்கையைப் பண்டைத் தமிழகத்தில் வற்புறுத்தினர். 'மூதின் முல்லை' துறை புறப்பொருளில் இடம்பெற்றது இதனாலேயன்றோ! பிற்கால அவ்வையார் பாட்டு அவர் கருத்தை—உரிமை விருப்பத்தைத் தெரிவிக்கும்:

"ஒன்றாகக் காண்பதே காட்சி, புலன் ஐந்தும்
வென்றான்தன் வீரமே வீரம்—ஒன்றானும்
சாவாமல் கற்பதே வித்தை; தனைப்பிறர்
ஏவாமல் உண்பதே ஊண்" (அவ்வையார்-தனிப்பா)

'பிறர் கட்டளைக் கடங்கி அடிமைத் தொழில் செய்து சாப்பிடும் உணவு; உணவேயன்று!' என்கிறார். தனியாருக்கே இந்த அறிவுரை என்றால் ஒரு நாடு எவ்வாறு தனியுரிமை போற்றி வாழவேண்டும் என்பதைக் கூறவேண்டுமா? ஒரு தனிப் பண்பாடுள்ள இனம் எவ்வளவு உரிமை வேட்கையோடு சிறந்துயர்ந்திருக்க வேண்டுமென்பதை உணர்த்த வேண்டுமா?

விடுதலை வேட்கை

—பெருந் தேவன்.

தொண்டை வறட்சி நீர் வேட்கையை உண்டாக்கல் போல், உரிமைவறட்சி விடுதலை வேட்கையை உண்டாக்குகிறது. நீர் அருந்தியதும் அந்தவேட்கை அப்போது அடங்கி விடுகிறது. ஆனால் அதுவாணாள் முழுவதும் அடங்கி விடுவதில்லை. மறுநாளும் அஃது எழுகிறது. அப்போது மறுபடியும் நீர் வேட்கை எழுகிறது. இதுபோன்றே உலக வரலாற்றில் விடுதலை வேட்கை எழுந்தால் அது முதலில் அடங்கி விட்டாலும், மறுபடியும் மறுபடியும் எழுந்த வண்ணமே இருக்கிறது. உரிமை வறட்சி இருக்கும் வரை விடுதலை வேட்கை விளைந்தே தீரும்.

விடுதலை வேட்கை உரிமை வறட்சியின் விளைவு என்றால் அடிமை வேட்கை உணர்வு வறட்சியின் விளைவே! விடுதலை வேட்கையைப் போன்றதே இந்த அடிமை வேட்கையும். ஏனெனில் இரண்டும் வறட்சியின் விளைவேயன்றோ! ஆனால் ஒரே ஒரு வேறுபாடு. அடிமை வேட்கை, நீர் வேட்கையைப் போலன்றிக் கள் வேட்கையைப்போன்றது. கள் வேட்கைக்கும், நீர் வேட்கைக்கும் உள்ள வேறுபாடு தெரிந்தால் தானாகவே அடிமை வேட்கைக்கும் விடுதலை வேட்கைக்கும் உள்ள வேறுபாடு தெரிந்துவிடும்.

உலக வரலாற்றில் விடுதலைவேட்கை விளைத்துள்ள வியப்பு நிகழ்ச்சிகள் விரிக்கின் பெருகும். வால்டேர், உரூசோ விடுதலை வேட்கை, 1789-இல் பிரான்சு நாட்டைக் குருதிமயமாக்கி, உலூயி மன்னராட்சியின் இறுதியை நாட்டிய புரட்சியாக முகிழ்த்தது. காரல் மார்ச்சின் விடுதலை வேட்கை,

---

முன்பக்கத் தொடர்ச்சி:

உரிமையை இழப்பது மானமிழப்பதைவிட இழிவானது. மானம் போற்றும் மன்பதை உலகில் பண்பார் மன்பதை. மானமிழக்கவும் துணியும் கூட்டம் நாகரிகமறியாக் கயமைக் கூட்டமாம். ஆகவே உரிமை வேட்கை மானவிழைவின் அடிப்படையினது. மானமும் உரிமையும் போற்றிக் கடமையாற்றுபவரே ஆகும். உரிமை நச்சும் பெருமை மன்பதை தமிழ்மன்பதை.

மொழிவளமும் மானவளமும் போற்றித் தமிழற உரிமை வாழ்வை நிலைநாட்டித் தமிழினம் சிறக்க வேண்டும். உலகிலேயே உயர்தனிச் செவ்வினமாகப் பண்டுவிளங்கிய பேராண்மை மானவரலாறு—புறநானூற்றுப் பூ வாழ்வு மீண்டும் மலரும். திண்ணம்.

உருசிய நாட்டில் "சார்" ஆட்சிக்கொரு முற்றுப்புள்ளி வைத்தது. இந்தியப் பெருமண்ணில் வெள்ளையராட்சிக்கு 1946-இல் முடிவு கட்டியதும் அண்ணல் காந்திபோன்ற அறவோரால் தூண்டப் பெற்ற விடுதலை வேட்கையே!

'உரிமை' என்ற சொல் ஒரே பொருளைமட்டும் குறிக்காது. உரிமை என்ற சொல்லால், பேச்சுரிமை, எழுத்துரிமை, கருத்துரிமை, மொழியுரிமை ஆகிய எல்லாவற்றையும் குறிப்பிடுகிறோம். எல்லாவற்றினும் இன்றியமையாதது கருத்துரிமையே! ஏனெனில் நம் கருத்துகளை வெளிப்படுத்தவே பேச்சு, எழுத்து, மொழி ஆகியவற்றை நாம் பயன் படுத்துகின்றோம். அந்தக் கருத்துரிமைக்காகவே பெர்ட்ரண்டு ரசல போன்ற பகுத்தறிவாளர்கள் இன்று தூவல்முனை கொண்டு போராடி வருகிறார்கள்.

'மக்களாட்சி' நாடு என்றும், 'குடியரசு' நாடு என்றும் பெருமையாய்ப் பிதற்றிக்கொள்ளும் இந்தியாவில், அதுவும் தமிழ் நாட்டில், கருத்துரிமை இல்லவே இல்லை. முதலில் களப்பிரரிடம் ஆட்சியைக்கொடுத்து அடிமைப்பட்டோம். பின்னர் ஆங்கிலேயனிடம் ஆட்சியைக் கொடுத்துவிட்டு அடிமைப்பட்டோம். ஆனால் இன்றோ தமிழனிடமே ஆட்சியைக் கொடுத்துவிட்டு அடிமைப்பட்டு வாழ்கிறோம். வரலாற்றிலேயே புதுமை!

எல்லாரும் உண்டு, உறங்கிக், களித்து மாளும் வாழ்வு வாழ்ந்தனர் ஒரு காலத்தில். ஆனால் அறிவுவளர்ச்சியின் காரணமாகத் தற்காலத்தில் எண்ணத் தொடங்குகின்றனர் பலர். எண்ணிய எண்ணங்களை எடுத்துரைக்க எவனும் விரும்பாமல் இருக்கமாட்டான். ஆனால் தனக்குப் பிடிக்காத எண்ணங்களை வெளியிடலைத் தடைசெய்யத் தயங்கவும் மாட்டான் அவன். இப்படிப்பட்ட காலத்தில் குமுகாய வாழ்வு அமைதியாக நடைபெறவேண்டுமாயின் கருத்துரிமை வேண்டும் என்பதற்காகவே உலகப் பகுத்தறிவாளர்களெல்லாரும் இன்று வேண்டிப் போராடுவது.

எங்கும் உரிமை வெள்ளம் அடக்க இயலா யாறெனப் பெருக்கெடுத்தோடும் இந்நாளில் அதைப் 'பாதுகாப்புச் சட்டம்' என்ற 'அணை' போட்டுத் தடுப்பது அறிவுடைமை ஆகுமோ? அதனால் கருத்துச் செறிவுடைமை சாகுமோ? எண்ண எழுச்சி எங்களைவிட்டு ஏகுமோ? என்றெல்லாம் வினாக்கள் நம் மனத்தில் எழுவது இயல்புதானே!

தன்னல மறுத்துத் தமிழுக்கே தன்னைத் தந்தோரைத் தடுக்க உலகில் யாரே உள்ளார்? மறைமுகச் சூழ்ச்சிகளை விடுத்து நேர்முகப் போருக்கு வர இவ்வையத்தில் யாரே உள்ளார்? தொட்டிலில் தொடங்கி, கட்டிலில் மலர்ந்து, சுடுகாடு மட்டில் செல்லும் வாழ்வைத் தாய்க்கெனத் தந்தோரைத் தடுக்க இவ்வுலகில் யாரே உள்ளார்? ●

எண்ணும் எழுத்தும்

—தரங்கை-பன்னீர்ச் செல்வன்.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்" என்பார்கள். அதையே சற்று விரித்து, "எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும் கண்ணென்ப வாழும் உயிர்க்கு" என்றுக் கூறியுள்ளார் வள்ளுவப் பெருந்தகை. கண்ணென்ப வாழும் உயிர்க்கு! எது வாழும் உயிர்? வள்ளுவர் கருதினார் மாந்த உயிர்மட்டுமே வாழும் உயிரென்று! உண்மைதான், எண்ணையும் எழுத்தையும் எண்ணிச் செயல்படும் ஒரே உயிர் மாந்த உயிர்தானே! மாந்த உயிர் மட்டுமே ஈராயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட வள்ளுவரின் எண்ணத்தில் இருந்திருக்கக் கூடும் என்பது மிகையல்ல. அஃதாவது, எண்ணும் எழுத்தும் தமிழ் மாந்த உயிர்கட்கு—தமிழர்களுக்கு, கண்களுக்கு நிகர் என்பது முடிவாகும்.

சரி, வள்ளுவர் எந்த எண்ணையும் எழுத்தையும் குறிப்பிட்டிருப்பார்? எனச் சற்று எண்ணிப்பாருங்கள். அவர் தமிழ் எண்ணையும் தமிழ் எழுத்தையும் தானே கருதியிருக்க முடியும். முதற்கண் எண்ணைப் பார்ப்போம்: இன்று நம் வழக்கில் வைத்திருக்கும் அரபு எண்களையா வள்ளுவர் கண்ணென்றிருப்பார்? இருக்கவே முடியாது என்பது ஓரளவுக்குத் தமிழுணர்ந்த ஒவ்வொருவருக்கும் தெரிந்ததே. உயர்தனிச் செம்மொழி என்று மொழியியலார் போற்றும் தமிழ் மொழியின் எண்கள் எவ்வாறு கேடுற்றன? தமிழர் எனக் கூறிக் கொள்ளுவோர் ஏன் அத் தமிழ் எண்களை இஞ்ஞான்று பயன்படுத்துவதில்லை? அறியாமை! என்ன, பள்ளியில் பற்பல பயின்று பட்டம் பெற்றவர்களுக்குமா அறியாமை? ஆம்; தமிழ் எழுத்துகளைச் சொல்லித் தருவார் இன்மையால் இவ்வறியாமை ஏற்பட்டுள்ளது. ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றது. ஏன் சொல்லித் தரப்படவில்லை? தமிழின் வளர்ச்சிக்குப் பாடுபடுவதாகப் (பொய்ப்) பறைசாற்றும் தமிழக அரசுதான் இவ்வினாவிற்கு விடையளிக்க முடியும்.

உலகெங்கும் பரவியுள்ள அரபு எண்களை விடுத்து, தமிழ் எண்களுக்குப் புத்துயிர் அளிக்கவேண்டிய இன்றியமையாமை என்ன? என எண்ணத் தோன்றும்! பாரெங்கும் பரந்துள்ள அரபு எண்களுக்கு மாற்று எண்கள் எம்மொழிக்கும் தேவையில்லை என்பது உண்மையாயின், "ஏக்", "தோ", "தீன்", "சார்" என்று எண் குறியீட்டால் இந்திப் பாடநூலில் எழுதுவார்களா? அஞ்சலட்டை, உள்நாட்டஞ்சல், அஞ்சல் தலைகள்

போன்றவற்றில் ஒருபுறம் அரபு எண்ணும், மறுபுறம் இந்தி எண்ணும் போடுவார்களா? இது பலவாண்டுகட்கு முற்பட்ட செய்தியன்று; அண்மையில் அஞ்சலட்டையின் விலை 'ரு' காசிலிருந்து 'கூ' காசாக உயர்த்தப்பட்டபொழுது தாள் நிறத்தை மாற்றுவதுபோல் பொறிப்பில் (Stamp) இந்தி எண்ணையும் இணைத்துவிட்டார்கள், ஏன் மாற்றினார்கள்? மொழிப்பற்று! இந்தியில் எழுதும் போது இந்தியில் எண்கள் இல்லை என்று எவரும் குறைகூறக்கூடாது என்னும் கொள்கை. அம்மொழிப் பற்றுத் தமிழர்களை விட்டு எங்கே போயிற்று?

அரபு எண்களை உடனடியாக-முழுமையாக நீக்கிவிட்டுத் தமிழ் எண்களைப் புகுத்த வேண்டும் என்றும் விரைந்த விழைவுடன் வழக்காட முன்வரவில்லை. வள்ளுவர் கருதிய வாழும் உயிரை, உலகினர் தாழும் உயிராக—மொழித் தன்னிறைவற்ற—நாகரிகமற்ற மாந்தக் கூட்டமாகக் கருதிவிடாமலிருக்கத் தமிழ் எண்களையும் ஏன் தொடக்கப் பள்ளிகளில் சொல்லிக் கொடுக்கக் கூடாது என்பதைத் தமிழர்களுக்கும், தமிழக அரசினருக்கும் நினைவூட்டவே விரும்புகின்றேன். (இவ்விடத்து அரபு எண்களும் தமிழ் எண்களின் திரிந்த வடிவமே என்று அறிஞர்கள் கருதுகின்றனர் என்பதையும் கூறிக்கொள்ளுகிறேன்).

இப்பொழுது எழுத்துகளுக்கு வருவோம்: வள்ளுவர் காலத்து எழுத்துகள் மட்டுமா இன்று தமிழில் வழங்குகின்றன? பன்னெடுங்காலமாகத் தமிழ்மொழி எழுத்துகளின் ஒலிவடிவம் மாறவில்லை, வரிவடிவம்தான் மாறிவந்துள்ளது. அருணகிரிநாதர் காலத்தில்தான் வடமொழி எழுத்துகள் தமிழில் புகுத்தப்பட்டன. ஏன் புகுத்தப்பட்டன? தமிழுக்கு ஆக்கம் தேடுதற்காகவாம்! இஃது உண்மைக்குப் பெரிதும் புறம்பான செய்தியல்லவா? வேற்று மொழிச் சொற்கள் தமிழுக்குத் தேவைப்பட்டால், தமிழியல்புக் குகந்தவாறு—மரபு மாறுபடாதவாறு மாற்றம் செய்தே ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். இது மூத்த முதுக்குறையாளர் தொல்காப்பியனார் யாத்த இலக்கணவரம்பு. ஏன் இஃதை அறியாதவர்களா அருணகிரியார் போன்ற இடைக்காலத் தமிழர்கள்? அறிந்தவர்தாம்; அவர்களுடைய சமயக் கோட்பாடுகள் தமிழில் வடமொழிச் சொற்களையும். பின்னர் அச்சொற்களுக்காக வடமொழி எழுத்துகளையும் புகுத்தச் செய்தன. அஃது அற்றைச் சமயக்கணக்கர் மதிவழிக்குப் பொருந்தலாம்; இற்றை மறுமலர்ச்சித் தமிழின் மாண்புக்கு மாசூட்டிவிடும் என்பதில் ஐயம் வேண்டா.

உலக மக்கள் பலருடைய கவனத்தைக் கவர்ந்துள்ள ஆங்கிலமொழிகூடத் தன்நெடுங்கணக்கிலுள்ள உகூ எழுத்துக்

நிலத்துக்குச் சுமை

தமிழவேள்.

"சோற்றுக்குக் கேடு, பூமிக்குப் பாரம்" என்பது ஒரு சொல்வழக்கு. இந்தச் சொல்வழக்கு திருவள்ளுவர் காலத்துக்கும் முற்பட்டது என்பது இதனைத்தம் நூலில் அவர் எடுத்தாண்டிருப்பதிலிருந்து தெரிகிறது.

பொருள் இல்லாமல் வறுமையிற் கிடந்து உழல்பவர்கள் மிக எளிதில் துறவை மேற்கொள்ளலாம். முற்றும் துறந்து துறவியாகிவிடலாம். என்றாலும் வறியவர் எவரும் துறவியாகாமல் பொருளை நாடி அலைந்து வாழ்வதையே பார்க்கிறோம். அத்தகையோரின் பற்றுள்ள வாழ்க்கை சோற்றுக்குக் கேடானதேயாகும். சோற்றுக்குக் கேடு என்று சொல்வது கூடச் சரியன்று. சோறு அவர்களுக்கு எங்கே கிடைக்கிறது? உப்பும் கஞ்சியும் தானே கிடைக்கின்றன? எனவே அவர்தம் வாழ்க்கை உப்புக்கும் கஞ்சிக்கும்தான் கேடு! துய்ப்பதற்குப் பொருள் இல்லாத நல்கூர்ந்தார் முற்றும் துற

முன்பக்கத் தொடர்ச்சி :

களைக் கொண்டுதானே இயங்குகிறது. பிறமொழிச் சொற்களைக் கடன் பெற்றால் (திருடினால்) தன் மொழி மரபுக்குகந்தவாறு மாற்றிய பின்னரே ஏற்றுக்கொள்கின்றது. காட்டாக, "அழகு" என்னும் தமிழ்ச் சொல்லை, "ALAGU" என்றோ, "AZHAGU" என்றோ எழுதுவதைக் கூறலாம். இங்கு "ழ" ஒலி இல்லை என்பதற்காக ஒரு புதிய எழுத்தை ஆங்கிலம் உருவாக்கிக் கொள்ளவில்லை என்பதை உன்னியுணர வேண்டும். கணக்கிறந்த வேற்று மொழிச் சொற்களை ஏற்றுக் கொண்டு, எஃது ஆங்கிலம் எனக் கூறவொண்ணாதவாறு கலப்பட மொழியாகிவிட்ட ஆங்கிலமே, இருக்கும் எழுத்துகளை வைத்துக் கொண்டு வாழும் போது, வேற்று மொழித் துணையின்றிப் பல்லூழி வாழும் பான்மையுள்ள உயர் தனிச் செம்மொழியான நம் தமிழ்மொழிக்கு மட்டும் வேற்று மொழிகளின் எழுத்துத்துணை இன்றியமையாதது தானோ?

தமிழ் மொழி என் மொழி, யான் தமிழன் எனக் கூறிக்கொள்ள எவரேனும் விழைவராயின் தமிழ்ச் சொற்களல்லாத பிற சொற்களையும், தமிழ் எழுத்துகளல்லாத வடமொழி எழுத்துகளையும் அறவே நீக்கிவிட்டு, நம் உயர் தமிழில் எழுதவும் பேசவும் வேண்டும். தமிழ் எண்களைத் தத்தம் தனி வாழ்க்கையில் நன்கு பயன்படுத்தி, அரசினரைப் பாடத் திட்டத்தில் அவற்றைச் சேர்க்கச் செய்ய வேண்டும். தழைக்க தனித் தமிழுணர்வு!

வாமல் இருப்பது உப்புக்கும் கஞ்சிக்கும் கூற்றே ஆகும் என்கிறார் திருவள்ளுவர்.

> "துப்புரவு இல்லார் துவரத் துறவாமை
> உப்பிற்கும் காடிக்கும் கூற்று"—குறள் 1050,

கஞ்சிக்குக் கூற்றாக இருந்தாலும் இருக்கலாம் சோற்றுக்குக் கேடாகக் கிடந்தாலும் கிடக்கலாம், ஆனால் நிலத்துக்கு மட்டும் சுமையாக இருக்கக்கூடாது.

நிலத்துக்குச் சுமையானவர் என்று திருவள்ளுவர் நால்வரைச் சுட்டிக் காட்டுகிறார். அவர்கள் இருப்பதும் ஒன்றுதான் இல்லாததும் ஒன்றுதான் என்கிறார் அவர்கள் இருப்பதினும் இறந்து ஒழிவதே மேல் என்கிறார் அவர்கள் உயிரோடு இருப்பினும் செத்த பிணத்திற்கே நிகர் என்கிறார். அதனாலேயே அவர்கள் நிலத்துக்குப் பெருஞ் சுமையாக இருக்கிறார்கள் என்கிறார்.

பிறரிடம் குற்றம் காண்பதையே தொழிலாகக் கொண்டு பிறரை அவர் தன்னால் தூற்றித்திரிவதையே வேலையாகக் கொண்டு இந்த உலகத்தில் சிலர் உலவிவருவதைப் பார்க்கிறோம் அல்லவா? நேரில் சிரித்துப் புகழ்ந்துபேசுவதும், பின்னால் குறைகூறிப் பழித்துரைப்பதும் அவர்களுடைய இயல்பாக உள்ளது அல்லவா? ஒருவருடைய குற்றம் குறைகளை நேரில் எடுத்துச் சொல்லத் துணிவு இல்லாதவர்கள் அவர்கள். அதனால்தான் அவர்கள் பிறருடைய குறைகளைப் பின்னால் சொல்கிறார்கள். எல்லாரும் மகிழும்வகையில் பேசி எல்லாரிடமும் நட்புக்கொண்டு பழகத்தெரியாதவர்கள் அவர்கள். அதனால்தான் அவர்கள் புறஞ்சொல் கூறி நண்பர்களையும் உறவினர்களையும் பகைத்துக் கொள்கிறார்கள். அறத்தை நல்லதென்று போற்றிக் கடைப்பிடிக்கும் மாசற்ற நெஞ்சம் இல்லாதவர்கள் அவர்கள். அதனாலேயே அவர்கள் புறங்கூறுதலாகிய சிறுமையான செயலில் ஈடுபடுகிறார்கள். தம்மோடு நெருங்கிப் பழகுவோரின் குற்றத்தையே பெரிதாகப் பின்னால் பேசும் அவர்கள், தம்மோடு பழகாத அயலாரைப்பற்றி என்ன பேசமாட்டார்கள்? முன்னால் ஒன்றும் பின்னால் ஒன்றும் பேசும் அந்தப் படிறுளத்தவர்கள் இந்த உலகத்தில் வாழ்வதைவிட இறந்து விடுவது அறநூல்கள் சொல்லுகின்ற ஆக்கத்தைத் தருவதாக இருக்கலாம் அல்லவா! இருந்தும் இறந்தவர்களான அவர்களுடைய சுமையை இந்த உலகம் எப்படித்தான் தாங்கிக் கொண்டிருக்கிறதோ? அவர்களையும் சேர்த்துச் சுமப்பதே தனக்கு அறம் என்று கருதி இந்த உலகம் சுமக்கிறதோ? என்று திருவள்ளுவர் வியப்படைகிறார்.

> "அறன்நோக்கி ஆற்றுங்கொல் வையம் புறன்நோக்கிப்
> புன்சொல் உரைப்பான் பொறை."—குறள் 189.

அன்பும் இரக்கமும் கொண்டு எல்லா உயிரையும் தன் னுயிர் போல் போற்றி வாழ்வதே மக்கள் தன்மையாகும். இந்த மக்கள் தன்மையற்ற மக்கள் சிலரும் உலகத்தில் இருக் கிறார்கள். அவர்கள் எவ்வுயிரையும் தம்முயிர்போல் எண்ணி இரங்கத் தெரியாதவர்கள். தம்மோடு பழகியவரிடமும் அன்பு காட்டத் தெரியாதவர்கள், அவர்களுடைய கண்கள் பிறர் துன்பம் கண்டு கலங்குவதில்லை; கண்ணீர் வடிப்பதில்லை; பிறருக்கு ஒரு துன்பம் என்றால் நெகிழ்ந்தோடி அத்துன்பத் தைத் துடைக்கத் தூண்டுவதில்லை. அவர்களுடைய முகத்தி லிருக்கும் கண்களைப்போலவே இருப்பினும் அவை கண் களல்ல, புண்கள். அந்தக் கண்கள் பார்க்கும் பார்வையில் நெகிழ்ச்சி புலப்படுவதில்லை. அன்பும் இரக்கமும் தென்படுவ தில்லை. கண்ணோட்டம் என்னும் கவின்பெரு வனப்பை இழந்த கண்கள் அவை. மரத்தின் கணுக்கள் கண்கள்போல் காணப்படினும் அந்தக் கணுக்களால் எந்தப் பொருளை யாவது எந்தக் காட்சியையாவது காண இயலுமா? கண் ணோட்ட மில்லாத கண்கள் காண இயலாத கணுக்களுக்கு நிகரே. அந்தக் கண்களைப் பெற்றவர்கள் கண்ணில்லாதவர் களே. அந்தக் குருடர்களுக்கு இந்த உலகம் அன்பாலும் இரக்கத்தாலும் தான் இயங்குகிறது என்பது தெரிவதில்லை. அத்தகையோரால் யாருக்கும் நன்மை இல்லை. அவர்கள் இந்த உலகத்தில் வாழ்வது உண்மையிலேயே நிலத்துக்கு ஒரு சுமைதான்: என்கிறார் திருவள்ளுவர்.

"கண்ணோட்டத் துள்ளது உலகியல் அஃதிலார்
உண்மை நிலக்குப் பொறை."—குறள் 572.

செல்வம் என்பது ஓரிடத்திலேயே முடங்கிக் கிடக்காமல் பலர்க்கும் பயன்படும் வகையில் பல இடங்களுக்குச் சென்று கொண்டே இருக்கவேண்டும். அப்போதுதான் செல்வத் தால் எல்லார்க்கும் நன்மையுண்டாகும்—வழியில் செலவழிக் காமல் பொருளைச் சேர்த்துவைப்பதிலேயே கண்ணும் கருத்து மாக இருக்கும் மாந்தர்களும் இருக்கிறார்கள். பொருளைச் செல வழிக்க மனமில்லாத 'பற்றுள்ளமாகிய இவறன்மையோடு வாழ்பவர்கள் அவர்கள், தாங்களும் சரிவர உண்ணுமல் பிறர்க்கும் ஒன்றையும் தராமல் பொருளுக்கே ஒருநோய்போல் அவர்கள் அதனைப் பற்றியிருப்பார்கள். அதனால் அவர்தம் பொருளெல்லாம் நன்மைக்குப் பயன்படாமல் அழியும் நன்றி யில் செல்வமாக இருந்து கெடும். தானும் துய்க்காமல் தக் கார்க்கும் ஒன்று ஈயாமல் செல்வத்தைக் குவித்துவைக்கும் அவர்களால் யாருக்கு என்ன நன்மை? அவர்கள் உயிர்வாழ் வது நச்சுத்தன்மையுடைய பழங்களைத் தரும் மரம் ஒன்று ஊர் நடுவே பழுத்திருப்பதைப் போன்றதுதான். யாரும்

அவர்களை நெருங்கமாட்டார்கள். யாரும் அவர்களிடம் அன்பு காட்டமாட்டார்கள். யாரும் அவர்களை மதிக்க மாட்டார்கள் அவர்களிடமுள்ள செல்வம் மிக்க அழகுடைய பெண் ஒருத்தி தனியாக வாழ்ந்து முதுமை எய்திக் கிழவியானதைப் போன்றதுதான். அவர்களுக்குப்பின்னல் எஞ்சி நிற்பது என்று சொல்வதற்கு ஒன்றுமே இருக்காது. அவர்கள் பிறர்க்கு எதையும் கொடுக்காமல் வாழ்வதால் பிறருடைய அன்பைக் காணுதவர்களாகிவிடுகிருர்கள். தங்கள் வயிற்றுக்கும் நல்ல உணவளிக்கத் தவறி அதனல் இன்பத்தை அறியாமல் தங்களைத் தாங்களே அழித்துக் கொள்பவர்களாகி விடுகிருர்கள். பொருளைச் செலவழிக்காமல் மேன்மேலும் சேர்க்க வேண்டுமென்ற பேரவாக் கொண்டு அறத்தையும் கைவிட்டு அறமல்லாத வழிகளில் பொருளீட்டுபவர்களாகி விடுகிருர்கள். செல்வத்தைச் சேர்த்துவைப்பதையே விரும்பிப் பிறர்க்கு ஒன்றைக் கொடுத்து உதவுவதால் வருகின்ற புகழை விரும்பாத மக்கள் உயிரோடிருப்பதும் செத்து மடிவதும் இரண்டும் ஒன்றுதான். அத்தகையவர் பிறப்பதே வீண். அவர்களுடைய பிறப்பே இந்த நிலத்துக்குச் சுமை தான் என்று திருவள்ளுவர் குறிப்பிடுகிருர்.

> "ஈட்டம் இவறி இசைவேண்டா ஆடவர்
> தோற்றம் நிலக்குப் பொறை."—குறள் 1003.

ஒரு நாட்டை ஆளுகின்ற அரசன் நேர்மையுடையவனகப் பண்புடையவனக, இரக்கமுடையவனகப் பொதுநலத்தை எண்ணிச் செயற்படுபவனகக் குடிமக்களைத் தழுவி ஆட்சி செய்பவனக இருக்க வேண்டும். குடிமக்களை—அவர்தம் நலன்களைப் பாதுகாப்பவனக இருக்க வேண்டும். குடிமக்களின் நலனைப் பாதுகாப்பதைவிடத் தன்னலனைப் பாதுகாத்துக் கொள்வதில் கருத்துடையவனக இருக்கக்கூடாது. குடிமக்களைத் துன்புறுத்திக் கொடுமைப் படுத்துபவனக இருக்கக் கூடாது. தன்கையில் ஆட்சி இருக்கிறது என்ற ஆணவத்தால் தருக்கித் திரிபவனக இருக்கக் கூடாது. ஆட்சி கோணுமல் செம்மையாக இருக்கும் வகையில் நடந்து கொள்ள வேண்டும். கொடுங்கோலனக இல்லாமல் செங்கோலனக இருக்க வேண்டும். மக்களை அச்சுறுத்தும் கடுங்கோலனக இருக்கவே கூடாது. செங்கோலில் கோணுதல் ஏற்பட்டுச் சில நேரங்களில் கொடுங்கோலாயினும் பின்னர் அது நிமிர்த்தப்பட்டு மீண்டும் செங்கோல் ஆகலாம். ஆனல் கடுங்கோல் மீண்டும் செங்கோல் ஆக முடியாது. நாட்டை ஆளும் அரசன் கடுங்கோலனக மாறினல் அவன் குடிமக்களின் பொது நன்மையைப் புறக்கணிப்பான். சான்றோர்களையும் நல்லவர்களையும் மதிக்கமாட்டான். அவர்களுடைய அறிவுரை

களுக்குச் செவிசாய்க்கமாட்டான். தன்னைக்காட்டிலும் நல்லவர்களும் சான்றோர்களுமே குடிமக்களால் பெரிதும் மதிக்கப்பட்டுப் போற்றப்படுவதைக் கண்டு அவன் அழுக்காறடைவான். அந்த அழுக்காற்றால் நல்லவர்களை யெல்லாம் அவன் காரணமில்லாமலே சிறையிலடைத்துத் துன்புறுத்துவான். செருக்கும் சினமும் கொண்டு குடிமக்கள் அஞ்சும்படியான கொடுமைகளைச் செய்வான். அவன் முகத்தில் எப்போதும் கடுமைதான் தவழ்ந்திருக்கும். அவன் வாயிலிருந்து எப்போதும் கடுஞ்சொற்கள்தாம் வெளிவரும். சின்னஞ்சிறு குற்றங்களுக்கும் அவன் தருகின்ற தண்டனை மிகப் பெரிதாக இருக்கும். "இந்தக் கடுங்கோலன் என்று ஒழிவானோ?" என்று மக்கள் மனம் நொந்து துயரப்படும் அளவுக்கு அவனுடைய ஆட்சி இரக்கமற்றதாக இருக்கும். "என்னை யார் என்ன செய்துவிட முடியும்?" என்ற தலைக்கனத்தோடு அவன் செய்கின்ற செயல்கள் எல்லாம் கொடிய செயல்களாக இருக்கும். அத்தகைய கயவனைச் சுற்றியும் ஒரு கூட்டம் இருக்கும். அந்தக் கூட்டம் அவன் செய்கின்ற செயல்களை யெல்லாம் பாராட்டி அவனுக்குத் துணையாக நிற்கும். அந்தக் கூட்டம் அறிவிலிகளின் கூட்டமாக இருக்கும். கல்லாதவர் கூட்டமாக இருக்கும். அந்தக் கூட்டத்தைக் கடுங்கோல் ஆட்சி செய்பவன் தன்னோடு பிணித்து வைத்துக் கொண்டிருப்பான். அவனும் அவன் ஆட்சியும் அவனைச் சூழ்ந்துள்ள அந்தக் கூட்டமும் இந்த உலகத்துக்கு மிகப்பெருஞ் சுமையாகும். அதைவிடப் பெருஞ்சுமை நிலத்துக்கு வேறு இல்லை. என்றே திருவள்ளுவர் திட்டவட்டமாகக் கூறிவிடுகிறார்.

"கல்லார்ப் பிணிக்கும் கடுங்கோல் அதுவல்லது
இல்லை நிலக்குப் பொறை"—குறள் 570.

புறங்கூறுவோனும் கண்ணோட்டமில்லாதவனும் பிறர்க்கு ஒன்று ஈயாதவனும் இந்த நிலத்துக்குச் சுமையானவர்கள் தாம் என்றாலும் அவர்களைவிடக் கடுங்கோலன்தான் பெருஞ் சுமையானவன். மற்ற மூவரால் நாட்டுக்கும் மன்பதைக்கும் பெருந்தீங்கு விளைவதில்லை. கடுங்கோலனாலோ மிகப் பெருந்தீங்கு விளையாமல் இருப்பதில்லை. எனவேதான் பிறன்பழி கூறுவோனைவிட, இரக்கமற்றவனைவிட, ஈயாதவனைவிட, தன்னலமே உருவாய் நல்ல குடிமக்கள்மீது தன் சினத்தைக் காட்டி அவர்களை அல்லற்படுத்திச் செருக்கோடு ஆட்சி செய்பவனே கொடியவன். அந்தக் கொடியவனின் சுமையைவிட நிலத்துக்குப் பெருஞ் சுமையானது வேறு எதுவும் இல்லை என்கிறார் திருவள்ளுவர்.

எழில்

—: ப. தேமொழி :—

கானகம்: [காவடிச் சிந்து]

தேனருவி திரையெழுப்பி ஓடும்!—ஆங்குத்
தேனருந்த வண்டுகளும் பாடும்—நல்
வானரங்கள் வன்மையொடு
ஒன்றுகூடி வாழ்வதனைக்
தொடங்கும்—இரவில்
அடங்கும்!

கழனி:

ஏறுகொண்டு உழவரீட்டம் செல்ல—பெண்கள்
சோறுகொண்டு அன்னமதை வெல்ல—நல்ல
நாறுகின்ற மலர்களெல்லாம்
வீறுகொண்டு மலர்வதனைக்
கண்டேன்—மகிழ்வு
கொண்டேன்!

சோலை:

பாலைமுல்லை நகையுடைய மாதர்—எங்கள்
சோலைவழி கனிகள்கொண்டு போவர்—ஆங்கு
மையல் கொண்ட காளையர்கள்
தையலரைக் கண்டுகளி
கூர்வர்—ஒன்று
சேர்வர்!

ஊர்:

ஏடுகொண்டு பள்ளிசெலும் பிள்ளை—ஆண்கள்
மாடுகொள்ள மாடுநிகர் இல்லை—பெண்கள்
வீடுகண்டு விழைவுகொண்டு
கேடுபோக்கி மக்கள்தனைக்
காண—வந்தால்
பேண!

நாடு:

செந்தமிழர் சூளுரைத்துக் கூடி—உள்ளம்
நொந்தெழுவர் நாட்டுநலம் தேடி—ஆங்குத்
தாய்தடுத்து நின்றிடினும்
மாய்தல்நிலை வந்திடினும்
சோரார்—துயர்
பாரார்!

வள்ளுவனார் பான்முறை.

புலவ, வித்துவ, ஒண். கி. சந்திரசேகரன், எம்.ஏ., பி.டி., பி.ஓ.எல்.

(ஈ) கைதூவேன் என்பது ஒழியாமை குறித்து நிற்றலான்,

மடியை மடியா வொழுகல் குடியைக்
குடியாக வேண்டு பவர் (61. மடியின்மை : 2)

என்றதனுள், 'தாம் பிறந்த குடியை மேன்மேலுயரும் நற்குடியாக வேண்டுவார் மடியை மடியாகவே கருதி முயற்சியோடொழுகுக வென்றதும்,

வினைக்கண் வினைகெட லோம்பல் வினைக்குறை
தீர்ந்தாரிற் றீர்ந்தன் றுலகு (62. ஆள்வினையுடைமை : 2)

என்றதனுள், வினையாகிய குறையைச் செய்யாது விட்டாரை உலகம் விட்டது; ஆதலால் செயப்படும் வினைக்கண் தவிர்ந் திருத்தலை ஒழிக வென்றதும்,

கலங்காது கண்ட வினைக்கட் டுளங்காது
தூக்கங் கடிந்து செயல்,

என்றதனுள், மனந்தெளிந்து செய்வதாகத் துணிந்த வினையின்கண் பின் கலங்காது நீட்டித்தலை யொழிந்து செய்க வென்றதும்,

அடுக்கி வரினும் அழிலா னுற்ற
விடுக்க ணிடுக்கட் படும் (63. இடுக்கணழியாமை : 5)

என்றதனுள், இடைவிடாது மேன்மேல் வந்தனவாயினும் தன்னுள்ளக் கோட்பாடு விடாதானுற்ற இடுக்கண் தாம் இடுக்கணிலே பட்டுப்போ மென்றதும்,

உள்ள மிலாதவ ரெய்தா ருலகத்து
வள்ளிய மென்னுஞ் செருக்கு (60. ஊக்கமுடைமை : 8)

என்றதனுள், இவ்வுலகத்தாருள் யாம் வண்மையுடையே மென்று தம்மைத்தாம் மதித்தலை யூக்கமில்லாதவ ரெய்தா ரென்றதும், கொள்ளப்படும்.

கைதூவேன் என்று தன்மை யொருமை வாய்பாட்டாற் கூறியது.

ஆற்றின் வருந்தா வருத்தம் பலர்நின்று
போற்றினும் பொத்துப் படும் (47. தெரிந்து செயல்வகை :8)

ஆகலானும், "உரமொருவற்குள்ள வெறுக்கை (61. மடியின்மை : 10) என்றாங்கு ஒருவனோடு கைதூவாமையை யியை புறுத்து நாட்டற்கு மாமென்க.

உ) அதிகாரத்தினுள்ளும்

"இடும்பைக்கே கொள்கலங் கொல்லோ" என்றது
இன்பம் விழையான் வினைவிழைவான் தன்கேளிர்
துன்பந் துடைத்தூன்றுந் தூண் (62. ஆள்வினையுடைமை:5)

என்றதனையும்,

மடிசெய்து மானங் கருதக் கெடும் என்பது
குடிமடிந்து குற்றம் பெருகும் மடிமடிந்து
மாண்ட வுஞற்றில வர்க்கு (61. மடியின்மை : 4)

என்றதனையும்,

ஆள்வினையும் ஆன்றவறிவும் என்றது
பொறியின்மை யார்க்கும் பழியன் றறிவறிந்து
ஆள்வினை யின்மை பழி (62. ஆள்வினையுடைமை ; 8)

என்றதனையும்,

சூழாமற்றானே முடிவெய்துந் தங்குடியைத்
தாழா துஞற்று பவர்க்கு—என்றது,
ஊழையு முப்பக்கங் காண்ப ருலைவின்றித்
தாழாது ஞற்று பவர் (62. ஆள்வினையுடைமை : 10)

என்பதனையும்,

"சுற்றமாச் சுற்றுமுலகு" என்றது
நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்பு பாராட்டு முலகு (100. பண்புடைமை : 4)

என்றதனையும்,

நல்லாண்மை யென்ப தொருவற்குத் தான்பிறந்த
இல்லாண்மை யாக்கிக் கொளல்" என்றது
கடைகொட்கச் செய்வ தாண்மை இடைகொட்கின்
எய்யா விழுமந் தரும் (67. வினைத்திட்பம் : 3)
குடியாண்மை யுள்வந்த குற்றமொ ருவன்
மடியாண்மை மாற்றக் கெடும் (61, மடியின்மை : 9)
பேராண்மை என்ப தறுகண்ஒன் றுற்றக்கால்
ஊராண்மை மற்றத னெஃகு (78. படைச்செருக்கு : 3)

என்பவற்றையும்,

"குடிசெய்வார்க்கில்லை பொழுது" என்றது
"வேந்தர்க்கு வேண்டும் பொழுது" என்றதனையும்,
"தமரகத்து மாற்றுவார் மேற்றை பொறை" யென்றது
பெருமை யுடையவ ராற்றுவா ராற்றின்
அருமை யுடைய செயல் (98. பெருமை ; 5)

என்றதனையும், ஆன்ற அறிவென்றது

மதிநுட்ப நூலோ டுடையார்க் கதிநுட்பம்
யாவுள முன்னிற் பவை (64. அமைச்சு : 6)

எங்கே மதிப்பு?

—அலை-கணக்காயன்.

தமிழ்ப்பெருநாட்டில் பண்டையநாட்களில் முடியாட்சி நிகழ்ந்தபோது, ஆசிரியர்களையும் புலவர்களையும் மன்னர்களும் மக்களும் போற்றிப் புரந்தனர் எனும் செய்திகளைக் கழக இலக்கியங்களிலும், கழகத்துக்குப் பிற்பட்ட நூல்களிலும் பரக்கக் காண்கின்றோம். இன்று குடியாட்சி மலர்ந்தும், ஆளுங்கணத்தார் ஆசிரியர்களையும் புலவர்களையும் நன்கு மதியாமையால் மக்களாட்சி மலரில் மணமில்லை என்றே கூற வேண்டிய இடர்நிலை ஏற்பட்டுள்ளது.

தன்னுண்மை மிக்க அந்நாட்களிலே கூட அரசன் ஆசிரியக் குழுகாயத்தைக் கண்டு அஞ்சினான். இஞ்ஞான்றோ, மக்களுக்காக, மக்களாலேயே தேர்ந்தெடுக்கப்பெற்ற மக்கள் தலைவர்களே—மாநில அமைச்சர்களே ஆசிரியர்களை அச்சுறுத்தி ஆளுங்கூட்டத்திற்கு வால்பிடிக்க வன்முறையில் வழி வகுக்கின்றனர். நாடாள்வோரின் வறட்டுக் கருத்துகளை எல்லாம் கண்ணைமூடிக்கொண்டு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதோடு, மாணவர்களுக்கும் கற்பிக்க வேண்டும் என வற்புறுத்துவது வளருங் குழுகாயத்தைத் தளரச் செய்து விடும்.

"ஊதியம் கொடுப்பவர்கள் சொல்வதைக் கேட்க வேண்டாவா?" என்கிறது ஒரு சோற்றுக் கும்பல்! ஊதியத்

செயற்கை யறிந்தக் கடைத்து முலகத்
தியற்கை யறிந்து செயல் (64. அமைச்சு . 7)

அறிவற்றங் காக்குங் கருவி செறுவார்க்கு
முள்ளழிக்க லாகா வரண் (43. அறிவுடைமை : 1)

என்றவற்றையும், "குற்றமிலனாய்" என்றது,

குற்றமே காக்க பொருளாகக் குற்றமே
யற்றந் தரூஉம் பகை (44. குற்றங்கடிதல் : 4)

என்றதனையும் நினைவுறுத்துமாறு காண்டும்.

(தொடரும்)

திருத்தம் :—(சுறவ) மாத இதழில் 27-ஆம் பக்கமும், 41-ஆம் பக்கமும் வள்ளுவனார் பான்முறை அச்சிடப்பெற்றுள்ளது. பக்கம் 41-ல் தொடங்குவதனை 6-ஆந் தொடர் என்றும், பக்கம் 27-ல் தொடங்குவதனை 7-ஆந் தொடர் என்றும் கொண்டு படிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். (ஆ-ர்)

திற்காகக் கடனாற்றும் உலுத்தர் கூட்டமன்று ஆசிரியர் குழாம்; கற்றதைக் கற்பிக்கும் கடவுளர்கள்; பெற்றதைப் பெறுவிக்கும் பெருந்தன்மையாளர்கள். அவர்தம் நெறி நேரியது. அவர்தம் பணி பிறரதைப்போல் பிழைப்பைச் சார்ந்ததன்று; பெருமை சான்றது. அல்லாக்கால் "எழுத்தறிவித்தவன் இறைவனாகும்" என அதிவீரராமர் அன்றே உரைத்திருப்பாரா? ஏன் இவ்வுண்மையை இன்றைய மக்கள் உணரவில்லை? உணர்த்துவாரில்லை; உணருவாருமில்லை.

மேலும், அடிப்படைக்கல்வி புகட்டும் தொடக்கப் பள்ளி ஆசிரியர்களைக் கண்டால் பொதுமக்கள் வெறுக்கும் அளவுக்கு அரசினர் அவர்களை நடத்துகின்றனர். பள்ளிப் பகலுணவுத் திட்டத்துக்காக "அன்னக்காவடி" தூக்கும் ஆசிரியர்களுக்குக் குமுகாயம் எங்ஙனம் மதிப்புத் தரும்?

போதாக் குறைக்கு ஊராட்சி ஒன்றிப்புகளில் பணியாற்றும் ஆசிரியர்களைக் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம், சிறு சேமிப்புத் திட்டம், வளரும் மாதச்சேமிப்பு, பொன்முறி (தங்கப்பத்திர) விற்பனை, பாதுகாப்பு முறி விற்பனை போன்ற செயல்களில் ஈடுபடச் செய்தால் ஆசிரியர்களைப் பொதுமக்கள் அறப்பணியாளர்கள் எனக் கருதுவார்களா? அல்லது அரசினரின் விற்பனையாளர் மற்றும் விளம்பரப் பலகைகளாகக் கருதுவார்களா? என்பதை உன்னியுணர வேண்டும்.

இவ்வாறெல்லாம் பொறுப்பற்ற முறையில் ஆசிரியர்களை நடத்தும் ஆட்சியாளர்கள் கூறுகின்றார்கள். ஆசிரியர்கள், அவர்கட்குத் தொடர்பற்ற அரசியலில் கலக்கக்கூடாது என்று; இஃதென்ன முறைகெட்ட கூற்று? தங்களுடைய விளம்பரப் பலகையாக மட்டும் ஆசிரியர்களை வலிந்து பயன்படுத்திக் கொள்ளலாம், அச்செயல் அவர்களை அரசியலில் புகுத்துவதாகாதா? அன்றியும் இந்நாட்டு மக்களின் உணர்ச்சிகளைத் துளியும் மதியாமல் இந்தியைப் புகுத்திவரும் இத்தன்னாண்மை (சர்வாதிகார) ஆட்சியை, தமிழ் மக்களுக்காக, தமிழ்ப்பணியாற்றும் தன்மானமிக்க ஆசிரியர்கள் எங்ஙனம் ஏற்பர்?

இடைக்காலத்தில், "ஊருக்கிளைத்தவன் பிள்ளையார் கோயிலாண்டி" என்னும் பழமொழி ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது. தற்கால நிலையை நினைவில் கொண்டு எண்ணிப் பார்த்தால், "ஊருக்கிளைத்தவன் பள்ளிக்கூட ஆசிரியன்" என்னும் புதுமொழி வருங்காலத்தில், ஏற்பட்டாலும் வியப்பதற்கில்லை. மாறாகப், பழங்காலத்தில், "ஆசிரியர் இல்லா

கண்ணீரில் வாழ்வேன்! தென்கச்சி. கோ. சாமிநாதன்.

நாள்வந்து போகும்—நான்வந்து போவேன்!
நான்வந்து போவேன்!—மனம்வெந்து போகும்.
மனம்வெந்து போகும்—மயக்கத்தில் வீழ்வேன்;
மயக்கத்தைத் தந்த—மகன் என்ன ஆனான்?

பெண்ணும்ஓர் உயிரே!—தெரியாதா என்ன?
பிழைசெய்தாள் இல்லை!—புரியாதா என்ன?
அன்புள்ள நெஞ்சம்—எரியாதா என்ன?
அழகான மேனி—கருகாதா என்ன?

(முன் பக்கத் தொடர்ச்சி)

ஊரில் குடியிருத்தல் கூட நன்மை பயக்காது" எனும் கருத்து நிலவியதாகக் கீழ்வரும் திரிகடுகச் செய்யுள் விளக்குகிறது.

கணக்கா யரில்லாத ஊரும் பிணக்கறுக்கும்
மூத்தோரை இல்லா அவைக்களனும் பாத்துண்ணும்
தன்மை யிலாளர் அயலிருப்பும் இம்மூன்றும்
நன்மை பயத்தல் இல.

இப்பாடலையும் இன்றைய நிலையையும் ஒப்புநோக்கும் போது கண்களில் நீர் பனிக்கிறது.

ஆசிரியர்கள் பண்டைத் தமிழகத்தில் பெற்றிருந்த மதிப்பை மீண்டும் பெறவேண்டும். அதற்கு எந்த ஆட்சியின் அரசியலும் குறுக்கே வரக்கூடாது. ஆசிரியர்கள் எக்கட்சித் தலையீட்டுக்கும் இடங்கொடாத தனிப் பண்புடன் இயங்க வேண்டும். அரசினர் ஆசிரியர்களின் அன்பைப்பெற வேண்டுமே யல்லாது, அவர்களுக்கே அறிவுரை பகரக்கூடாது. கற்பிக்கும் கணக்காயர்களைக் கடைவிரிக்கும் வணிகர்களாக்கக் கூடாது. அப்பொழுதுதான் மக்கள் மதிப்பர். இன்றேல், நாட்டின் வருங்கால வளர்ச்சியும் நாடாள்வோரின் நிலையும் நகைப்புக்குரிய தாகிவிடும் என்பதில் அணுவும் ஐயமின்று.

மணம்கொள்ளும் முன்னே—மனம்தந்தேன், உண்மை
மனம்தந்த தாலே...உடல்தந்தேன், ஐயோ!
உயிர்தந்தி ருந்தால்—உலகென்னை வாழ்த்தும்.
உயிர்ஒன்று பெற்றேன்—இனிஎன்ன செய்வேன்?

இருவர்க்கும் உண்டே—மானத்தில் பங்கு.
எவருக்கும் உண்டே—உள்ளத்தில் அன்பு.
வருகின்ற நாளை—நானெண்ணி வாழ்வேன்.
வாழ்நாளில் ஒன்று—நான்செய்ய வேண்டும்.

நாள்வந்து போகும்—மகவொன்று காண்பேன்.
நான்பெற்ற சீரை—அவனுக்குச் சொல்வேன்.
கதைகேட்ட பிள்ளை—கருத்தாக வாழும்.
கதைசொல்வ தற்கே—கண்ணீரில் வாழ்வேன்!

பனி!

அமிர்தலிங்கம், அண்டர்பந்தி.

நெல்முதலாம் பல்லுயிர்க்குச் சிற்றுணவும் ஈந்தாய்!
மெல்லியவெண் துகிலாக வியன்ஞாலம் போர்த்தாய்!
புல்முடிகள் அத்தனைக்கும் புகழ்முத்தம் சேர்த்தாய்!
சொல்லுகின்ற செய்திகொண்டு தொலைநோக்கிச் செல்லும்
மெல்லியநீள் கம்பியினில் முத்துமணி கோத்தாய்!
பல்வகையால் நலஞ்செய்வாய்! பனியே, நீ ஆனால்
தொல்புகழ்சேர் உன்பகையைத் தொழுதெழுவோம் என்றோ,
சில்என்றே எமை நடுங்கச் செய்கின்றாய் நன்றோ?

என் கடன்...!

எ. நிர்மலா, தாராபுரம்.

முக்கழகத் தொட்டிலிலே மூவேந்தர் தாலாட்ட
முதுபுலவர் பாட்டிசைக்க நீ வளர்ந்தாய் செந்தமிழே!
மதுரைமா நகரதிலும் மாவைகை ஆறதிலும்
நெருப்பிலிட்ட சுவடதிலும் நிலைத்துநின்றாய் வண்டமிழே!
கற்றோரின் நாவதிலும் கல்லாதார் நினைவதிலும்
கல்லதனை உருக்கிவிடும் கண்போன்ற இசைதனிலும்
கனிவான மொழிபேசும் கிள்ளையதன் நாவதிலும்
கண்ணெனவே வளர்ந்திட்ட கன்னல் தமிழணங்கே!
உன்றன் பெருமையினை உலகோர் உணர்ந்திடினே
என்றன் கடனுக்கே இனியென்னை கூறுதியால்?

அடிப்படை மாறுமோ?

புதுவை—சுப்பிரமணியன்.

உழவர்கள் உழைப்புக்குத் தலைதாழ்த்தும் நாடே
உலகத்தில் உயர்வோடு தலைதூக்கும் நாடு!
சுழல்வைத்த உலகத்துக் கச்சாணி யன்ன
சோறளிக்கும் கூட்டத்தைச் சோர்வடையப் பண்ணி

அழவைத்து வேடிக்கை பார்க்கின்ற நாடோ
அழுகிப்போய் அழிவுக்குப் துணைபோகும் நாடாம்!
அழல்வைத்த செங்கதிரோன் ஆட்சியுள மட்டும்
அடிப்படையாம் இந்தநிலை மாறுது சற்றும்!

அமைகின்ற நாடுமொழி நிறம்இவற்றி னாலே
ஆயிரமாய்ப் பிரிந்துள்ள மக்களினத் துள்ளே
தமதென்று சொல்லாமல் தாம்விளைந்த தெல்லாம்
தாழாமற் பிறர்க்களித்து மகிழ்கின்ற வாழ்வே
தமதென்று கொள்கின்ற உழவர்கள் தாமே
தலைமக்கள் ஆவார்இவ் வுலகத்தில் என்றும்!
அமிழ்தென்ற ஒளிபாய்ச்சும் நிலவுள்ள மட்டும்
அடிப்படையாம் இந்தநிலை மாறுது சற்றும்!

ஏர்த்தொழிலின் பின்னே தான் எத்தொழிலும்! உலகில்
எப்படையும் உழுபடைக்குப் பின்னே தான்! எண்ணில்
போர்த்தொழிலின் படைக்கலங்கள் எல்லாமே மண்ணிற்
புதைகின்ற கலப்பைக்குப் பின்னே தான் விண்ணின்
நீர்த்துளியை வரவேற்று நிலவுலகை ஓம்பும்
நிறைபணியின் பின்னே தான் பிறபணிகள் எல்லாம்!
ஆர்த்தெழுந்து பொழிகின்ற மழையுள்ள மட்டும்
அடிப்படையாம் இந்தநிலை மாறுது சற்றும்!

இகல்வலியால், இடைவந்த குலப்பிரிவால் ஒருசார்
இனவாழ்வுக் கென்றமைந்த குடிப்பிறப்பால் இக்கால்
நிகழ்ந்துவருந் தேர்தலினால் இன்னும்பல் வகையால்
நிலமாளப் பெறும்உரிமை நிலைகெட்டுப் போகும்!
பகலிரவாய்ப் பாடுபடும் உழவர்களோ என்றும்
பட்டயமொன் றில்லாது நிலமாண்டு வருவார்!
அகல்கின்ற நெடுவான வெளியுள்ள மட்டும்
அடிப்படையாம் இந்தநிலை மாறுது சாற்றும்!

உடுக்கைக்குப் பஞ்சம்நல் உணவுக்குப் பஞ்சம்!
உட்கார்ந்தால் இடிக்கின்ற ஓலைக் கூடொன்றில்
படுக்கைக்குப் பஞ்சம்;தந் தேவைக்கே பற்றும்
பணத்திற்கும் பஞ்சந்தான்; ஆனாலுங் கழனி
கொடுக்கின்ற உழைப்புக்கும் அதிற்காணும் இனபக்
கொள்ளைக்கும் பஞ்சமிலை உழவர்க்கெந் நாளும்!
அடுக்குற்றுச் சுழல்கின்ற கோளுள்ள மட்டும்
அடிப்படையாம் இந்தநிலை மாறுது சற்றும்!

மழைத்துளியை வரவேற்று மண்குளிரும்! அம்மண்
வயலென்ற பெயரோடு திகழுமிடந் தோறும்
தழைத்துவவர் பசுமையினால் விழிகுளிரும்! அப்பால்
தலைசாய்ந்து நடிக்கின்ற பொற்கதிர்கள் காண

உழைத்துவரும் உழவர்கள் உளங்குளிரும்! அவர்தம்
உளங்குளிர உலகத்தார் இலங்குளிரும்! காலம்
அழைத்துவரும் அறுபருவக் கூத்துள்ள மட்டும்
அடிப்படையாம் இந்தநிலை மாருது சற்றும்!

நிலையற்ற உலகத்தின் நிலைபெற்ற இன்பம்
நிலமடந்தை மடிமீதில் உழுதுபெறும் இன்பம்!
முலைபற்றிச் சுவைக்கின்ற குழவிபெறும் இன்பம்
மூவாத இயற்கைத்தாய்த் திருவருளி ஞலே
விலையற்ற மாணிக்க மாகவயல் தோறும்
விளைகின்ற அமுதுண்டு வாழ்கின்ற இன்பம்!
அலையேற்றி விளையாடுங் கடலுள்ள மட்டும்
அடிப்படையாம் இந்தநிலை மாருது சற்றும்!

மண்ணுய்ந்து பயன்விளக்கும் மாண்புடைய வாழ்வு
மழையாய்ந்து பயிர்விளக்கும் உயிர்ப்புடைய வாழ்வு
விண்ணூர்ந்த வெம்மையிலே விளைவுகொளும் வாழ்வு
வீசுமிளங் காற்றினிலே விளையாடும் வாழ்வாம்!
எண்ணூர்ந்த பருவத்தின் இயல்கண்ட வாழ்வும்
இயற்கையுடன் இயைகின்ற உழவர்தம் வாழ்வே!
அண்ணுந்து பார்க்கின்ற மலைகளுள மட்டும்
அடிப்படையாம் இந்தநிலை மாருது சற்றும்!

தமிழ்ப்பகை மாய்ப்பீர்! கடலூர், ப. முத்துச்சாமி.

பன்னரிய பெருஞ்சிறப்பால் பார்மிசையி லென்றும்
பாங்குநிறை வாழ்வமைத்தே ஆண்டதமிழ் நாட்டீர்!
மன்னியசீர்ப் புகழ்மிளிர மாத்தமிழைப் பேணி
மன்பதையில் சிறந்தொளிர்ந்த மாண்பமைநன் ஞட்டீர்!
நன்னெறியும், வன்மறமும், நற்குடியின் பீடும்,
நாடாண்ட கோன்முறையும் சீரமையப் பெற்றே
இன்முறையால் ஏற்றமுறக் கோலேச்சி வாழ்ந்தோர்
இனத்தவரின் பிறங்கடையாய் இலங்குகின்ற நாட்டீர்!

கடலாண்ட காவலர்நும் மரபுவழி அன்ருே?
கயற்புலிவில் முக்கொடியும் புகழ்கூறும் அன்ருே?
உடலுயிரும், உறுபொருளும், உலகத்திவ் வாழ்வும்
ஒண்டமிழுக் காமாயின் கிளர்ந்தெழுவீர் இன்றே!
வடபுலத்தோர் அடிவருடும் வன்னெஞ்சர் தம்மை
வாய்பிளந்து, குடர்மாலை பூண்டிடுவீர் வென்றே!
கடல்போலும் முழங்கிடுவீர்! இடிபோலும் ஆர்த்துக்
கனித்தமிழின் வாழ்வோங்கப் பகைமாய்ப்பீர் நன்றே!

மறைந்து வரும் தமிழ்ச் சொற்கள்.

(உயர்தனிச் செம்மொழியான நம் தமிழில் நுண்ணிய பொருள் உணர்த்தும் உலக வழக்குச் சொற்கள், இன்று புதுமை நாகரிகத்தின் பரபரப்பும் ஆழமின்மையும் மிகுதியும் பரவாத நாட்டுப்புற மக்களின் ஊடே வாழ்க்கையில் பயிலப் பெறுவனவேயல்லாமல், பிறவிடங்களில் மறைந்து விட்டன வென்றே கூறலாம். அச்சொற்களை மக்கள் மறந்து போகாமல் செய்தலும், அவற்றின் நுணுக்கமும் சிறப்புமறிந்து அவற்றை இலக்கிய நடைமுறை வழக்கில் பயன்படுத்தலும் நம் கடனாகும். எனவே தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலும், ஈழநாட்டின் தமிழ் வழங்கும் பகுதிகளிலும் சேரலம் போன்ற அண்டை மாநிலங்களிலும் உள்ள மாணவரும், ஆசிரியரும், தமிழன்பரும் தங்கள் தங்கள் வட்டாரங்களிலும், அண்டை அயற் சிற்றூர்ப் பகுதிகளிலும் வழங்கி வரும் அவ்வரிய அருகிய சொற்களைத் தொகுத்துத் தென் மொழிக்கு விடுக்க வேண்டுகின்றோம்.)

கீழுள்ள சொற்களைத் தொகுத்தனுப்பியவர்.

ம. இராயப்பன், கெட்டலக்குறிச்சி, ஆண்டிமடம் (வழி) உடையார்பாளையம்-வட்டம்.

ஆயல்-கொய்தல், பறித்தெடுத்தல்.

ஊத்தால்-ஏரி குளங்களில் மீன் பிடிக்கப் பயன்படும் கருவி.

ஒழுங்கை-இருபுறமும் வேலியுள்ள செவ்வையான சிறு பாதை.

ஓரி-நீரில் மூழ்கிச் சென்று ஒருவரையொருவர் பிடிக்கும் விளையாட்டு, தனிமை.

கலிக்காணம், கலிக்கம்-நகைமொழி, பகடி பேசல்.

கலுங்கு-ஏரிகளில் அளவிற்குமிகையான நீர் வெளியேறப் பயன்படும் வடிகால், மதகு.

காப்பு-கொலுசு, பெண்கள் காலில் அணியும் அணி.

குடும்பு-கொத்து, கூட்டம், குண்டி-வயிறு (குடல்)

கொப்பி-மாடுகளின் கொம்பு நுனியில் செருகப்படும் மாழை அணி.

சல்லிசு-மலிவு, எளிது.

சால் (சாலு)-கிணறுகளிலிருந்து நீரை வெளிக்கொணர ஏற்றங்களில் பயன்படும் கருவி.

சிமுக்கு-மரக்குச்சி. சுள்ளி-சிதறிய மரத்துண்டுகள், விறகு.

தடுக்கு-சிறு விரிப்பு. துப்பு-திறமை.

தொம்பை-கூலங்களைச் சேர்ந்துவைக்கப் பயன்படுவது.

பத்தாயம்-மரப் பலகையினால் செய்யப்பட்ட சிறு தானியக் களஞ்சியம்.

பயிர்-ஆண்மகன். பழுதை-நெற்றாளால் முறுக்கப்பட்ட கயிறு.

பொருணி, புறணி (பேசுதல்)-தாழ்வாகப் பேசுதல்.

மங்கு-மண்ணாற் செய்யப்பட்ட குடுவை (குவளை போன்ற ஏனம்)

மாசி-முகில், மேகம். வக்கு-செல்வம், திறமை.

வட்டை-மரவண்டிகளின் சக்கரங்களில் (ஆரைக்) கால்கள் பொருந்தும்படியுள்ள வளைவான மரத்துண்டுகள்.

வாசி-(வட்டியோடு கூடிய) கூலக் கடன்முறை.

வாரி-சிற்றோடை. விளா-ஏர் உழும் நிலத்தின் பகுதி.

வெண்டு-காய்ந்த நெற்றாள், அல்லது கொடி போன்றவற்றைப் பெரிது பெரிதாக முறுக்கி வைக்கப்படும் கட்டு.

கீழுள்ள சொற்களைத் தொகுத்தனுப்பியவர்.

சூரை. இளந்திரையன், நெடுமறம்-அஞ்சல், திருப்பத்தூர்-கூற்றம், முகவை-மாவட்டம்.

ஆனா-தந்தை (விளிச்சொல்) ஆணம்-குழம்பு.

ஏனம்-கொள்கலம். (பாத்திரம்) இடுக்கி-(நெருப்பெடுக்கும்) குறடு.

ஆயி (ஞாய்)-தாயை விளிக்கும் சொல்-(தாய்)

ஆலவட்டம்-விழாக் கூட்டங்களில் (ஆலத்தி)

ஆலாத்தி-ஆரத்தி.

கங்காணி, கண்காணி-ஆளோட்டி, வேலை வாங்குவோன்.

கொங்காணி-மழை அங்கி (தென்னை மட்டையால் செய்த கவிப்பு)

தாழி, குறுது-குதிர், அகளம், நெல் கொட்டிவைக்கும் பெரிய மட்பாண்டம்.

வட்டி, (கிண்ணி) கும்பா-ஏனங்கள், கிண்ணுதல்-ஓடுதல்.

அசதி-அயர்ச்சி அசுசி-அருவருப்பு, துப்புரவின்மை.

அழுகுணி-அழுபிள்ளை. இசகு பிசகு-முறைகேடு.

ஈளை-கோழை, சளி. உதிரி-உதிர்ந்தது, ஒற்றை (ஒண்டி)

உரஞ்சுதல்-தேய்த்தல். உழுவை-புலி

உளுவை-ஒரு (கண்மாய்) மீன், உளவு-உண்மையறிதல்.

எகத்தாளம்-பரிகாசம், ஊக்காளம்-மாடு (துள்ளி ஓடிக் கொண்டே) எழுப்பும் ஒலி.

ஏசுதல்-இகழ்தல்.

ஓட்டாங்குச்சி-மட்கல ஓடு. காடி-புளித்தநீர், கள்.

காவணம்-பந்தல், சோலை. கடிகை-குத்துக்கோல்.

குமட்டல்-வாந்தி, கும்மாயம்-பச்சைப் பருப்புக் குழம்பு, பாயசம்.

குலே-கொத்து, கூந்தாலி-கடப்பாரையின் ஒருவகை.
பீக்காசு-(மண்ணைக் கொத்தும்) கோடரி.
கேணி-சிறு கிணறு, சுடலே-சுடுகாடு.
சுரணை-உணர்ச்சி, சொச்சம்-மீதி.
தப்பு-தப்பட்டை, நையாண்டி-சிரிப்பு, பகடி.
பட்டி-சிற்றூர், பணயம்-ஈடாகவைத்த பொருள்.
பொட்டணம்-சிறு மூட்டை, போக்கிலி-கதியற்றவன்.
தீட்டு-விலக்கு, மெச்சுதல்-புகழ்தல்.
நொசநொசத்தல்-நொந்து (கெட்டுப்) போதல்.
திகைதல்-முடிவு செய்தல் (வரையறுத்தல்)
துவைதல்-கடப்பாரை (நுனி)யைக் கூராக்கல்.
இடுக்கு முடுக்கு-சிறு சந்து, பறட்டைத்தலே-சீவாத்தலே.
கும்முதல்-குத்துதல், துவைத்தல், மொட்டுதல்-குட்டுதல்.
பளிச்சென்று-வெளிச்சமாய், சுப்பி-காய்ந்த விறகு (சுள்ளி)
சிவலே, செவலே-சிவப்பு (நிறமான) மாடு.
கூமுட்டை-கெட்ட முட்டை, ஊமுட்டை.
வெஞ்சணம்-கூட்டுக்கறி, மொத்தை-திரண்டது. பெரியது, மொந்தை.
நொடி-பள்ளம், குழி, துப்புத்துரவு-உண்மையறிதல்.
துப்பு(க் கெட்டவன்)-மானம் கெட்டவன்.
பொல்லம் பொத்தல்-ஓட்டையுள்ள ஓலேப்பெட்டியை முடைதல் அல்லது மூடுதல்.
நோஞ்சான்-மெலிந்தவன்.
நட்டமை-(நிற்கிருன்)-எழுந்து (நிலேயாய்) நிற்கிருன்.
நொங்குதல்-நையப்புடைத்தல்.
ஒரு மடக்கு-ஒரு வாய், ஒரு விழுங்கு.
புறணி-பொய், பீத்தல்-கந்தை.
கரட்டா ஓந்தி-ஓணன் வகையில் ஒன்று.
செத்தை-குப்பை, கூலம்.
கீழுள்ள சொற்களைத் தொகுத்தனுப்பியவர்.
திரு. மூத்துரெங்கராசன், கோம்பை (வழி)
உத்தமபாளையம் (மதுரை)
மேட்டாங்கால்-மேடான இடம்.
கொட்டம்-மாடடையும் இடம், தொழுவம்-ஆடடையுமிடம்
கோம்பைக்காடு-மலேயொட்டிய காடு,
முக்கு-இருவழிகள் கூடுமிடம்.
நல்லி-எலும்பு மூட்டு, சாவி-விளேயாத பயிர்.
கூலிப்படி-அரைப்படி, தடம்-பாதை.
ஒழுகால்-குறுகிய பாதை. ஓவாய்-மலேகளிடைவெளி.
கும்பு-கூட்டம், புலம்-பகுதி.
கந்து-சின்னபின்னம், மூடக்கு-இரு மலேகள் சேருமிடம்.

அச்சக அமைப்பு

மூவாண்டுக் கடன் திட்டம்

(1-2-66 முதல் 31-2-66 முடிய அலுவலகத்திற்கு வந்த தொகைகள்)

க. கடன் (பத்து உருபா) வகை

வரிசை எண்	முகவரி	உருபா	சான்றிதழ் எண்
1.	திரு. பஞ்சலிங்கம் வந்தே கவுண்டன் சாலை (வழி) மதுக்கரை	10	85
2.	திரு. சத்திவேல் பெங்களூர்-அ	10	86
3.	திரு. சோ. உலோகநாதன் குடந்தை	10	87
	மொத்தம்	30	

உ. அன்பளிப்பாக வந்த வகை :

திரு.	அழ. அழகிரிசாமி ஈப்போ(மலையம்) (2-ஆம் முறையாக)	100
,,	தமிழ் வளவன் செல்லம்பட்டு	3
,,	அ. கா. அரசிளங்கோவன் சென்னை-எ. (அவர் வழி) பெ. செல்லமுத்து, அரசிளங்கோவன், முத்துவீரபாண்டியன், ம. பெரியசாமி, கே. துரைசாமி, நித்தியானந்தன், மலையப்பன், ஞானதுரை, வி. பாண்டியன், நெடுஞ்செழியன், செங்கோடன், நாகரத்தினம். (தலைக்கு ஓர் உருபாமேனி)	12
,,	ஆ. நேசமணி நாகர்கோவில்	10
,,	த. ஆரோக்கிய அரசு புதுவை	1
,,	மா முத்துசாமி சாத்தனூர்	5
,,	ந. முத்துக்குமரன் பல்லடம்	1
,,	ப. காளிமுத்து, மதுரை	1
,,	ஒ. மு. கி. அருணாசலம் காஞ்சிபுரம்	5
,,	(அவர் வழி) சி. கெங்கன்	5

,,	மனசை. ப. கீரன் சென்னை-௩அ	
	(அவரும், அவர் நண்பர்களும்)	5
,,	தி. முருகேசன் விளாத்திகுளம்	1
,,	கூத்தரசன் பரோடா	5
,,	இரா. பொன்னம்பலம் வீரவநல்லூர்	1
,,	வைரி. தரளம் செல்லம்பட்டு	5
,,	துரை. கலியபெருமாள் காட்டுக்கூடலூர்	2
,,	அ. காளியப்பன் இராக்கியாபாளையம்	1
	(அவர் வழி) வே. சே. தாமசு	
	இரா. அவிநாசி, கெ கருணைம்பாள்	
	(தலைக்கு ஓர் உருபாமேனி	3
,,	மு தண்டபாணி பட்டுக்கோட்டை	1
,,	முகவை ஆடல்வல்லான் சென்னை-௨௪	1
,,	க. மு. செகந்நாதன் புதுவை	1
,,	ப. கு. சுப்பையன் நம்பியூர் (அவர்வழி)	
	கு. க. ஆய்யாசாமி நம்பியூர்	5
	சைமன் நம்பியூர்	5
	கி. கந்தசாமி பு.புளியம்பட்டி	2
,,	அ. பிரகாசன் மூ. கர்பளியப்பட்டி	2
,,	கோ. சொ. செயபால்	
	தெற்குப்பொய்கைநல்லூர்	5
	திரு ஈடாணைத் தென்மொழிக் கழகம்	
	பாண்டுகுடி	10
,,	செ. அசுமல்லா மாதவக்குறிச்சி	1
,,	பு. அ சுப்பிரமணியன் புதுக்கோட்டை	10
,,	வெ. சோமு சென்னை-௫௭	5
,,	மா. ச. சிவராமன் வானக்கண்காடு	1
,,	ச. சண்முகம் கீரமங்கலம்	1
	கல்லூர் கொ பெ செல்லையா	16-12
	கல்லூர் கொ சி செல்லையா	16-12
	கல்லூர் அ புதுமைப்பிரியன்	16-12
	கல்லூர் மணியம்	16-12
	கல்லூர் பெ அரசு	16-12
	கல்லூர் அரு வீரப்பன்	3-22
	கல்லூர் அ. சாத்தப்பன்	3-22
	அருச்சுனன்	6-44
	சுப்பையா	6-44
	கல்லூர் மூ சா. சுப்பையா	6-44
	செல்வி கா. கமலா	3-22
,,	நாரா. மகிழ்நன் திருச்சி-௧௭	
	(அவர்வழி தலைக்கு ஓர் உருபா மேனி,	
,,	ப. அன்பழகன், பூ பரசுராமன்	

ஐ. அஞ்சான், நா. நேதாசிபோசன்,
ச. ஆறுமுகம், வீ பாலக்கிருட்டிணன்,
நா. நித்தியானந்தம், ச. சண்முகம்,
சுந்தரம் 10
,, முத்தமிழன் சிங்கப்பூர்-ந. 5
,, மு. கந்தசாமி திருப்பனந்தாள்
(அவர் வழி ட உருபா மேனி)
மு. கந்தசாமி, மா. கோவிந்தன்
இரா. தமிழரசு, பு. கும்பேசுவரன்,
செ பெ. நடராசன், இரா சத்திவேல் 12
(தலைக்கு ஓர் உருபாமேனி)
அரங்க நடேசன் கோ. இராமலிங்கம்
சு. இலக்குமணன், அ. பாலசுப்பிர
மணியன், இரா கருவேலன், இரா சண்
முகவேல்சாமி க அருணசலம், வே.சுப்
பிரமணியம், ந. கிருட்டிணமூர்த்தி,
ச. பத்மநாபன், ஆ. இராமச்சந்திரன்,
வெ. இரா. துரைசாமி, இரா. பன்னீர்ச்
செல்வம், நா.பாசுகரன், வை.முருகேசன்,
பொன். சுடலைமான், இ இராமதாசு,
இரா.கனகரத்தினம், கு.ச நடராசன்,
ப எட்டியப்பன். க.சுப்பிரமணியன்,
சி.இராசேந்திரன், கெ.இராமமூர்த்தி,
அ.புருடோத்தமன், அ.கண்ணையன்,
பழ சுப்பிரமணியர், து வேங்கடரமணன்,
பொ தங்கராசு, சா. முருகானந்தம்,
நச்சினார்க்கினியன். வெ. சண்முகசுந்
தரம், மு.பெரியசாமி, அ பாலசுப்பிர
மணியர். பொ செங்கோடன். இரா.துரை
சாமி, இரா சுவி பழனிச்சாமி, கு மு கங்
காதரன், சி ஐய்யாதுரை, சு. த தியாக
ராசன், கோ. துரைசாமி, மா இராமலிங்
கம், ஆ. துரை, பா. முனியமுத்து,
ந கிருட்டிணபிள்ளை, வீ. மாடசாமி,
வ. சயராமன், கா.சோ.பெரியசாமி,
இராம குழந்தை செ கோவிந்தசாமி,
இரா. பாலசுப்பிரமணியம், இராசு
இரா கோவிந்தராசன், அ தியாகராசன்
அருண சடேசன், உலூர்து, கமலாம்
பாள், முத்துலக்குமி, விஞ்ஞானம்,
ஞானசெல்வம், பிரான்சீச்கான் 60

பிறர் வகையில் ஓர் உருபா
பணவிடைக்கழிவு போக 3
,, தொண்டி இரா. பழனிச்சாமி
(தமிழாசிரியர்) அவர்வழி-ஆசிரியர்கள்
கா. சுப்பிரமணியன் 3
சி பால் 2
இரெ. பொன்னுச்சாமி 1-08
தொண்டி அரசினர்இல்ல மாணவர்கள் 2-10
(தனியார்)
அ. மரிய இராசேந்திரன் (நூலகர்)
பி. பி கிருட்டிணன் பாண்டுக்குடி
வ. தமிழ்வாணன், வேலுச்சாமி நம்புதாளை
பெரி. பொன்னையா, நம்புதாளை.
கருப்பையா நம்புதாளை, கோவிந்தராசன்,
நம்புதாளை (ஓர் உருபா மேனி) 7
இராமதாசன், நம்புதாளை. 1-01
சே. தாசன், காரங்காடு. 1-07
ஆறு அரங்கராசன் 1-55
காசி, நம்புதாளை -50
கா. மி. சு. அப்துல் சமது -50
(மாணவர்கள்)
சு. செபசுதியான் 1-50
ச டாலுச்சாமி 1-25
மு. அப்துல் மத்தீன் 1-10
து. சோமசுந்தரம் 1-01
செ. மின்னுத்துல்லா 1-01
கு. இராசநாயகம் 1-10
த.செகதீசன், அப்துல்ரஊப், செ.சுபாசு
சந்திரபோசு, செ.மு. அசமல்உசைன்,
செ.சீனிவாசன், கா.அப்துல்இரசாக்கு,
சு.பால்ராசு, சே மகரூபுல்கார்க்கி,
குப்பப்பிச்சை, ம பழநிவேலு, சபருல்லா,
மு வேலு, ஆ துல்கருணை 13
(ஓர் உருபா மேனி)
நாகேந்திரன், இ சலீல், மு.மகரூப்,
மு சமால் திருநாகசுந்தரம், காசா, கவிகு
சமான், தாசன், சுவக்கீன், இரா. அரத்
தினம், பாத்திமா, பெ கிருட்டிணன்,
கா.மகாலிங்கம், ச பொன்னம்பலம், வீர
சோமு, அ.மாரி. அ.பி செல்வராசு,
மா. காமாட்சி, சசேசு 9-50
(தலைக்கு 50 காசு மேனி)

கா. மாணிக்கம் -58
கு. தொண்டிராசு -58
ஆ. மா முத்து -56
கா. கணேசன் -56
சா. ரா சந்திரன் -55
சேதுராமன் -55
,, நா. இராசவேலு, சென்னை-எ 2
,, பெ. இளவரசு, கீழ்ச்சிவல்பட்டி 2
திருவாட்டி, கோ. சரோசா, மதுரை-கரு 2
மேலைச்சிவபுரி, கணேசர்செந்தமிழ்க்கல்லூரியில் உள்ள சில தமிழ்நெஞ்சங்கள் ச.மு.சி.சின்னத்தம்பி, வெ.இளம்பெருவழுதி அவர்கள் வழி (முதல் முறை) 15
திரு. பூ. நடராசன், சென்னை கச 5
அவர் வழி பூங்காவனம் 5
கு.சீனிவாசன், செயராம், நா.மாசிலாமணி, சு வரதன், செந்தூர்பாண்டியன் மு.மணியன், தவசிப்பெருமாள், பத்மநாபன். செயபாண்டியன், ந.தேவன் 10
,, செ.பழநியப்பன், பொறியியற் கல்லூரி கோவை - அவர்வழி பொறியியற கல்லூரி மாணவர்கள் அளித்த நன்கொடை 49-25
பெங்களூர்இந்துத்தான் வான் ஊர்தித் தொழிற்கூட நண்பர்கள் கோ.மு.வேல் 3
து ந.இராசகோபாலன், சு மனோ, எசு. எசு.இராசன், மெ கி உருக்குமாங்கதன், அ.துரைராசன், உதயகுமார், அரங்கநாதன். வேணுகோபாலன், குணசேகரன், மு செல்வராசன். கோ பாப்பு, திரியேகம், மு கோவிந்தராசன், முடியப்பன், ஆர் வாசுதேவன். ம கோ.இசைக்கிமுத்து, எசு. சி. துரைராசு.
(தலைக்கு உ உருபா மேனி) 34
பி.எம் செல்வராசன், இப்ராகிம்சா, மதலைமணி ஈசுவரன், கோ. நாமதேவன், மா. நல்லபெருமாள், க விசுவாசம், எம். இராமச்சந்திரன், ஆர். வி. நாதன், மு. ஞானசேகரன் (ஓர்உருபா மேனி) 10
பி என். சந்திரசேகரன் -50
இரா. சோதிவாணன், சென்னை-௨0 1

மொத்தம் 606-99

இதில், தொண்டி இரா. பழனிச்சாமி வகைப் பணவிடைக் கழிவு	-90
இந்துத்தான் வானூர்தித்தொழிற்கூட நண்பர்கள் வகைப் பணவிடைக் கழிவு	-90
மீதி	605-19

இப்பட்டியலில் வந்த தொகைவிளக்கம் :

க. கடன் வகை	30-00
உ. அன்பளிப்பு வகை	605-19
மொத்தம்	635-19
முன் மொத்தம்	3742-75
தொகு மொத்தம்	4377-94

(தொடரும்)

'தென்மொழி' தாளிகையின் உரிமை அறிக்கை.

(நடுவணரசு செய்தித்தாள் பதிவுச்சட்டம் 1956, 4-ஆம் வகுப்பு, 8-ஆம் கட்டளைப்படி.)

1. வெளியிடும் இடம் : கடலூர்-1
2. வெளியிடும் கால முறை : திங்கள் ஒரு முறை
3. அச்சகத்தார் பெயர், இனம், முகவரி : ப. சு. கிருட்டிணமூர்த்தி, தமிழர், மித்திரா அச்சகம், கடலூர்-1
4. வெளியிடுவார் பெயர் : திருவாட்டி. மா. கமலம் (தாமரை) திருவாட்டி. ப. செகதீசுவரி (உலகமுதல்வி)
   இனம் : தமிழர்
   முகவரி : 14 இ, புதுவைச்சாலை, கடலூர்-1
5. ஆசிரியர் பெயர், இனம், முகவரி : பெருஞ்சித்திரன், தமிழர், 14 இ, புதுவைச்சாலை, கடலூர்-1
6. ஒரு விழுக்காட்டிற்கு மேல் முதலீடு செய்துள்ள, தாளிகை உரிமையாளர், கூட்டாளர் இவர் தம் பெயர்களும், முகவரிகளும். : திருவாட்டி. மா. கமலம் (தாமரை) திருவாட்டி. ப. செகதீசுவரி [உலகமுதல்வி]

தாமரை, உலக முதல்வி யாகிய நாங்கள் இவ்வுறுதிவழி மேலே காணப்பெறும் விளக்கங்கள் யாவும் நாங்களறிந்த வரை முற்றிலும் உண்மையென முடிவாக அறிவிக்கின்றோம்.

பங்குனி-க.
14-3-66.

தாமரை, உலக முதல்வி.
வெளியிடுவார் கையொப்பம்,

தமிழர்களின் கைவேல்!

தமிழ் நாட்டின்விடுதலை முரசம்!

தமிழர்களுக்குக் கிடைத்த உரிமைப் பட்டயம்!

தமிழ் நாட்டில் இயங்கும் ஒரே தனித்தமிழ்த் தாளிகை!

தென்மொழி

தென்மொழி என்றும் தன் கடமையை ஆற்ற வேண்டாமா? புல்லர்தம் பொய்மைச் சூறுவளிக் கிடையிலும் தமிழ்ப் பகைவர்களின் புரட்டுப் பேச்சுகளுக் கிடையிலும், தென்மொழி தயங்காது பாடாற்ற அதன் **அச்சக அமைப்புக்கு உதவுங்கள்.**

கடனாகவும், நன்கொடையாகவும், தங்கள் அன்பான, மேலான உதவியை இன்றே அனுப்பி உதவுங்கள்.

தென்மொழி,
கடலூர்-1.

மித்திரா அச்சகம் கடலூர்-1